24 Years
கனடாவின் மூத்த தமிழ் இதழ்
விளம்பரம் ™
VLAMBARAM ™
416-282-8059
E-mail: vlambaram@sympatico.ca
Web: www.vlambaram.com/www.tamilvanakkam.com
416-282-4978

RBC Insurance
இளமையோ முதுமையோ காப்புறுதி ஒரு வழமை
உங்கள் அனைத்து காப்புறுதி தேவைகளிற்கும் கலந்து ஆலோசிக்க அழையுங்கள்
Jey Ahamparam P.F.P
Insurance Advisor
RBC காப்புறுதியில் விஷேடத்துவம் பெற்றவர்
(Specialized in RBC Insurance)
அத்துடன் உங்கள் வீட்டு வாகன காப்புறுதிகளிற்கும் (Home & Auto) உதவி வழங்கப்படும்.
Call: 416.301.1733

REALTY STUDIO
சென்னை, கொடைக்கானல் மற்றும் அதன் சுற்றுப் பகுதிகளில் நிலம், மனை, வீடு, விற்க, வாங்குவதற்கான தொடர்புகளுக்கு
416.315.9397
realtystudio24@gmail.com

நதி 24 | பாலம் 02 | சமூக முன்னேற்றப்பத்திரிகை | மாதமிருமுறை | இலவசம் | JANUARY 15, 2014

# ஐ.நா. மனித உரிமை சபையில் அமெரிக்காவின் 3ஆவது தீர்மானம்

இலங்கையில் 2009 ஆம் ஆண்டு நடைபெற்ற போரில் 40 ஆயிரத்திற்கு மேற்பட்டோர் பலியானது பற்றி சர்வதேச விசாரணை நடைபெறவேண்டும் என பல்வேறு அமைப்புக்கள் கூறிவருகின்றன. முறையான, வெளிப்படையான விசாரணைகளை இலங்கை அரசு மேற்கொள்ளவேண்டும் என ஐ.நா. மனித உரிமை சபையில் அமெரிக்கா சார்பில் இரண்டு முறை தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. எதிர்வரும் மார்ச் மாதம் ஐ.நா. மனித உரிமை சபையின் 25 ஆவது கூட்டத்தொடர் நடைபெற இருக்கும் வேளையில், அமெரிக்காவிற்கான சர்வதேச குற்றவியல் நீதித்துறை தூதர் ஸ்டீபன் ஜே. ராப் (Stephen J. Rapp) ஒரு வாரகால பயணத்தை இலங்கையில் ஜனவரி 2014 இன் முற்பகுதியில் மேற்கொண்டார். அவர் அதில் 2 நாட்களை வடக்கில் செலவிட்டார். அவருடன் இலங்கைக்கான அமெரிக்க தூதுவர் மிசேல் ஜே. சிசன் (Michele. J. Sison) உம் சென்றார்.



Amb Sison and Amb Rapp visit Uthayan newspaper in Jaffna, express concern fo media freedom in srilanka

இவ் விஜயத்தின் போது இவர்கள் போரில் தமிழர் கொல்லப்பட்ட பல இடங்களுக்கு சென்றார்கள். அதன் பின்னர் இறுதிக்கட்ட போரின் போது தமிழர் கொலை செய்யப்பட்ட இடங்களின் படங்களை இலங்கை அமெரிக்க தூதரகம் தனது "டுவிட்டர்" பக்கத்தில் வெளியிட்டது. அதில் ஒரு படத்திற்கு 'இலங்கை இராணுவ குண்டு வீச்சால் நூற்றுக்கணக்கான குடும்பங்கள் கொல்லப்பட்ட சென்ற். அந்தோனி மைதானம்' என்று விளக்கம் கொடுக்கப்பட்டுள்ளது. இன்னொரு படத்திற்கு "புதுக்குடியிருப்பில் ஐ.நா. தலைமையகம் இருந்த No Fire Zone" என விளக்கம் கொடுக்கப்பட்டுள்ளது.




இலங்கை அரசுக்கு எதிராக மார்ச் மாதம் ஐ.நா. மனித உரிமை சபையில் 3 ஆவது தீர்மானத்தை அமெரிக்கா கொண்டு வர உள்ளதாக ஸ்டீபன் ராப் ஊடகவியலாளர்களுக்கு அங்கு தெரிவித்தார். இதில் இருந்து 2012 மற்றும் 2013 ஆம் ஆண்டுகளில் ஐ.நா. மனித உரிமை சபையில் கொண்டு வரப்பட்டு நிறைவேற்றப்பட்ட தீர்மானங்களுக்கு அமைய இலங்கை தனது கடமைகளை திருப்திகரமாக செய்யவில்லை என அமெரிக்கா தனது நிலைப்பாட்டை ஏற்கனவே எடுத்துவிட்டது எனத் தெரிகிறது என ஊடகவியலாளர்கள் தெரிவித்துள்ளனார்.

மார்ச் மாதத்தில் ஜெனீவாவில் நடைபெற உள்ள மனித உரிமை சபையின் 23ஆவது கூட்டத்தொடரில் இலங்கைக்கு எதிராக சர்வதேச போர்க் குற்ற விசாரணை நடத்தக் கோரும் தீர்மானத்தை அமெரிக்கா முன்வைக்கும் என எதிர்பார்க்கப்படுவதாக ஊடகவியலாளர்கள் தெரிவித்துள்ளனர்.

முதல் முறையாக 2012 ஆம் ஆண்டு மார்ச் மாதம் ஜெனீவாவில் இலங்கைக்கு எதிராக அமெரிக்கா தீர்மானம் கொண்டுவர முன்னரும் ஸ்டீபன் ஜே. ராப் இலங்கை பயணத்தை மேற்கொண்டிருந்தார் என்பது இங்கு குறிப்பிடத்தக்கது. அமெரிக்கா இலங்கை மீது சர்வதேச போர்க்குற்ற விசாரணை நடந்தக் கோரும் தீர்மானத்தை ஐ.நா. மனித உரிமை சபையில் கொண்டு வந்து நிறைவேற்றினாலும் அது எந்தளவுக்கு சாத்தியமாக இருக்கும் என்பது கேள்விக்குறியாகவே உள்ளது. மனித உரிமை சபையில் நிறைவேற்றப்படும் தீர்மானம் ஒரு சட்ட வலுவற்ற தீர்மானம். இலங்கை அரசு அதற்கு கீழ்படிய வேண்டிய கட்டாயம் எதுவுமில்லை.

ஒரு வலுவான தீர்மானம் வேண்டும் என்றால், இலங்கை மீது சர்வதேச போர்க்குற்ற விசாரணை நடக்கவேண்டும் என ஐ.நா. பாதுக்காப்பு சபை தீர்மானம் கொண்டு வரவேண்டும். ஐ.நா. பாதுகாப்பு சபையில் சீனாவையும்,

தொடர்ச்சி 02ஆம் பக்கம்

Raj A. Rasaratnam
Cell: 416-726-8055
Bus: 416-321-6969
HomeLife/GTA Realty Inc

Brand new - Leasing - Used
வாகனம் வாங்குவதில் 10 வருடம் அனுபவம்
வாய்ந்த என்னை முதலில் அழையுங்கள்
416.451.0565
குமார் ஜெகசோதி
TOYOTA MARKVILLE
905.294.8100

வீடு வாங்கவும் விற்கவும்...
ரவி பரமு
Real Estate Broker
Cell: 416-262-4176
Bus: 416-298-3200
HomeLife/Today Realty Ltd.,
Brokerage*
31 Progress Ave. Suite 210, Toronto
*Independently owned and operated

MORTGAGE
Best Rates wih Major Banks/Companies
Pasky Kanagasabapathy
Cell: 416 569 3099
Mortgage Agent #M12001098
Fax: 416-291 3601
pkanagasabapathy@orianafinancial.com
• Residential/Commercial needs
• Purchase/Refinancing/Renewal/Switch
• Bankruptcy/Challenged/Bad/New/no credit Business/Private loans
• Debt consolidation/Line of credit Self employed/ New Immigrants/Non Resident
Oriana Financial Group of Canada Ltd. Company#10214

துரித பணமாற்றுச் சேவை
• 56 ஆண்டுகள் வர்த்தகத்துறையில் முன்னோடிகள்
• கனடாவில் தொடர்ந்து 23 ஆண்டு சேவை
• தந்தையுடன் மைந்தர்களும் இணைந்த சேவை
மு. காசிப்பிள்ளை சக புத்திரர்கள்
MONEY TRANSFER
3228 Eglinton Ave. E. #3
416.267.8221
3351 Markham Rd. #109
416.321.8221

THE TRUSTED MORTGAGE SPECIALISTS
"I Work for you Not for the Bank"
BonaFide
Some Terms & Conditions May Apply
•I will arange your 1st Mortgage with 5% down.
•Need a 2nd Mortgage??? "When banks says no We says yes" @ interest rate of 1% per month.
Thayalan Goblakrishnan
(M12001612)
தயாளன் கோபாலகிருஷ்ணன்
Contact: 416.575.3211
E-Mail: thaya.gobal@gmail.com

# ஐ.நா......

01ஆம் பக்கத்தொடர்ச்சி

ரஷ்யாவையும் மீறி இலங்கைக்கு எதிராக அமெரிக்காவால் எத்தகைய தீர்மானத்தை கொண்டு வந்து நிறைவேற்றமுடியும் என்பது கேள்விக்குரிய விடயம்.

BBC ஊடகவியலாளர் Charles Haviland தெரிவிக்கையில், தனக்கு கிடைத்த தகவல்களின்படி அமெரிக்க அரசின் உத்தியோகபூர்வமான நிலைப்பாட்டையே அவர்கள் வெளியிட்டுள்ள படங்கள் எடுத்துக்காட்டுகின்றன என்றார். அமெரிக்க தூதரகம் வெளியிட்டுள்ள 3ஆவது படத்தில் அவர்கள் உதயன் அலுவலகத்தில் இருப்பது, "தூதுவர்கள் உதயன் பத்திரிகை



Amb Rapp and Amb Sison meet NPC member Ananthi Sasitharan to discuss plight of disappeared in srilanka

அமெரிக்கத்தூதரகம் தனது "டுவிட்டரில்" வெளியிட்ட படங்கள் தொடர்பாக இலங்கை அரசாங்கம் தனது அதிருப்தியை வெளியிட்டுள்ளது. இலங்கை பாதுகாப்பு அமைச்சு ஜனவரி 10, 2014 இல் வெளியிட்ட அறிக்கை ஒன்றில் அமெரிக்க அரசின் குற்றச்சாட்டுக்களை ஆதாரமற்றவை என்றும் அவை இலங்கை இராணுவத்தின் மீதான வீண் பழிசுமத்தல் என்றும் கூறியுள்ளது.

பாதுகாப்பு அமைச்சு மேலும் தனது அறிக்கையில் தனிநாடு கோரும் தமிழர்களின் கோரிக்கையான சர்வதேச போர்க்குற்ற விசாரணையை ஆதரிக்கும் நோக்கத்துடனேயே அமெரிக்க தூதரக அதிகாரிகள் மேற்கூறிய விளக்கங்களுடன் அந்த படங்களை வெளியிட்டுள்ளார்கள் என மிகவும் காரசாரமாக (Indignant) தெரிவித்துள்ளார்கள்.

அலுவலகத்தில் ஊடகவியலாளர்களின் சுதந்திரம் பற்றி தமது கரிசனையை தெரிவிக்கிறார்கள்" என்ற விளக்கத்துடன் வெளியாகியிருந்தது. நான்காவது படத்தில் தூதுவர்கள் வடமாகாணசபை உறுப்பினர் ஆனந்தி சசிதரன் உடன் நிற்பது "தூதுவர்கள் வடமாகாணசபை உறுப்பினர் ஆனந்தி சசிதரனிடம் காணாமல் போனவர்களின் நிலை பற்றி விசாரிக்கின்றார்கள்" என்ற விளக்கத்துடன் வெளியிடப்பட்டிருந்தது.

இலங்கை அரசின் ஆதரவாளர்கள் ஜனவரி 09, 2014 இல் அமெரிக்க தூதரகத்திற்கு முன்னால் திரண்டு அதிருப்தி தெரிவித்தார்கள். அவர்கள் அமெரிக்கா தனது சொந்த மனித உரிமை மீறல்களை முதலில் விசாரிக்க வேண்டும் என பதாதைகளை வைத்திருந்தார்கள்.






# இலங்கையில் பல்வேறு இடங்களில் இடம்பெற்ற பொங்கல் நிகழ்வு

யாழ். பல்கலைக்கழகத்தில் ஜனவரி 14, 2014 இல் தமிழர் திருநாளாம் தைத்திருநாள் வெகுவிமர்ச்சையாக கொண்டாடப்பட்டது. பல்கலைக்கழக பிரதான வாயிலில் சிவப்பு



மஞ்சள் கொடிகளால் அலங்கரிக்கப்பட்டு, மாணவர்கள் பாரம்பரிய முறைப்படி வெடிகள் கொழுத்தி கொண்டாடினர். கலைப்பீட மாணவர் ஒன்றியத்தின் ஏற்பாட்டில் இடம்பெற்ற இந்நிகழ்வில் பேராசிரியர்கள், விரிவுரையாளர்கள் மாணவர்கள் என பலரும் கலந்து கொண்டனர். வடக்கு மாகாணசபையின் முதலாது தமிழ் தைப்பொங்கல்!

வடக்கு மாகாணசபையின் முதலாது தமிழ் தைப்பொங்கல் கைதடியிலுள்ள பேரவைக் கட்டிடத்தில் நடைபெற்றது. பேரவை தலைவர் சீ.வி.கே.சிவஞானம் மற்றும் பணியாளர்கள் சகிதம் பொங்கல் நிகழ்வு இடம்பெற்றது. பேரவையின் முகப்பு வாசலில் பொங்கல் பொங்கி பிரார்த்தனையும் இடம்பெற்றது. பிறந்த தைத்திங்களின் பயணம் தமிழர் வாழ்வில் விடியலைக் கொண்டு வரட்டும் என த.தே.கூட்டமைப்பின் பொங்கல் வாழ்த்துச் செய்தி கூறுகிறது.

விளம்பரம்
VLAMBARAM

பதிப்பாளர்: ராஜா மகேந்திரன்
பத்திரிகை ஆசிரியர்: சத்தியா மகேந்திரன்
ஊடகப்பொறுப்பாளர்: விஜய்பாலன்
தட்டச்சு: கலா
அலுவலக முகாமையாளர்: நிலானி
பதிப்பு: Can Media Publishing Inc.

Vlambaram Publications Inc.
GTA SQUARE, 5215 FINCH AVE. E.,
#201, TORONTO, ON M1S 0C2, CANADA
TEL: 416-282-8059 FAX: 416-282-4978
e-mail: Vlambaram@sympatico.ca
Web: www.vlambaram.com/www. tamilvanakkam.com

விளம்பரம் பத்திரிகை 'விளம்பரம் பப்ளிக்கேஷன்ஸ் இங்' ஆல் வெளியிடப்படுகிறது. விளம்பரத்தில் வெளியாகும் ஆக்கங்களுக்கு எழுத்தாளர்களே பொறுப்பாளர்கள். பதிப்புரிமை: 2004 விளம்பரம் பப்ளிகேஷன்ஸ் இங். விளம்பரத்தில் வெளியாகும் ஆக்கங்களை முழுமையாகவோ, பகுதியாகவோ ஆசிரியரின் எழுத்து மூல அனுமதியின்றி மறுபிரசுரம் செய்தலாகாது.

## வாசகர் எண்ணங்கள்

விளம்பரம்™ ஐ வாசிப்பவர்கள் தங்கள் எண்ணக்கருவை தெரியப்படுத்துமாறு கேட்டுக் கொள்கின்றோம். ஆக்கபூர்வமான உங்கள் கருத்தை இப்பகுதியில் வெளியிடுவோம். உங்கள் அபிப்பிராயங்களைக் கடிதம் மூலம், தொலைநகல் மூலம் அல்லது மின்னஞ்சல் மூலம் அனுப்புமாறு கேட்டுக்கொள்கிறோம்.

1. Vlambaram Publications Inc. , 5215 Finch Ave. E. #201, Toronto, ON M1S 0C2
2. Tel.: 416.282.8059
3. Fax: 416.282.4978
4. email: vlambaram@sympatico.ca
5. web: www.vlambaram.com www.tamilvanakkam.com

# இலங்கையின் தலைவலியை கடுமையாக்கியுள்ள ஸ்டீபன் ஜே. ராப்!

அமெரிக்க ராஜாங்கத் திணைக்களத்தின் பூகோள குற்றவியல் நீதிக்கான பணியகத்தில் போர்க்குற்ற விவகாரங்களைக் கையாளும் தூதுவர் ஸ்டீபன் ஜே. ராப் இலங்கைக்கு மேற்கொண்ட விஜயம் இலங்கை அரசிற்கு மிகுந்த நெருக்கடியைக் கொடுத்துள்ளது. எதிர்வரும் மார்ச் மாதத்திற்கு இன்னமும் இரண்டு மாதங்களே உள்ள நிலையில், இலங்கை அரசிற்கு தலைவலி அதிகரித்து வருகின்றது. இதில், அமெரிக்கத் தூதுவரின் வருகை இத்தலை-வலியை மேலும் கடுமையாக்கி விட்டுள்ளது. ஐ.நா அதிகாரி நவநீதம்பிள்ளை, பொதுநலவாய மாநாட்டை முன்னிட்டு வருகை தந்த பிரிட்டிஸ் பிரதமர் டேவிற் கமரோன் ஆகியோருக்கு அடுத்ததாக அதிக பதற்றத்தை இலங்கைக்கு ஏற்படுத்தி யிருப்பவர் மேற்படி அமெரிக்க போர்க் குற்றவியல் பணியகத்தின் அதிகாரிதான்.

தூதுவர் ஸ்டீபன் ஜே. ராப் கடந்த 06-01-2014 அன்று இலங்கைக்கு வருகை தந்தார். 08-01-2014 வடபகுதிக்கு சென்றார். யாழ்ப்பாணத்தில் தமிழ் தேசியக் கூட்டமைப்பினர், ஆயர்கள் மற்றும், சிவில் சமூகத்தினரையும் சந்தித்தார். யாழ். மறைமாவட்ட ஆயர் தோமஸ் சௌந்தரந-ாயகம் மற்றும் மன்னார் மறைமாவட்ட ஆயர் இராயப்பு ஜோசப் ஆண்டகைகளை சந்தித்து கலந்துரையாடிய போது, ஆயர்களால் தூதுவரிடம் பல விடயங்கள் முன் வைக்கப்பட்டன. போர் முடிவிற்கு வந்ததன் பின்னர் தமிழ் மக்களின் பிரச்சினைகளுக்கு அரசாங்கத்தால் தீர்வு வழக்கப்படும் என எதிர்பார்த்தோம், ஆனால் அது நடக்கவில்லை. மாறாக, மக்களின் காணிகள் அபகரிக்கப்படுகின்றமை, திட்டமிட்ட குடியேற்றங்கள் மேற்கொள்ளப்பட்டு தமிழ் மக்களின் பிரதிநித்துவம் குறைக்கப்படும் நடவடிக்கைகள் போன்றனவே நடைபெறு கின்றன என அவர்கள் தூதுவரிடம் குறிப்பிட்டனர். அதிகரித்த இராணுவப் பிரசன்னம் உட்பட பல்வேறு விடயங்கள் ஆயர்களால் தூதுவரிடம் எடுத்துரைக்கப் பட்டன. இறுதிக்கட்டப் போரில் படையினரால் பயன்படுத்தப்பட்ட தடைசெய்யப்பட்ட இரசாயன ஆயுதங்கள் குறித்தும் மன்னார் ஆயர் இராயப்பு ஜோசப் ஆண்டகை தூதுவரிடம் சுட்டிக்காட்டினார்.

தமிழ் தேசிய கூட்டமைப்பினரும் பல்வேறு விடயங்களை தூதுவரிடம் விளக்கினர். வடக்கின் அதிகரித்த இராணுவப் பிரசன்னம், முழுவதுமான சிவில் நிர்வாகத்தை ஏற்படுத்து வதற்கான அவசியம். காணாமற் போனோர் குறித்த விடயம் மற்றும், தமிழ் மக்களின் காணிகள் அபகரிக்கப்படுகின்றமை, வலி. வடக்கில் கடந்த 23 வருடங்களுக்கு முன்னர்

இடம்பெயர்ந்த மக்களில் 7,500 இற்கும் அதிகமான குடும்பங்கள் இதுவரையிலும் மீள் குடியேற்றப்படாமல் அவர்களின் நிலங்கள் அபகரிக்கப்பட்டிருக்கின்றமை முதற்கொண்டு சிறைகளில் வாடும் தமிழ் அரசியல் கைதிக-ளின் விடுதலை தொடர்பாகவும் அவர்கள் எடுத்துரைத்துள்ளனர். மேலும், மன்னாரில் அண்மையில் கண்டுபிடிக்கபட்ட மனிதப் புதைகுழி தொடர்பில் சுயாதீனமான சர்வதேச விசாரணை நடத்தப்பட வேண்டும் என்றும் கூட்டமைப்பினர் தூதுவரிடம் குறிப்பிட்டுள்ள னர். அடுத்ததாக ஸ்டீபன் ஜெ. ராப் கடந்த 09-01-2014 முல்லைத்தீவு மாவட்டத்திற்கு விஜயம் செய்தார். இறுதி யுத்தம் இடம்பெற்ற பகுதிகளைப் பார்வையிட்டார். ‘யுத்த சூனிய வலயம்-2’ அமைக்கப்பட்டிருந்த புதுமாத்த ளன் பாடசாலை, வைத்தியசாலை மற்றும் யுத்த காலத்தில் புதுக்குடியிருப்பில் அமைந் திருந்த ஐ.நா அலுவலகம் ஆகியவற்றிற்கு விஜயம் செய்தார். இலங்கைக்கான அமெரிக்க தூதுவர் மிச்சேல் ஜே. சிசனும் இந்த விஜயத்தில் கலந்து கொண்டிருந்தார்.



Amb Sison and Amb Rapp tour site of former UN Headquarters in the "No Fire Zone" in Puthukkudiyiruppu

இறுதிக்கட்ட யுத்தத்தின் போது அரசாங்கத்தால் அறிவிக்கப்பட்ட குறித்த யுத்த சூன்ய வலயத்தில் அப்போது ஒரு இலட்சம் பொதுமக்கள் அகப்பட்டிருந்ததாக சர்வதேச அமைப்புக்களால் தெரிவிக்கப் பட்டிருந்தது. அரசினால் அறிவிக்கப்பட்ட யுத்த சூனிய வலயத்திற்குள் பாதுகாப்புத் தேடி தஞ்சமடைந்த மக்கள் மீதே எறி-கணைத் தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட் டன. இதில் பெருந்தொகையானோர் கொல்லப்பட்டதுடன் பலர் படுகாய மடைந்தனர். மக்களை அறிவிக்கப்பட்டுள்ள யுத்த சூனிய வலயத்திற்கு செல்லுமாறு அறிவித்து விட்டு அவர்கள் அப்பகுதியை நோக்கி சென்று கொண்டிருக்கையிலேயே அவர்கள் மீது எறிகணை தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டன. இவை தமிழர் தரப்பினாலும் சர்வதேச அமைப்புக்களாலும் பல தடவைகள் கூறப்பட்ட போதும் அவற்றை எல்லாம் படைத்தரப்பும் அரசாங்கமும் மறுத்தே வந்துள்ளது. இறுதி யுத்தம் நடைபெற்று நான்கு வருடங்கள் கடந்து விட்ட நிலையில், இறுதி யுத்தம் இடம்பெற்ற இடங்களில் இருந்த அடையா-ளங்கள் எல்லாமே படையினரால் அழித்தொழிக்கப்பட்டு விட்டன. இதன் பின்னரே சர்வதேச பிரதிநிதிகள் அப்பகுதி களுக்குச் செல்ல அனுமதிக்கப்படுகின்றனர். அவ்வாறானதொரு சூழ்நிலையிலேயே அமெரிக்க இராஜாங்க திணைக்களத்தின் பூகோள குற்றவியல் நீதிக்கான பணியகத்தில் போர்க்குற்ற விவகாரங்களைக் கையாளும் தூதுவர் ஸ்டீபன் ஜே. ராப் அவர்களும் சென்றுள்ளார்.

ஆனாலும் அவர் சார்ந்துள்ள பணிகளின் நிமித்தம் அவரது பார்வை சற்று கூர்மையான தாக இருந்தபடியால் யுத்த சூனிய வலயத்தி லிருந்த வைத்தியசாலை, பாடசாலை போன்ற கட்டடங்களில் அவரது பார்வை துல்லியமாக பதிந்தது. இக்கட்டடங்களின் சுவர்களில் காணப்பட்ட எறிகணையில் உண்டான சிதைவுகள், துப்பாக்கிச் சன்னங்கள் ஏற்படுத்திய துவாரங்கள் யாவும் அவரது பார்வையில் நன்கு பதிந்து விட்டன. அப்பகுதியில் இப்போது வாழும் - அதாவது இறுதி யுத்தத்தில் அகப்பட்டிருந்த பொதுமக்களின் அனுபவங்களையும் அவர் கேட்டறிந்து கொண்டார்.

இந்நிலையில், வன்னியில் இரணைப்பாலை சென்.அந்தனிஸ் பாடசாலை மைதானத்தின் மீது 2009 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் இலங்கை இராணுவத்தினர் எறிகணைத் தாக்குதல்களை மேற்கொண்டு நூற்றுக்கணக் கான பொதுமக்களை கொன்று குவித்ததாக அமெரிக்காவின் சமூக வலைத்தளத்தில் புகைப்படத்துடன் செய்தி வெளியாகியமை பெரும் பரபரப்பை ஏற்படுத்தியது. குறித்த புகைப்படத்தில் இலங்கைக்கு வருகை தந்திருந்த அமெரிக்க இராஜாங்க திணைக் களத்தின் பூகோள குற்றவியல் நீதிக்கான பணியகத்தில் போர்க்குற்ற விவகாரங்களைக் கையாளும் தூதுவர் ஸ்டீபன் ஜே. ராப்பும், இலங்கைக்கான அமெரிக்க தூதுவர் மிச்சேல் ஜே. சிசனும் காணப்பட்டனர். இதற்கு கடும் எதிர்ப்பினை இலங்கை அரசாங்கம் வெளிப்படுத்தியது. இது தொடர்பாக இலங்கையிலுள்ள அமெரிக்கத் தூதரகத்தி டம் விளக்கம் கேட்கப் போவதாகவும் தெரிவித்திருந்தது. செய்தியையும் படத்தை

**- விகிர்தன் -**

யும் நீக்குமாறும் கோரிக்கை விடுக்கப்பட்டது. எனினும், இரணைப்பாலை சென்.அந்தனிஸ் பாடசாலை மைதானத்தில் வைத்து எடுக்கப்பட்டு, டுவிட் செய்யப்பட்ட சர்ச்சைக்குரிய படத்தையும் அதன் விளக்கத்தையும் மாற்றப் போவதில்லை என்று இலங்கையிலுள்ள அமெரிக்கத் தூதரகம் அறிவித்துவிட்டது.

இத்தருணத்தில்தான் அமெரிக்க இராஜாங்கத் திணைக்களத்தின் தூதுவர் ஸ்டீபன் ஜே. ராப்பின் இலங்கை விஜயத்திற்கு எதிராக கொழும்பில் ஆர்ப்பாட்டம் ஒன்று நடத்தப்பட்டுள்ளது. கொழும்பிலுள்ள அமெரிக்கத் தூதுவராலயத்திற்கு முன்பாக இந்த ஆர்ப்பாட்டம் நடத்தப்பட்டது. இவ்வேளையில், இன்னொரு புறமாக-இலங்கை அரசு தமக்கான ஆதரவைத் திரட்டும் வகையில் காய் நகர்த்தல்களை மேற்கொண்டு வருகின்றமையினயும் அவதானிக்கலாம். அமெரிக்கத் தூதுவர் இலங்கையிலிருந்த நாட்களில் இலங்கை ஜனாதிபதி பலஸ்தீனம், இஸ்ரேல் முதலான நாடுகளில் விஜயங்களை மேற்கொண்டிருந் தமை இங்கு குறிப்பிடத்தக்கது. அங்கத்துவ நாடுகளுடன் இராஜதந்திர சந்திப்புகளை

தொடர்ச்சி 10ஆம் பக்கம்

APPLEMORE AUTOMOTIVE

உட்புற, வெளிப்புற திருத்த பராமரிப்பு வேலைகளுக்கு என்றும் உங்கள் மத்தியில்

ONTARIO'S DRIVE CLEAN
Accredited Test & Repair Facility

- Detailing
- Motor Shampoo
- Interior Shampoo
- Exterior Wash
- Waxing

- Repairs
- Safety Certification
- Overall Maintenance
- Under Coating
- Rust Proofing

416-285-4998

435 Midwest Road. Unit B5, Scarborough, ON. M1P 3A6



# கோலம் போடுவது எதற்காக?

**கேள்வி:** நம் கலாச்சாரத்தில் வீட்டின் முன், சாணம் தெளித்து கோலம் போடும் வழக்கம் உள்ளது. குறிப்பாக, கடும் பனி பெய்யும் மார்கழி மாதத்தில் இதற்கு அதிக முக்கியத்துவம் கொடுக்கப்படுகிறதே, ஏன்?

**சத்குரு:** கோலம் என்பது அலங்காரத்திற்காகப் போடப்படுவதில்லை. இது ஒருவிதமான வடிவம். படைப்புகள் அத்தனையும் ஒருவிதமான வடிவம்தான். அடிப்படையான வடிவம் முக்கோண வடிவம். இதை யந்திரம் என்றும் சொல்வோம். சரியான முறையில் உருவங்கள் ஒன்றிணைந்தால் அது யந்திரம். யந்திரம் ஒரு குறிப்பிட்ட விதத்தில் செயல்படும். ஆங்கிலத்தில் மெசின் என்று சொல்லப்படும் இயந்திரமும் பலவிதமான உருவங்கள் முறைப்படி ஒன்றிணைந்ததுதான்.

இந்தப் பிரபஞ்சம் கூட சூரியன், சந்திரன், பூமி என்று பலவிதமான உருவங்கள் ஒன்றிணைந்து ஒரு மகத்தான, பிரம்மாண்டமான யந்திரமாக இருக்கிறது. இந்தப் பிரபஞ்சத்தை பார்த்துவிட்டுதான் நாம் பல சிறிய அளவிலான யந்திரங்களை உருவாக்கி உள்ளோம். இந்தச் சூரியன், சந்திரன், இந்தப் பூமி இவற்றைப் பார்த்துத்தான் நாம் கடிகாரங்களையே உருவாக்கினோம். நமது கலாச்சாரத்தைப் பொறுத்த வரையில் கோலத்தையும் ஒரு குறிப்பிட்ட வகையான யந்திரமாகத்தான் உருவாக்கினர். ஆனால் இப்போது இதை ஒரு அலங்கார உருவமாகப் பார்க்கின்றனர்.

Contact: 1 866 424 ISHA (4742)
Email: toronto@ishafoundation.org
Website: www.ishafoundation.org /
**Inner Engineering Program is now online with Sadhguru**:
www.innerengineering.org

நம் உடல் கூட ஒரு யந்திரம் தான். இந்த உடல் என்னும் யந்திரத்தை நுட்பமாக கவனித்தாலே ஒவ்வொரு காலத்திலும், நேரத்திலும், பூமியின் சக்தி சூழ்நிலை எவ்வாறு வேறுபடுகிறது என்பதை உணர முடியும். இந்த மாற்றத்தைக் கவனத்தில் வைத்து குறிப்பிட்ட பலன்கள் பெற குறிப்பிட்ட விதத்திலான யந்திரங்கள் உருவாக்கும் பழக்கம் நம் கலாச்சாரத்தில் இருந்து வந்திருக்கிறது. நமது கலாச்சாரத்தைப் பொறுத்த வரையில் கோலத்தையும் ஒரு குறிப்பிட்ட வகையான யந்திரமாகத்தான் உருவாக்கினர். ஆனால் இப்போது இதை ஒரு அலங்கார உருவமாகப் பார்க்கின்றனர். பல நேரங்களில் தகர உருளையில் கோலப்பொடியை போட்டு உருட்டுகின்றனர் அதிலிருந்து ஏதோ ஒரு வடிவம் வருகிறது. ஆனால் கோலம் போடுவதற்கென்று ஒரு முறை இருக்கிறது.

புத்த மடாலயங்களில் ஒரு கோலத்தை 10 பேர் காலையிலிருந்து மாலை வரை போடுவார்கள். தொடர்ந்து 3, 4 மாதங்கள் வரை அந்தக் கோலத்தை வரைவார்கள். அவ்வளவு விரிவான ஏற்பாடுகளோடு அந்த கோலத்தைப் போடுவார்கள். ஒரு கோலம் வடிவத்தைப் பொறுத்தும் அதில்



பயன்படுத்தும் பொருட்களைப் பொறுத்தும் வெவ்வேறு விதங்களில் செயல்படும். தாந்திரீக முறைப்படி பூஜை செய்யும்போது பெரிய கோலங்கள் இடப்படும். கேரளாவில் இதனை நாம் பார்க்க முடியும். எனக்கு 17 வயது இருக்கும். அப்போது இந்தச் சம்பவம் நிகழ்ந்தது. நான் அப்போது மைசூரில் இருந்தேன். பேயைப் பார்க்க வேண்டும் என்கிற ஆர்வம் எனக்குள் எழுந்தது. இத்தேடுதலில் பல நாட்கள் இரவு பகல் பாராமல் பேயைப் பார்ப்பதற்காக பல இடங்களுக்குச் செல்வேன். இதுமாதிரி பேய் தேடுதலில் நான் அலைந்து கொண்டிருந்த சமயத்தில், எனக்கு ஒருவர் அறிமுகமானார். தன் வீட்டில் நிறைய பாட்டில்களைக் காண்பித்து அந்த பாட்டில்களில் பேய்களை பிடித்து வைத்திருப்பதாக அவர் கூறினார். அந்த பாட்டில்கள் பார்ப்பதற்கு காலியாகத்தான் இருந்தன. ஆனால் அவரோ அதில் பேய் இருக்கிறது என்று கூறுவார்.

நானும் தினமும் அவருடைய வீட்டிற்குச் செல்வேன். அவருக்கு தெரியாமல் ஒரு பாட்டிலாவது எடுத்து வந்துவிடலாம் என்று திட்டமிட்டுச் செல்வேன். ஆனால் அவரோ என்னை அந்த பாட்டில்களின் பக்கத்திலேயே நெருங்க விடமாட்டார். அதன்பின் ஒருநாள் புதிது புதிதாய் ஏதோ ஏற்பாடெல்லாம் நடந்து கொண்டிருந்தது. அங்கு ஒரு கோலம் போடப்பட்டது. அந்தக் கோலத்தின் 5 மூலைகளில் 5 முட்டைகள் வைக்கப்பட்டது. ஏதோ செய்துவிட்டு கையைத் தட்டினார், அந்த முட்டைகள் அனைத்தும் உடைந்து சிதறின. நான் அதுவரையில் அப்படி ஒரு காட்சியைக் கண்டதே இல்லை. எனவே அப்போது எனக்கு அது மிகுந்த ஆச்சரியத்தை கொடுத்தது. அந்தக் கோலம் இல்லாது போனால், அந்த மனிதர் கை தட்டிய விதத்திற்கு அந்த முட்டைகளை அவரால் உடைத்திருக்க முடியாது. அந்தக் கோலம் இதற்கு உகந்த ஒரு சூழ்நிலையை உருவாக்கிக் கொடுத்தது.



சத்குரு வாசுதேவ்

எனவே பலவிதமான பலன்களுக்கு பலவிதமான கோலங்களைப் போடமுடியும். அதில் ஒன்று மாட்டு சாணம் தெளித்து அதன்மேல் கோலம் இடுவது. அதற்கு குறிப்பிட்ட விதமான சக்தி இருக்கிறது. மார்கழியில் என்ன விசேடம்? இந்த மாதத்தில்தான் சூரியன் தட்சிணாயணத்திலிருந்து உத்தராயணத்திற்கு நகர்கிறான். அதாவது டிசம்பர் முதல் மே வரை சூரியன் தெற்கிலிருந்து வடக்கிற்கும் ஜுன் மாதத்திலிருந்து நவம்பர் வரை வடக்கிலிருந்து தெற்கு நோக்கியும் நகர்கிறான். சூரியனின் ஓட்டத்தில் இந்த மாற்றம் நிகழும்போது, பூமியினுடைய சக்தி சூழ்நிலையிலும் பல மாற்றங்கள் நிகழ்கின்றன. குறிப்பிட்ட விதத்தில் கோலம் இடுவதன் மூலம் அந்தச் சக்தியை நம் வீட்டிற்குள் கிரகித்துக் கொள்ள முடியும். இதனை நீங்கள் விஞ்ஞானப்பூர்வமாக செய்தால் உங்களுக்கு நிச்சயம் பலன் கிடைக்கும். குறிப்பாக பூமத்திய ரேகையிலிருந்து 32 டிகிரி அட்சரேகையில் (Latitude) பெரிய மாற்றங்கள் நடைபெறுகின்றன. தமிழ்நாடு, ஆந்திரா, கர்நாடகா போன்ற மாநிலங்கள் இந்தப் பரப்பில்தான் உள்ளன. இந்த மாற்றங்கள் நிகழ்கின்றபோது அதனை பயன்படுத்திக் கொள்ள பல கருவிகள் உருவாக்கப்பட்டன. யோக முறைகளிலும் பலவிதமான பயிற்சிகள் வகுக்கப்பட்டுள்ளது. நீங்கள் மஹாபாரதக் கதை கேட்டிருப்பீர்கள். அதில் பீஷ்மர், தன் உடலில் அத்தனை அம்புகள் ஏறியிருந்தாலும் தன் உயிரை உத்தராயணத்தில்தான் துறக்க வேண்டும் என்று விடாமல் பிடித்து வைத்திருந்தது உங்களுக்கு தெரிந்திருக்கும். உத்தராயணத்தில் உடலை நீத்தால் முக்தி கிடைக்கும் என்னும் நம்பிக்கையே இதற்குக் காரணம். எனவே முக்தி நோக்கிலுள்ள மக்களுக்கு மார்கழியில் தொடங்கும் உத்தராயணம் முக்கியமானதாக இருக்கிறது.

எனவே சூரியனின் போக்கில் மாற்றங்கள் நிகழும் போதும், பூமிக்கும் சூரியனுக்குமான தொடர்பில் மாற்றங்கள் ஏற்படும்போதும், தேவையான அறிவு, ஞானம் இருந்தால், அப்போது ஏற்படும் சக்தி சூழ்நிலையை, நமக்கு சாதகமாக பயன்படுத்திக் கொள்ள முடியும். அதில் ஒன்று தான் கோலம் இடுவதும். குறிப்பிட்ட விதத்தில் கோலம் இடுவதன் மூலம் அந்தச் சக்தியை நம் வீட்டிற்குள் கிரகித்துக் கொள்ள முடியும். இதனை நீங்கள் விஞ்ஞானப்பூர்வமாக செய்தால் உங்களுக்கு நிச்சயம் பலன் கிடைக்கும். உங்களுக்கும், உங்கள் வீட்டில் இருப்பவர்களுக்கும், உங்கள் வீட்டு சூழ்நிலைக்கும் நன்மையைக் கொண்டு வர முடியும். இந்த மாதத்தில் அதற்கான வாய்ப்பு மிகத் தீவிரமாக உள்ளது.

**MATH, SCIENCE & ENGLISH TUITION**

Math & Physics taken for all grades from grade 4 to 1st year university. Special classes in advanced functions, calculus and vectors and data management & English from grade 4 to 8.Classes available at **Scarborough & Stouffville Contact: 647.340.9490 / 416.732.2228**



மோட்கேஜ், லைன் ஒப் கிரெடிட், ரீபைனான்ஸ், பவர் ஒப் சேல்,

பாங்க்ரப்சி நிலையில் மோட்கேஜ், 2வது, 3வது மோட்கேஜ், வீட்டை வாடகைக்கு விட

யாரை கேட்பது என்ற கவலையா?

CALL US

அழையுங்கள்



மோட்கேஜ் கிளினிக்







தயா (PK) கந்தையா BAS, ABR, AMP
Principal Broker / President
FSCO Lic # M 08001083
Cell : 416-716-8707

ஜெ (Jey) இராசதுரை MBA, BBA (Hon), AMP
Mortgage Development Manager / Agent
FSCO Lic # M 09001428
Cell : 416-624-4843

சுதேசன் பத்மநாதன் M.Com, B.Com
Mortgage Agent
FSCO Lic # M 12001741
Cell : 647-861-8240

வோக் இன் - சனிக்கிழமை 9.00 - 5.00

CENTUM™
Rapid Mortgages Inc.
LIC # 10156

80 Nashdene Road, Suite # 211
Toronto, ON. M1V 5E4.
416-644-3555

rapid realty inc.

# விளையாட்டுத் தகவல்கள் 354

## புரிந்துணர்வின் தோல்வியா அல்லது தோல்வியின் புரிந்துணர்வா என்பது ஒரு புரியாத புதிரே!




தென் ஆபிரிக்க தொடருக்கு முந்தைய ஏகப்பட்ட சர்ச்சைகள், மூடுமந்திரங்களுக்குப் பிறகு இந்தியாவின் 'அதிமுக்கியமான' தென் ஆபிரிக்கா தொடர் ஓரளவுக்கு சேதமில்லாமலே முடிந்தது. ஆனால் சேதம் இல்லாவிட்டாலும் இந்திய தோல்வியில்தான் அது முடிந்துள்ளது என்பது சில சந்தேகங்களை எழுப்புகிறது. இந்தியா விளையாடிய விதம் பற்றி Record Books இருக்காது. ஒருநாள் தொடரை 2 - 0 என்றும் ரெஸ்ட் தொடரை 1 - 0 என்றும் முழுதும் இழந்துவிட்டு தோல்வியுடனேயே இந்திய அணி திரும்பியுள்ளது என்பதை நாம் மறக்கலாகாது. முதல் ரெஸ்ட் போட்டியில் கடைசி 3 ஓவர்களில் 16 ரன்களை அடிக்க முடியாமல் (?) 2 ஓவர்களை பந்துகளை வெறுமனே வேடிக்கை பார்த்ததில் ஒருவர் ஸ்டெய்ன். இவர் 2வது ரெஸ்டில் 46 ரன்கள் அடிக்கிறார். அதுவும் மேலேறி வந்து ஷாட்களை ஆடுகிறார்!! முதல் இன்னிங்ஸில் நல்ல இந்திய பந்து வீச்சிற்கு எதிராக அபாரமாக ஆடிய பிலாண்டர் 2வது இன்னிங்சில் வெற்றிக்கு ஆடாதது ஏன்? என்ற கேள்வி எழுகிறது. முதல் ரெஸ்ட் போட்டியை வேண்டுமென்றே தென் ஆபிரிக்கா டிரா செய்தபோது அந்த நாட்டு ரசிகர்கள் கோபாவேசத்தை காண்பித்தனர். அதேபோல்தான் 2வது ரெஸ்டில் தோனியின் உத்தி இந்திய பேட்ஸ்மென்கள், பவுலர்கள், ஃபீல்டர்களின் உத்வேகமின்மையும் நமக்கு கேள்விகளை எழுப்புவதாக அமைந்துள்ளது.

ஜெஃப்ரி பாய்காட் கூறுவது போல் தென் ஆப்பிரிக்காவில் இவ்வளவு சொத்தையாக பிட்ச் போடப்பட்டது கிடையாது. பாய்காட் கூறுகிறார், தான் தெ. ஆ. கப்டனாக இருந்தால் பிட்ச் போட்டவரை சாடியிருப்பேன் என்கிறார். இந்தியாவிடம் தென் ஆபிரிக்கா கருணையாக நடந்து கொண்டது என்கிறார் பாய்காட். ஆனால் சந்தேகம் என்னவெனில் பரஸ்பரம் புரிந்துணர்வுடன் இந்த ரெஸ்ட் தொடர் விளையாடப் பட்டுள்ளதோ என்பதே. கோலி வாண்டரர்ஸில் அடித்த முதல் நாள் சதமே சிறந்த சதம். புஜாரா 2வது இன்னிங்ஸில் அடித்த 153 ரன்கள் நல்ல இன்னிங்ஸ்தான். ஆனால் அது கிட்டத்தட்ட இந்திய மட்டைப் பிட்ச் போல் ஆனபிறகு ஆடிக்கொண்டிருந்தார்.

ஆனால் ரஹானேயின் தன்னம்பிக்கை, தைரியம், பொறுமை நிச்சயம் அவரை ஒரு சிறந்த பட்ஸ்மெனாக உருவாக்கும் என்ற நம்பிக்கை ஏற்பட்டுள்ளது.

பழைய பந்தில் ஏகப்பட்ட ஓவர்களை அபத்தமாக வீசி விட்டு தோல்வி கண்டு பிறகு சில தீர்ப்புகளால் தோல்வியுற்றோம்



என்று தோனி கூறுவது யாருக்கு கூறும் சமாதானம் என்பது புரியவில்லை. சந்தர்பங்களும் சூழ்நிலைகளும் இரு அணி விளையாட்டையுமே நியாயப்படுத்தும் என்பது போல் இருந்தாலும், இந்த சந்தர்ப்ப சூழ்நிலையே உருவாக்கப்பட்ட சந்தர்ப்பமோ, சூழ்நிலையோ என்று சந்தேகமாக இருக்கிறது. மொத்தத்தில் இந்திய ரசிகர்களைப் பொறுத்தவரை புரிந்துணர்வின் தோல்வியா அல்லது தோல்வியின் புரிந்துணர்வா என்பது ஒரு புரியாத புதிரே! வீரர்களுக்கும் சேப்டிதான்! இங்கிலாந்திலும் அவுஸ்திரேலியாவிலும் 8-0 என்று உதை வாங்கியும் பெரிய மாற்றங்கள் எதுவும் இந்திய அணியில் நடந்து விடவில்லை. கேட்கலாம் சேவாக், கம்பீர் அணியில் இல்லையே என்று! இவர்கள் அவர்களுக்கு கொடுக்கப்பட்ட சுதந்திரத்தை அளவுக்கு அதிகமான சலுகையாக மாற்ற முயன்றனர். அதனால் இன்று அணிக்கு வெளியே உள்ளனர். மற்றபடி ஒரு தொடருக்கு ஒன்றிரண்டு அரை சதம் அடித்து விட்டு அணியில் தொற்றிக் கொண்டிருக்கலாம்! ஏனெனில் இந்திய அணித் தேர்வுக்குழு ஏதோ ஒரு விதத்தில் செலிபிரிட்டிகளை தொந்தரவு செய்யாது.

ஐசிசிஐ யின் அதிகாரம் ஐசிசியில் உச்சாணிக்கொம்பில் இருக்கும்வரை நாம் இந்திய வெற்றிகள், தோல்விகள் அனைத்தையுமே ஏதோ இயல்பானதாக எடுத்துக்கொள்ள முடிவதில்லை.

## ரசிகர்களை துக்கத்தில் ஆழ்த்திய "கருஞ்சிறுத்தை"

கருஞ்சிறுத்தை என அழைக்கப்பட்ட ஏவோசேபியோவின் மரணம் உலகம் முழுவதிலும் உள்ள ரசிகர்களை துக்கத்தில் ஆழ்த்தியது. கடந்த 1942ம் ஆண்டு ஜனவரி 25ம் திகதி போர்ச்சுக்கல் நாட்டில் பிறந்தவர் ஏவோசேபியோ (Eusébio). 8 வயதாக இருக்கும் போது தந்தை மரணம் அடைந்தார், தொடர்ந்து விரக்தியில் உறைந்தவர் பள்ளிப்படிப்பை கைவிட்டு கால்பந்தாட்ட விளையாட்டில் கவனம் செலுத்தினார். மேலும் தாயின் அரவணைப்பும், அன்பும் சாதிக்க வேண்டும் என்ற எண்ணத்தை மனதுக்குள் விதைத்தது. உள்ளூர் போட்டிகளில் அசத்தி வந்தவருக்கு, தேசிய அளவில் சாதனை படைக்க வாய்ப்பு வந்தது. கால்பந்தாட்ட விளையாட்டில் தன்னை மிஞ்ச யாரும் இல்லை என்று கூறும் அளவுக்கு சிறப்பாக விளையாடினார்.

இன்றளவும் கால்பந்து வரலாற்றில் சகாப்தமாகவே திகழ்கிறார், 1962 ஆம் ஆண்டு ஃபென்ஃபிகா அணி ஐரோப்பிய கால்பந்து கிண்ணத்தை வென்றதில் இவரது பங்களிப்பு மிகப்பெரியது. எக்கால கட்டத்திலும் மிகச்சிறந்த கால்பந்து வீரர்களில் ஒருவர் என்று பரந்துபட்ட அளவில் கருதப்படுவர், தொழில்முறை ரீதியாக விளையாடிய 745 போட்டிகளில் 733 கோல்களை அடித்துள்ளார். போர்ச்சுக்கலுக்காக 64 போட்டிகளில் விளையாடி 41 கோல்களை அடித்தார். குறிப்பாக ஃபென்ஃபிகா அணிக்காக 15 ஆண்டுகள் விளையாடினார். அப்போது அந்த அணி பத்து



முறை சாம்பியன்ஷிப் வெற்றிகளைப் பெற்றது. இவ்வாறு உலகளவில் கால்பந்து விளையாட்டில் ஆளுமை செலுத்திய ஏவோசேபியோ தனது 71 ஆவது வயதில் 5.1.14 அன்று காலமானார். இவரது மரணம் ரசிகர்களை சோகத்தில் ஆழ்த்தியது, இவரது இழப்பு கால்பந்து உலகில் ஈடுசெய்ய முடியாத ஒன்று என ஃபிஃபா அமைப்பின் தலைவர் செப் பிளெட்டர் டிவிட்டரில் தெரிவித்திருந்தார். இலட்சக்கணக்கான ரசிகர்கள் அஞ்சலி செலுத்தும் முகமாக லிஸ்பன் நகரின் லூஸ் விளையாட்டரங்கில் இவரது சடலம் வைக்கப்பட்டு அடக்கம் செய்யப்பட்டது.



எஸ். கணேஷ்

AIR TRAVEL INSURANCE HOTEL CRUISES RESORTS

SKY LAWN TRAVEL

Dir:416-919-8558

Off:416-748-1588

Toronto
7595 Markham Rd, Unit 13
Markham,ON, L3S0B6, CA

Montreal
433, Chabanel W, Suite 111
Montreal QC, H2N2J3, CA

www.skylawntravel.com
Email: info@skylawntravel.com
canada.homes@hotmail.com



Ram Gaur

**கொக்குவில் இந்துக்கல்லூரி பழைய மாணவர் சங்கம் - கனடா**

**"KOKUVIL NIGHT" 2013**

காலம்: Saturday, January 25th, 2014
நேரம்: 6:30 pm
இடம்: Princess Banquet Hall
3330 pharmacy Ave., scarborough
Tickets: $30.00 per person &
$15.00 for children Age 12 - 8years

கொ.இ.க. பழைய மாணவர்கள் அவர்கள் குடும்பத்தினர், நண்பர்கள், விருந்தினர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

தொடர்புகளுக்கு: 416.414.3327 / 416.299.6645
647.894.6467 / 416.283.1439

# நாமும் நமது இல்லமும்

ராஜா மகேந்திரன்

## தொடர் - 406

ஆதன வியாபாரம் கடந்த (2013) ஆண்டின் ஆரம்பத்தில் மிகவும் எதிர்மறையாகவே ஆரம்பமானது. இரண்டாவது அரையிறுதிப் பகுதியில் நிலைமை மாறத் தொடங்கியது. இதன் தொடர்ச்சியாக 2013 ஆம் ஆண்டு, 2012 ஆம் ஆண்டை விட ஆதன வியாபாரத்திலும் விலையிலும், சிறந்த ஆண்டாக சரித்திரத்தில் பதிவாகியுள்ளது. 1996 ஆம் ஆண்டு தொடக்கம் விலை அதிகரித்தே வருகின்றது. இதனைக் கணக்காக வைத்து கடந்த 17 வருடங்களாக, GTA பகுதியில் ஆதனத்தின் சராசரி விலை தொடர்ச்சியாக அதிகரித்து வருவதனைக் காணக் கூடியதாக உள்ளது. இது ஆதனவியாபாரத்தில் ஒரு சாதனையாகவே கொள்ளலாம். இதன் நிலைமை இவ்வாண்டு (2014) எவ்வாறு இருக்கலாம் என பலரும் சிந்திக்க தொடங்கியுள்ளார்கள்.

ரொறொன்ரோ றியல் எஸ்ரேற் சம்மேளனத்தின் (Toronto Real Estate Board) ஆதனம் சம்மந்தமான பேச்சாளர், திரு. ஜேசன் மோசரின் கூற்றின் படி 2014 ஆம் ஆண்டு ஒரு மேல் நோக்கிய ஆண்டாகவே காணப்படலாம் என தெரிய வருகின்றது. இதற்கு புதிய மனை, வீடுகளின் வரவு குறைவும், தனி வீடு, இரண்டு சேர்ந்த வீடு, தொடர்வீடுகளின் நிர்மாணத்தின் எண்ணிக்கை வாங்க இருப்பவர்களின் எண்ணிகையை விட குறைவாக இருக்கலாம் என்பதே முக்கிய காரணமாகலாம்.

கனடாவிற்கு குறிப்பாக ரொறொன்ரோவின் பெரும்பாகத்திற்கு குடியேறுபவர்களின் எண்ணிக்கை கடந்த ஆண்டு (2013) போலவே இருக்கும் என்பதும் ஒரு கணிப் பாகும். இதனால் இவர்களின் தேவையை பூர்த்தி செய்ய போதியளவு ஆதனம் சந்தையில் இருக்குமா என்பதும் ஐயமே?

வெளிநாடுகளுடன் ஒப்பிடும் போது, குறிப்பாக அவுஸ்திரேலியா, இங்கிலாந்து போன்ற நாடுகளுடன்




ஒப்பிடும் போது கனடிய ஆதனத்தின் விலையின் அதிகரிப்பு வீதம் கடந்த 17 வருடங்களில் குறைவாக வே காணப்படு கின்றது. இந்த குறிப்பிட்ட காலப்பகுதியில் அவுஸ்திரேலியா வில் குறிப்பாக சிட்னி (Sydney) யில் விலை 3 மடங்காக அதிகரித்துள்ளது. ஆனால் அங்கு வருடாவருடம் ஏறக்குறைய 120,000 மக்கள் வெளிநாடுகளிலிருந்து குடிபெயர்கின்றனர். ஆனால் கனடாவில் ஏறக்குறைய 275,000 மக்கள் குடிபெயர்கின் றார்கள். அந்த நாட்டுடன் ஒப்பிடும் போது கனடாவின் சராசரி வருமானம் குறைவாக இருந்தாலும் வாழ்க்கைச் செலவு மிகவும் குறைவாகவே காணப்படுகின்றது. பொதுவாக மேலைத்தேச, கீழைத்தேச நாடுகளுடன் ஒப்பிடும் போது ரொறொன்ரோவில் சராசரி விலை ஒப்பீட்டு ரீதியில் குறைவாகவே காணப்படுகின்றது. எனவே திரு. ஜேசன் மோசரின் கூற்று நியாயமானதாகவே தோன்றுகின்றது.




| Year | Sales | Average Sales Price |
|---|---|---|
| 1991 | 38,144 | $234,313 |
| 1992 | 41,703 | $214,971 |
| 1993 | 38,990 | $206,490 |
| 1994 | 44,237 | $208,921 |
| 1995 | 39,273 | $203,028 |
| 1996 | 55,779 | $198,150 |
| 1997 | 58,014 | $211,307 |
| 1998 | 55,344 | $216,815 |
| 1999 | 58,957 | $228,372 |
| 2000 | 58,343 | $243,255 |
| 2001 | 67,612 | $251,508 |
| 2002 | 74,759 | $275,231 |
| 2003 | 78,898 | $293,067 |
| 2004 | 83,501 | $315,231 |
| 2005 | 84,145 | $335,907 |
| 2006 | 83,084 | $351,941 |
| 2007 | 93,193 | $376,236 |
| 2008 | 74,552 | $379,347 |
| 2009 | 87,308 | $395,460 |
| 2010 | 85,545 | $431,276 |
| 2011 | 89,096 | $465,014 |
| 2012 | 85,496 | $497,130 |
| 2013 | 87,111 | $523,036 |


# HomeLife/GTA Realty Inc. Brokerage*

*Independently Owned & Operated

"கனவு உங்களுடையது, பொறுப்பு எங்களுடையது"



*Raja Mahendran,* P.Eng.
*Broker / Owner*

**5215 Finch Ave, E, #203, Toronto, ON :416.321.6969**

## HOUSE FOR SALE
## KENNEDY &SHEPPARD



2 story house for sale. 6+1 Bedrooms 7 Washrooms, 3 garages, 2 kitchens. 7,200 Sq.ft. Huge backyard. 80 Feet frontage. Stone elevation. Hardwood /Granite/Marble floor. Quiet area. Asking price $2.2 million.

## HOUSE FOR RENT
## FINCH & MCCOWAN

3 bedrooms house for rent. One washroom, 1Parking. main floor only. Avail. anytime. Asking $1,325.

## Coin laundry For Sale Kennedy & Eglinton

A Highly populated. Surrended by apartment area. One Year new business. High quality washer & dryer. Money changing machine. Soap dispensor. Possible to have alteration person & laundry outlet. Very reasonable rent. Longe term lease possible.

## CONVENIENCE STORE FOR SALE
## MIDDLEFIELD & FINCH



Lotto, Tickets, Key cuts, Movie rental, (exclusive in the plaza) Convenience & Indian/Srilankan Groceries. Established Over 10 years. 200Sq.ft. Low Rent $3,500. Asking only 69,900

# தமிழ் இளைஞர்களிடம் வளர்ந்து வரும் வன்முறைக் கலாசாரம்

## தாயக மடல்

- வன்னியிலிருந்து ஆதித்தன் -

தற்போது வெளிவந்து கொண்டிருக்கின்ற பல தமிழ் திரைப்படங்கள் தற்கால இளைஞர் மத்தியில் மாற்றங்களை ஏற்படுத்தி வருகின்றதை அவதானிக்க முடிகின்றது. ஆனால், அவை நல்ல மாற்றங்கள் என்று கூற முடியாது. ஒரு நல்ல திரைப்படத்தில் வருகின்ற ஒரு நல்ல கதாபாத்திரம் இளைஞர் மத்தியில் மாற்றங்களை ஏற்படுத்துவதை நாம் காண்பது அரிதாகும். மோசமான விடயங்களே அவர்களின் மனங்களில் பதிந்து விடுகின்றன. இப்போது வெளியாகும் தமிழ் திரைப்படங்கள் பலவற்றில் காதலி காதலனை 'டா' போட்டு அழைப்பதை அதிகம் பார்க்கின்றோம். இதேபோல காதலனை அல்லது ஆண் நண்பர்களை "என்னடா.. வாடா... போடா.." என சாதாரணமாக இளம் பெண்கள் அழைப்பதை நாம் யாழ்ப்பாணத்திலேயே இன்று அவதானிக்கக் கூடியதாக இருக்கின்றது.

இதேபோல, ஆடை, அலங்காரங்களும் சினிமா பாணியிலேயே மாறிக்கொண்டிருப்பதையும் காண முடிகின்றது. திரைப்பட கதாநாயகர்களுக்கு பாலாபிசேகம் செய்யும் வழக்கம் தமிழகத்திலிருந்து இப்போது யாழ்ப்பாணத்திற்கும் பரவி விட்டது. இவையெல்லாம் கூட பரவாயில்லை எனலாம். ஆனால், தற்போதைய தென்னிந்திய சினிமாவில் வருகின்ற வன்முறை கலாசாரம் இன்று யாழ்ப்பாண இளைஞர் மத்தியில் புகுந்து விட்டதுதான் அதிர்ச்சிகரமானது. அண்மையில் பொலிஸாரினால் கைது செய்யப் பட்டுள்ள 'ஆவா' எனப்படும் குழுவினர் தென்னிந்திய திரைப்படப் பாணி வன்முறைக் குழுவினரே. மோட்டார் சைக்கிள்களில் வந்து வாள்களால் ஆட்களை வெட்டி வீழ்த்துவது தொடக்கம் கொலை, கொள்ளை, கப்பம் என எல்லாமே திரைப்பட பாணியில் அவர்களால் மேற்கொள்ளப்பட்டுள்ளது. ஆவா குழுவின் தலைவரான இளைஞனுக்கு ஒரு காதலியும் இருந்துள்ளதாக பொலிஸ் விசாரணைகளிலிருந்து தெரிவிக்கப்படுகின்றது.

தற்போது வெளியாகும் திரைப்படங்கள் பலவற்றில் கதாநாயகன் வில்லனாகவே சித்தரிக்கப்படுகின்றான். கொலை, கொள்ளைகளைப் புரியும் அவன், தடுக்க வருபவர்களை - தட்டிக் கேட்பவர்களை கத்தி, வாள் போன்றவற்றால் வெட்டிச் சாய்க்கிறான். இவற்றை ஒரு வீர சாகசம் போல் திரைப்படங்களில் காட்டப்படுகின்றது. அவன் கெட்டவனாக இருந்தாலும் கூட அவனது வீர சாகசங்களில் ஈர்ப்புக் கொண்டு அவனுக்கு ஒரு காதலியும் கிடைப்பாள். அவள் நல்ல குடும்பத்தைச் சேர்ந்தவளாகவும் சித்தரிக்கப் படுவாள். இந்தக் காதலையும் குறித்த சினிமாக்கள் ஒரு புனிதமான காதலாகவே காண்பிக்கின்றது. பெண்ணின் பெற்றோர் இக்காதலுக்குத் தடை விதிப்பதையும் தவறு என்பது போல காட்டுகின்றது இந்த சினிமாக்கள். இவ்வாறான தன்மைகளும், இன்று வன்முறையாளர்களையும் காதலிக்கலாம் என்கின்ற எண்ணத்தை நமது இளம் பெண்கள் மத்தியில் ஏற்படுத்துகின்றதோ என எண்ணத் தோன்றுகிறது. அதனால் தானோ தெரியவில்லை ஆவா என்றழைக்கப்படும் இளைஞனுக்கும் ஒரு காதலி இருந்திருக்கிறாள்.



ஆவா என்றழைக்கப்படுகின்ற இணுவிலை சேர்ந்த இளைஞனின் வயது இருபத்தொன்று தான். இவரே ஆவா குழுவின் தலைவர் எனக் கூறப்படுகின்றது. யாழ்ப்பாணத்தில் பாரிய வாள் வெட்டு சம்பவங்களுடன் தொடர்புடையதாக கருதப்படும் இந்த ஆவா குழுவைச் சேர்ந்தவர்களை கடந்த 6 ஆம் திகதி பொலிஸார் சுற்றி வளைத்து கைது செய்துள்ளனர். இவர்களிடம் இருந்து 9 மோட்டார் சைக்கிள்கள் கைப்பற்றப்பட்டதுடன் அதன் சீற் பகுதிக்கு கீழ் இருந்து 2 கைக்குண்டுகள், 12 வாள்கள், 2 நக்கிள்ஸ் என்பனவும் மீட்கப்பட்டன. இவர்கள் பகல் வேளையில் யாரையாவது வெட்ட செல்வதானால் சேட்டிற்குள் முதுகுப் பகுதியில் தான் வாள்களைக் கொண்டு செல்வார்களாம். இவ்வகையில் இவர்களது நடவடிக்கைகள் அனைத்தும் தென்னிந்திய சினிமாப்படப் பாணியிலேயே அமைந்துள்ளது. இக்குழுவிலுள்ளவர்கள் அனைவரும் 17 வயதுக்கும் 30 வயதுக்கும் இடைப்பட்டவர்கள். கைது செய்யப்பட்ட இவர்கள் அச்சுவேலி, மானிப்பாய், சுன்னாகம், கோப்பாய் ஆகிய பொலிஸ் பிரிவுகளுக்கு உட்பட்டவர்கள்.

தற்போது கைது செய்யப்பட்டவர்கள் குறித்து ஏற்கனவே தகவல்கள் வெளிவந்திருந்த போதிலும் முறைப்பாடுகள் எவையும் பொலிஸ் நிலையங்களில் கிடைக்கவில்லை எனவும், இவர்களுக்குப் பயந்தே பாதிக்கப்பட்ட பொதுமக்கள் இவர்கள் தொடர்பாக முறைப்பாடு செய்யவோ, இவர்களைக் காட்டிக் கொடுக்கவோ முன்வரவில்லை எனவும் பொலிஸ் தரப்பில் கூறப்படுகின்றது. இந்த ஆவா என்ற குழுத் தலைவனுக்கு கீழ் மூன்று குழுக்கள் இயங்கி வருவதாகவும் பொலிஸ் விசாரணையின் மூலம் தெரிய வந்துள்ளது. இக்குழுவிலுள்ள ஏனையோரையும் பிடிக்க பொலிஸார் முயன்று வருகின்றனர்.

சில நாட்களுக்கு முன்னர் மோட்டார் சைக்கிள்களில் வந்த இனந்தெரியாத குழுவினரின் வாள்வெட்டுக்கு சிலர் இலக்காகினர். இதில் படுகாயமடைந்த ஆறு இளைஞர்கள் யாழ். போதனா வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டனர். இரவு வேளையில் வசாவிளான் கோணாவளைப் பகுதியில் உள்ள வழிபாட்டிடம் ஒன்றிற்கு முன்னால் இளைஞர்கள் சிலர் கதைத்துக் கொண்டிருந்த போது திடீரென மோட்டார் சைக்கிள்களில் அவ்விடத்துக்கு வந்த குழுவினர் இந்த இளைஞர்கள் மீது வாள்வெட்டுத் தாக்குதலை நடத்தி விட்டுத் தப்பிச் சென்றுள்ளனர். இதனைச் செய்தவர்களும் இந்தக் குழுவினர் தனோ என இப்போது சந்தேகிக்கத் தோன்றுகிறது. இதேவேளை, யாழ்ப்பாணத்தில் இதுவரை காலமும் பல்வேறு குற்றச் செயல்களில் ஈடுபட்டு வந்த இந்த 'ஆவா' குழுவின் பின்னணியில் இராணுவம் செயற்படுகின்றது என தாம் சந்தேகிப்பதாக தமிழ் தேசியக் கூட்டமைப்பின் வட மாகாணசபை உறுப்பினர் எம்.கே.சிவாஜிலிங்கம் தெரிவித்திருக்கின்றார். இவ்வாறு அவர் சந்தேகம் கொள்ளவும் காரணமிருக்கின்றது. கடந்த காலங்களில், அதாவது போர் முடிவடைந்ததன் பின்னர் யாழ். குடாநாட்டில் பல கொலை, கொள்ளைச் சம்பவங்கள் தொடர்ச்சியாக இடம்பெற்று வந்தன. கொள்ளையிடுவதற்காக கொலை செய்த சம்பவங்கள் அதிகம். இவ்வாறான சம்பவங்களில் ஈடுபட்டவர்கள் துப்பாக்கிகளையும் வைத்திருந்துள்ளார்கள். இவர்களுக்கு எவ்வாறு துப்பாக்கிகள் கிடைத்தன என்பது மர்மமான ஒன்றாகவே இருந்தது.

சிலர் பிடிபட்டு விசாரணைகள் மேற்கொள்ளப்பட்ட போது, இவ்வாறான காரி யங்களின் பின்னணியில் படையினர் இருந்துள்ளமையும் வெளியாகியிருந்தது. இதனால் படையினர் சிலரும் அப்போது கைது செய்யப்பட்டிருந்தனர். அது குறித்த விசாரணைகள் என்னவாயின. பிடிபட்டவர்கள் தண்டிக்கப்பட்டார்களா என்பதெல்லாம் இதுவரை வெளிவராத விடயங்கள். ஆகவே, இவ்வாறான குற்றச் செயல்களில் ஈடுபடுவோருக்கு சில பின்னணி சக்திகளின் தூண்டுதல் இருப்பதாக சந்தேகம் கொள்வதில் காரணம் இல்லாமலில்லை. தமிழ் இளைஞர்கள் இளம் வயதிலேயே இவ்வாறான குற்றச்செயல்களுக்கு ஆளாவதைத் தடுக்க குறித்த இளைஞர்களின் பெற்றோராலும் இயலாதிருக்கின்றது என்பதுதான் துயரமான விடயம். வறுமையே பல குற்றச் செயல்களுக்கு காரணமாக இருப்பதாக பொதுவாக கருதப்பட்டாலும் யாழ்ப்பாணத்திலுள்ள சில இளைஞர்கள் இவற்றை ஒரு சாகசமாகவே செய்கின்றனர் என்பதுதான் உண்மை.

வெளிநாடுகளிலுள்ள உறவினர் அனுப்பும்

தொடர்ச்சி 09ஆம் பக்கம்

School of Math + (Since 2006)
- G7 - G12 Math Tutoring - Functions, Calculus, Data, IB, AP
- G7 - G12 English, SAT Essay Writing, Summary, Reading TOEFL, IELTS, SAT, COPE
- G7-G12 French, Pre-IB Reading, Writing, Grammar (Native Speaker teachers)
- $200 Off before Feb 01/2014
www.schoolofmath.ca
உங்களுடைய குழந்தைகளின் கல்வித் தேவைகளை பூர்த்தி செய்ய அழையுங்கள்
Bright Future Academy (BSID #:885489)
High SchoolCredit Courses (G11-G12)
Accredited by Ministry of Education
ENG3U/4U, MCV4U, MHF4U, MDM4U
ESLBOM, BAT4M, CIA4U
Highly Qualified teachers, Student-Centered teaching
Affordable price, Success guaranteed
Small group or VIP 1 to 1
$200 Off before Feb 01/2014
www.bfacademy.ca
4433 Sheppard Ave, E. (Sheppard & Brimley) 2nd Floor, Room 202, Toronto, ON M1S 1V3. 416.820.5527 / 647.712.8855

# MATH WORLD

a Private math learning centre for higher studies.

**"Starting NEW CLASSES FOR THE 2ND SEMESTER."**

**With our 23 years of experience in teaching math;**



**G12** CALCULUS and VECTOR
ADVANCED FUNCTION

**We specialized in HIGHER GRADES ONLY.** (G9, G10, G11 & G12)

**OUR GOAL: 85% and Above.**

**Bonus:** For those taking Advanced Function you will get a free FINAL EXAM REVIEW

THIS SEMESTER, OUR NEW PROGRAM IS DESIGNED TO:



- **Prepare the students for "PRE CALCULUS"**
  - First Differences * Linear Function *Function Notation
  - Expanding Binomial, Trinomials plus higher degrees
  - Factoring higher level of Polynomials
  - Simplifying Rational Expressions.
  - A complete knowledge of Algebra – @ UNIVERSITY LEVEL
  - Our Own Art of Teaching earned through the last 23yrs will be shared to avoid careless mistakes.

**ONE WEEK FREE Trial**

**"We will get you the top" Satisfaction is guaranteed**

**Location: Scarborough; Markham and Steel.**

**FOR INFO: 416 666 5515**

TBC Toronto Business College




SECOND CAREER

யார் தகுதி உடையவர்கள்?

- EI பெற்றுக்கொண்டிருப்பவர்கள்
- 2005ம் ஆண்டுக்குப்பின் EI பெற்றவர்கள்
- 5 வருடங்களுக்குள் Maternity / Parental Benefits பெற்றவர்கள்

அரசாங்க நிதி உதவியில் கற்கலாம்
Tuition Fees, Books, Living Expenses
Day care & Transportation up to $28000
அனைத்தும் இலவசம்
(திருப்பிச் செலுத்தத் தேவையில்லை)

DIPLOMA PROGRAMS

Accounting & Payroll Admin.
35 Weeks
Business Administration
26 Weeks
Computerized Accounting
26 Weeks
Medical Office Admin.(MOA)
32 Weeks
Personal Support Worker(PSW)
26 Weeks (NACC Diploma)

TAKE ONE COURSE AND GET ANOTHER ONE FOR FREE
WORD, EXCEL, POWER POINT, ACCESS
QUICKBOOKS LEVEL 1 & 2
SIMPLY ACCOUNTING LEVEL 1 & 2
ACCPAC G/L, A/P & A/R

Career Colleges Ontario

416-291-5155
4465 Sheppard Ave. East #208
( Sheppard & Brimley ) Scarborough
www.tbcollege.com info@tbcollege.com
(Registered as a Private Career College under the Private Career Colleges Act 2005)

# இலங்கையின்...

03ஆம் பக்கத்தொடர்ச்சி

நடத்துவதற்காக அமைச்சர்கள் மட்டத் தூதுக்குழுக்களை பல்வேறு நாடுகளுக்கும் அனுப்புவதற்கு அரசு முடிவெடுத்துள்ளது. எது எப்படியிருந்த போதிலும் எதிர்வரும் மார்ச் மாதம் இலங்கை அரசாங்கத்திற்கு பெரும் சோதனையான காலம் என்றே பல தரப்பாலும் எதிர்வு கூறப்படுகின்றது. இலங்கை தொடர்பான அமெரிக்காவின் கடுமையான நிலைப்பாடுகள் எதிர்காலத்தில் இலங்கைக்கு அபாயகரமான பிரதிவிளைவுகளை ஏற்படுத்தும் என்று முன்னாள் இராஜதந்திர அதிகாரியான தயான் ஜயதிலக்க எச்சரித்துள்ளமை இங்கு குறிப்பிடத்தக்கது.

தயான் ஜயதிலக்க இலங்கையில் கொண்டுவந்து நிறைவேற்றினால் இலங்கை மீதான அதன் தாக்கம் மிகக் கடுமையாக இருக்கும் என்றும் ஜயதிலக்க கூறுகிறார். சர்வதேச விசாரணைக்கான பொறிமுறை ஒன்று உருவாகுமானால் இரண்டு வழிகளில் அது ஏற்படலாம். அதாவது- ஐநாவின் சிறப்பு தூதுவர் ஒருவர் நியமிக்கப்படலாம் அல்லது சர்வதேச விசாரணை ஆணையம் ஒன்று உருவாகலாம் என்றும் அவர் எதிர்வு கூறுகின்றார். அந்த விசாரணையின் தீர்ப்புகளுடன் இலங்கை ஒத்துழைத்துச் செயற்படாத பட்சத்தில் அமெரிக்கா, பிரித்தானியா போன்ற நாடுகளின் நாடாளுமன்றங்களால் இலங்கைக்கு எதிராக சர்வதேச ரீதியான பொருளாதார, வணிக மற்றும் நிதித் தடைகள் கொண்டுவரப்பட்டு- இலங்கையின் பொருளாதார குரல்வளை




St Anthany's Ground - site of Jan 2009 killing of hundreds of families by army shelling

இறுதிக்கட்டப் போர் நடந்துகொண்டிருந்த காலத்தில் ஐ.நாவுக்கான இலங்கையின் நிரந்தர பிரதிநிதியாக பணியாற்றிவர். பின்னர், அரசாங்கத்தின் பிரான்ஸ் தூதுவராகவும் பணியாற்றிய அவர் அந்தப் பொறுப்பிலிருந்து வெளியேறிய பின்னர் அண்மைக் காலங்களாக அரசாங்கத்தின் வெளியுறவுச் செயற்பாடுகள் தொடர்பில் அதிருப்தி கொண்டவராகவும், அதனை விமர்சிப்பவராகவும் இருந்து வருகிறார். ஆனாலும், இப்போதுள்ள சூழ்நிலையில் இலங்கைக்கு சாதகமாகவும், இலங்கையை சர்வதேச நெருக்கடிக்குள்ளிருந்து பாதுகாப்பதுமான கருத்துக்களையும் அவர் வெளியிட்டு வருகின்றார். இலங்கையின் இறுதிக்கட்டப் போரின்போது நடந்ததாகக் கூறப்படும் பாரதூரமான மனித உரிமை மீறல்கள் தொடர்பில் சர்வதேச விசாரணை நடத்தப்பட வேண்டும் என ஐ.நா மனித உரிமைகள் பேரவையில் அமெரிக்கா தீர்மானம் நசுக்கப்படலாம் என்றும் அவர் எச்சரிக்கின்றார். இலங்கை இராணுவ அதிகாரிகள் மட்டுமன்றி ஏனைய அதிகாரிகளும் சர்வதேச பயணங்களை மேற்கொள்ள முடியாத படி புலம்பெயர் தமிழர்களால் வழக்குகள் போடப்படலாம் என்றும் தயான் குறிப்பிடுகின்றார். அமெரிக்கா போன்ற நாடுகளின் இவ்வாறான கடுமையான நிலைப்பாடுகள் இலங்கைக்குள் இன ரீதியான சமூக இடைவெளியை இன்னும் அதிகரிக்கவும் வாய்ப்பிருக்கிறது என்றும் அவர் தெரிவிக்கின்றார். இந்நிலையில், எதிர்வரும் மார்ச் மாதம் நடைபெறவுள்ள ஐ.நா மனித உரிமைகள் பேரவைக் கூட்டத் தொடர் இலங்கைக்கு சுருக்குக் கயிறாக மாறுமா என்கின்ற கேள்வி அனைத்துத் தரப்பினர் மத்தியிலும் எழுவது தவிர்க்க முடியததாகின்றது.

# தமிழ்...

08ஆம் பக்கத்தொடர்ச்சி

பணமும் சிலருக்கு உழைக்க வேண்டிய அவசியமின்றி, தேவையற்ற பொழுதுபோக்குகளை மேற்கொள்வதற்கு வாய்ப்பாக அமைக் கின்றன. வேளைக்கு உணவு, பொக்கற் நிறைய பணம், சுற்றித்திரிய மோட்டார் சைக்கிள், இளம் வயதிலேயே மதுபானம், கூட்டுச்சேர அதேபோன்ற நண்பர்கள் குழாம் என வரும்போது காவாலித்தனமும் அதனயும் மீறிய வன்முறைக் கலாசாரமும் இந்த இளைஞர்களிடம் புகுந்து கொள்கின்றன. இளம் வயதில் இவர்களுக்கான கட்டுப்பாடும், சரியான வழிகாட்டுதலும் மிக அத்தியாவசியமாகின்றது. தமிழ் இளைஞர்களின் இவ்வாறான சீரழிவுகளைத் தடுக்க பெற்றோர் மட்டுமல்லாது சமூகப் பொறுப்புள்ள அனைவரும் முன்வரவேண்டும்.

# காலத்தோடு வளரும் கணினிகள் - 37

அன்பான வாசகர்களே!

கடந்த இதழில் மைக்கிரோசொவ்ற் ஒபீஸ் மென்பொருளில் உள்ள மைக்கிரோசொவ்ற் அக்சஸ் (Microsoft Access) மென்பொருளைப் பற்றி அறிமுகம் செய்து இருந்தேன். இந்த மென்பொருளிற்குப் புதிய வாசகர்கள் அக்சஸ் மென்பொருளைத் திறந்து முயற்சித்து இருப்பீர்கள் என நினைக்கின்றேன். ஆரம்பத்தில் இந்த மென்பொருள் கடினமானதாகத் தென்பட்டாலும் முயற்சி எடுத்தால் யாரும் கற்றுக் கொள்ளலாம் என்பதே எனது கருத்தாகும். இந்த மென்பொருளைப் பயன்படுத்த விரும்புவர்களின் நன்மைக்காகச் சுருக்கமான அறிமுகத்தை இந்தத் தொடர் கட்டுரை மூலமாகத் தரலாம் என நினைக்கின்றேன். இப்பொழுது அக்சஸ் மென்பொருளில் ஒரு தரவுத்தளத்தை உருவாக்கிப் பார்ப்போம்.

Start பட்டனை கிளிக் செய்து All Programs இனை கிளிக் செய்ய வேண்டும். தோன்றும் பட்டியலில் Microsoft Office இனை கிளிக் செய்து Microsoft Word இனை கிளிக் செய்ய வேண்டும். இப்பொழுது அக்சஸ் மென்பொருள் திறக்கப்படும். இங்கே Blank Database என்ற ஐகனை (Icon) கிளிக் செய்ய வேண்டும். திரையகத்தின் வலது பக்கத்தில் தோன்றும் Task Pane இல் Blank Database என்ற தலைப்பிற்குக் கீழாகத் தோன்றும் File Name Text Box இல் Members Database இனைத் தட்டச்சு செய்து விட்டு Create பட்டனை கிளிக் செய்ய வேண்டும். Members Database என்ற தரவுத்தளக் கோப்பினை (File) நாம் திறந்துள்ளோம். ஒரு தரவுத்தளக் கோப்பினுள் பல அட்டவணைகள் (Tables) உருவாக்கப்படலாம். இந்தக் கோப்பினுள் விரும்பிய அட்டவணைகளை உருவாக்கும் வசதி அக்சஸ் மென்பொருளில் உள்ளது. இப்பொழுது தோன்றியுள்ள திரையகத்தில் (Screen) மேல் பகுதியில் Home Create External Data போன்ற menu titles இருக்கும். இவற்றிற்கு கீழாக Tools Bar இருக்கும். இவற்றிற்குக் கீழாக இடது புறத்தில் All Tables பகுதி இருக்கும். All Tables நிரலிற்கு இடது புறமாக உள்ள திரையகத்தின் பகுதி முழுவதும் நிரல்களும், வரிசைகளும் கொண்ட எக்சல் மென்பொருளில் உள்ளது போன்ற விரிதாள் இருக்கும். இந்த விரிதாளில் வைத்தே ஒன்றோ அல்லது ஒன்றிற்கு மேற்பட்ட அட்டவணைகளை நாங்கள் உருவாக்கிக் கொள்ளலாம். இந்த விரிதாளை Datasheet View என்போம். இந்த விரிதாளைப் பயன்படுத்தி அட்டவணை ஒன்றை உருவாக்க View Tool Bar இனை கிளிக் செய்ய Save As Dialog Box தோன்றும். இந்த Dialog Box இல் நாங்கள் உருவாக்கப் போகும் அட்டவணைக்கான பெயரைக் கொடுக்கலாம். இந்த விரிதாளைப் பயன்படுத்தி அட்டவணையை உருவாக்காது இன்னுமொரு வழியிலும் அட்டவணைகளை அக்சஸ் இல் உருவாக்கலாம். Save As



Dialog Box இல் உள்ள Cancel பட்டனை கிளிக் செய்து விட்டு View Tool Bar இல் உள்ள கீழ் நோக்கிய அம்புக்குறியை கிளிக் செய்து Design View இனை கிளிக் செய்ய வேண்டும். இப்பொழுது மீண்டும் Save As Dialog Box தோன்றும். இதில் Contacts Table இனைத் தட்டச்சு செய்து விட்டு முழு பட்டனை கிளிக் செய்ய வேண்டும். இப்பொழுது Table Design View தோன்றும். இப்பொழுது ஒரு தரவுத்தள அட்டவணையை உருவாக்கிப் பார்ப்போம். தன்னிச்சையாகத் தோன்றும் ID என்ற Field இனை Primary Key ஆக வைத்துக் கொள்வோம். அட்டவணையில் இரண்டாவது Field ஆக First Name என்ற Field இனைச் சேர்த்துக் கொள்வோம். இதன் Data Type Text ஆக இருக்கட்டும். இந்த Field இனது Field Size இனை 30 ஆக மாற்றிக் கொள்வோம். இப்பொழுது மேலும் ஒரு Field Last Name இனைச் சேர்த்துக் கொள்வோம். இதனது Field Type Text ஆகவும் Field Size 30 ஆகவும் மாற்றிக்கொள்வோம். இப்பொழுது Address 1 என்ற Field இனை Text Type Field type ஆகவும் Field Size 80 கொண்டதாகவும் சேர்த்துக் கொள்வோம். இவ்வாறே Address 2 என்ற Field இனையும் சேர்த்துக் கொள்வோம். இவ்வாறே City என்ற Field இனை Text Field Type உடனும் 30 Field Size உடனும் சேர்த்துக் கொள்வோம். மேலும் பின்வருமாறு சில Fields இனைச் சேர்த்துக் கொள்வோம். HomePhone, Field Type Text, Field Size 10 CellPhone, Field Type Text, Field Size 10, Email, Field Type Text, Field size 30, Married, Field Type Yes/No, Field Size 1. இங்கே மொத்தம் 11 Fields களைக் கொண்ட ஒரு தரவுத்தள அட்டவணைகளை உருவாக்குவதற்குத் தேவையான விபரங்களைக் கொடுத்து விட்டோம். வலது புற மேல் மூலையில் உள்ள Office பட்டனை கிளிக் செய்து Save தெரிவு மூலம் இந்த அட்டவணையை தரவுத்தளக் கோப்பினுள் சேமித்துக் கொள்ளலாம். இதன் பின்னர் View Tool Bar இனை கிளிக் செய்ததும் DataSheet View க்கு வருவோம். இந்த விரிதாளில் நாங்கள் உருவாக்கிய அட்டவணையில் தரவுகளைத் தட்டச்சு செய்து கொள்ளலாம். இதனை செயன்முறையில் நீங்கள் செய்து பார்ப்பதன் மூலம் அக்சஸ் மென்பொருள் மூலம் தரவுத்தளம் உருவாக்குவதற்குத் தேவையான அறிவைப் பெற்றுக் கொள்வீர்கள்.

என் அன்புக்குரிய வாசகர்களே! இன்றும் வழமைபோல் கணினி பற்றிய அறிவை வளம்படுத்தும் நோக்கில் சில விடயங்களைப் பற்றிக் கவனித்தோம். தொடர்ந்து வாசியுங்கள். உங்கள் எண்ணங்களைத் தெரியப்படுத்துங்கள். அடுத்த இதழில் மீண்டும் சந்திப்போம். நன்றி. வணக்கம். தொடரும்.



- அகணி -
authorakani@yahoo.com

**MATH, PHYSICS & COMPUTER SCIENCE / PROGRAMMING STUDIES HOME TUTORING**



***Subjects***

- *Grade 11, 12: Any Math/Physics/Computer studies credit courses*
- *University (Any year): (Including but not limited to) Calculus, Linear Algebra, Statistics, Probability, Computer programming (Java/C++ etc) Discrete Mathematics, Data Structures, Algorithms.*
- *IB: Any Mathematics/Physics/Computer Science Diploma courses.*

**Contact: Bala Balamohan**
**416.551.2553**

- B.Sc. & M.Sc. degree in Mathematics from U of Toronto
- M.C.S & Ph.D. degrees in computer science from U of Ottawa
- More than 10 years experience as teaching assistant at U of Toronto & U of Ottawa
- Winner, Graduation prize, Dept. of Computer & Mathematical Science, U of Toronto, Scarborough (UTSC), 2005
- Member, UTSC'S first team for **Putnam Competition**

**Tax related services Income Tax & HST**

Unfiled returns from 2005
Filing Under Volantary Disclosure Program (VDP)
Tax Appeals
SR & ED Investment Tax Credits
Individual and Corporate Taxation

Company Incorporations
Business Registration
Business Plans
Emergency Business Loans - upto $ 5 M

GIC - GIA
GIC - The Bank Provides
GIA - Is available with the Insurance Company (agent comes to your house)
The interest rate for the GIA is higher than the GIC and they are both guarenteed
THE INCOME TAX CALCULATION FOR SENIORS IS BETTER FOR THE GIA

Phone: Siva (416) 901-0929 Yoga 416-492-7957
www.sivassolutions.ca

Email: siva@sivassolutions.ca
Sivas Solutions
708-419 Markham Rd Toronto M1J 3E1

# ஆயுள் காப்புறுதி முகவர்களின் அங்கலாய்ப்பில் அவதியுறும் அப்பாவிகள்

## கனடிய தகவல் தொடர் 212

தன்னை நம்பி வந்த வாடிக்கையாளர் ஒருவருக்கு மோசடி செய்து பிடிபட்டு சட்டத்தின் முன்னால் நிறுத்தப்பட்டுள்ள ஆயுள் காப்புறுதி முகவர் ஒருவரின் செய்தி கடந்த நவம்பர் 28, 2013 இல் ரொறொன்ரோ பொலீஸ் பிரிவினரின் இணையதள ஊடகத்தில் அவரது படத்துடன் வெளியாகியிருந்தது. தொடர்ந்து ஏனைய ஊடகங்களிலும் இச்செய்தி வெளியாகி யிருந்ததுடன், மேலும் பல அப்பாவிகள் இவரிடம் சிக்கியிருக்கலாம் என்ற சந்தேகங்கள் பொலீசாரின் புலன் விசாரணையில் உருவாகியிருந்தது.

ரொறொன்ரோ பொலீஸ் பிரிவின் இணைய தள செய்தியிலிருந்து

அண்மையில் மோசடி செய்து கைது செய்யப்பட்டவரின் விபரங்களை ரொறொன்ரோ பொலீஸ் பிரிவினர் பொதுமக்களுக்கு எச்சரிக்கைக்காக பகிரங்கப்படுத்த விரும்புகின்றனர்.

காப்புறுதி முகவர் என தம்மை இனம் காட்டிக் கொண்டு, வாடிக்கையாளர்களின் நிதித் தேவைக்கு ஏற்றமாதிரி திறமான காப்புறுதி ஒப்பந்தங்களை, உடன்படிக்கை களை சந்தைப்படுத்தும் அறிமுகங்களை அந்த நபர் செய்து வருகின்றார்.

ஒரு அப்பாவி வாடிக்கையாளர் ஏற்கனவே தாம் செய்து வைத்திருந்த ஆயுள் காப்புறுதி ஒப்பந்தத்தின் பணப் பெறுமதியாக (Cash value) இருந்த $21,000 டொலரினையும் அந்த ஒப்பந்தத்தினை ரத்து செய்து வெளியே எடுத்தால் அந்தப் பணத்தினை




உபயோகப்படுத்தி மிக திறமையான இன்னொரு ஆயுள் காப்புறுதி ஒப்பந்தத்தினை செய்து தருகின்றேன் என அறிவுரை வழங்கினார். பின்னர் அந்தப் பணத்தினை வெளியே எடுப்பித்து அதனை தமது கம்பனி பெயர் ஒன்றில் வைப்பிலிட்டு விட்டு, புதிதாக காப்புறுதி ஒப்பந்தம் ஒன்றையும் கொடுக்காது தலைமறைவாகி விட்டார்.

அப்பாவியாக சிக்குப்பட்டுக் கொண்ட வாடிக்கையாளர் அதனை வெளியே கொண்டு வந்த போது, இவரிடம் மாட்டுப் பட்டுக்கொண்டவர்கள் பலர் இருக்கலாம் என்ற சந்தேகம் பொலீசாருக்கு ஏற்பட அவர்கள் இதனை பகிரங்கத்திற்கு கொண்டு வந்துள்ளனர்.

அவரது விபரங்கள்!

பெயர் - லோரொன்ஸ் ஹொனிக்மன்
வயது - 41 வயது வெள்ளை இனத்தவர்
கம்பனி பெயர் -
Honickman Financial Group
3120, Ruther Ford Road, Unit #197
Vaughan, ON l4k 0B2

இவர் கைது செய்யப்பட்டு மூன்று மோசடி குற்றசாட்டுகளில் வழக்கு தொடரப் பட்டுள்ளது. அவரது தொழில் அனுமதி பத்திரமும் ரத்து செய்யப்பட்டு அனுமதி பத்திர அடையாள இலக்கத்தை 'ஒன்ராரியோ நிதியியல் சேவைகள் சபை' (Financial services commission of Ontario)தங்களின் இணையதளத்திலும் அறிவித்துள்ளது.

இந்த செய்தியினை அறிந்த பின்பே, அமெரிக்காவினை ஆரம்ப தளமாக கொண்ட ஒரு குறிப்பிடப்பட்ட ஆயுள் காப்புறுதி கம்பனியின் முகவர்கள் முன்னர் கனடாவில் பரபரப்பாக ஓடியதும், தற்போது அந்த பரபரப்பு சற்று தளர்ந்த நிலையிலும் ஓடித் திரிவது நினைவுக்கு வருகின்றது.

அந்த குறிப்பிடப்பட்ட கம்பனியின் ஆயுள் காப்புறுதி முகவர்கள் ஒவ்வொரு வாடிக்கையாளரினை சந்திக்கும் போதும் அவர்களுக்கு மூளை சலவை செய்து, பல வருடங்களாக பண சேமிப்பு பெறுமதி களுடன் செய்து வைத்திருக்கும் ஆயுள் காப்புறுதி ஒப்பந்தங்களை (Life insurance policies with cash values & investment fund values) ரத்து செய்து தங்கள் கம்பனியின் ஒப்பந்தங்களை புகுத்துவது என்பதே அவர்களின் நோக்கமாக இருக்கிறது.

அதனை அவர்கள் நியாயத்தின் கோட்பாடு என ஒரு தத்துவத்தினை இறுக்கி பிடித்துக் கொண்டே தொடர்கின்றனர். அது மாத்திரமல்ல காண்பவர்கள் யாவரையும் தங்கள் கம்பனியில் முகவர் தொழில் செய்யலாமே? என ஆசை வார்த்தை காண்பித்து அழைப்பார்கள். மேலும் பலரை அழைத்து வருமாறு வந்தவரை வற்புறுத்துவார்கள். முகவர்களை சேர்க்கும் தொடர் வடமாகவே இவர்களின் தொழில் தொடருகிறது.

சந்தைப்படுத்தும் முகவர் தொழிலை மக்கள் மத்தியில் நின்று செய்யும் ஆர்வமோ, ஆற்றல்களோ அவர்களுக்கு இருக்காது. முகவர் அனுமதி பத்திரம் பரீட்சைகளிலும் சித்தியடைந்து அரச அனுமதிபத்திரம் பெற்றிருக்கமாட்டார்கள். கேட்டால் முகவர் தொழில் என்பார்கள். சில நேரங்களில் பிராந்திய மனேஜராகவும் பணி புரிகின்றேன் என்பார்கள். அனுமதிபத்திரம் எடுத்த ஒரு முகவர் மட்டும் சட்டரீதியாக உடன்படிக்கை யில் கைச்சாத்திட அவர்கள் கீழ் அனுமதி பத்திரம் இல்லாத பலரும் பணி புரிவார்கள். அவர்களின் தீவிரமான ஆயுள் காப்புறுதி முகவர் தொழில் என்பது மக்கள் மத்தியில் ஒரு விசித்திரமான பணியிலேயே தொடரும். ஒழுங்கான உடன்படிக்கையாக உருவாக்கப் படாத முகவரின் தப்பினால் மரணத்தின் பின்பு நட்டஈடும் தவறியிருந்தது. அவர்கள் மாத்திரமல்ல.

விற்பனை முகவர் தொழில் செய்வோர் ஏனைய சிலரும் தங்கள் வருமானத்தினை முதல் கொண்டே தொழிலில் ஓடுகின்றனர் வாடிக்கையாளரின் பாதிப்புகள் என்பது அவர்களுக்கு புரியாது. சிறிது காலத்தின் பின்பு காப்புறுதி முகவரால் பாதிப்படைந்த அப்பாவிகள் உண்மை நிலைமையினை புரிந்து கொள்ளும் போது விரக்தி கொள்வார். விரக்தியின் முடிவில் மக்களின்



சிவ. பஞ்சலிங்கம் B.Com.,
(Licensed Insurance Broker)
காப்புறுதி சம்பந்தமான ஆலோசனைகளுக்கு:
416.321.0999

தொடர்ச்சி 14ஆம் பக்கம்

MOHAN
HOMEOPATHIC CLINIC
& MASSAGE CLINIC
mhc

• கழுத்து, முதுகு நோவு
• வாகன விபத்து
• மன அழுத்தம்
• விளையாட்டுக் காயங்கள்
• தலையிடி, தலைவருத்தும்

போன்ற நோய்களிற்கு அழையுங்கள் டாக்டர் ஜே. மோகன்



Dr. J. Mohan
D.H.M.S., N.H.C.

WE OFFER CONSULTATION
REGARDING ALL HEALTH PROBLEMS INCLUDING:

• STRESS
• SKIN PROBLEM
• RESPIRATORY PROBLEMS
• DIGESTIVE PROBLEMS
• VARICOSE VEINS
• BACK PROBLEM /NECK PROBLEM
• TENNIS ELBOW PROBLEM
• TREAT WITH MASSAGE THERAP
• ALLERGIES
• SEXUAL PROBLEMS
• SEXUAL PROBLEMS
• CHOLESTEROL
• TUMOR
• FOOT PROBLEM

HOMEOPATHIC TREATMENT ABOUT FOLLOWING

| | | | |
|---|---|---|---|
| Cough | Tonsillitis | Migraines | Prostatitis |
| Flu | Gout | Hair Loss | Obesity |
| Depression | Arthritis | Diabetes | Hemorrhoids |
| Anxiety | P.M.S | Cystitis | Stumatitis |
| Asthma | Leucorrhea | Cancer | Colitis |

Also other Acute & Chronic Problems
HOMEOPATHIC PRACTITIONER

TEL: 416-298-7537/416-291-3022

5200 Finch Ave, East Suite 210
At Middle Field, Scarborough, M1S 4Z4

# கழுகுடன் ஒரு பேட்டி (போட்டி)

## ஓடும் நீர் உறைவதில்லை 178

மரக்கிளை ஒன்றில் அமைதியாக அமர்ந்திருந்த கழுகைப் பார்த்து 'ஏ கழுகே!' என்றேன்.

அங்கும் இங்குமாக தலையை அசைத்துவிட்டு அமைதியானது கழுகு.

'ஐந்தறிவு ஜென்மமே!, அழைப்பது ஆறறிவு கொண்ட மனிதன்' என்றேன்.

அகன்று விரிந்திருந்த கண்களை மூடிக்கொண்டு அமைதியின் அடுத்த நிலைக்குச் சென்றது கழுகு.

கழுகின் அமைதி என்னை அலட்சியப்படுத்துவதாக இருந்தது.

'உன்னை விட உயரத்தில் மனிதன் (விமானத்தில்) பறப்பதால் உனக்குள் ஏற்பட்ட பொறாமை தானே உன்



அமைதிக்குக் காரணம்' என உரக்கக் கேட்டேன்.

ஓரிரு நிமிடங்களாகியும் ஒரு பதிலும் கிடைக்கவில்லை

'உண்மையை ஏற்றுக்கொள்ளும் பக்குவம் உனக்கு ஏது?' எனக் கூறிவிட்டு ஊமையானேன் நான்.
ஒரு சில வினாடிகள் கழிந்தது.

'கூப்பிட்டாயா?' என்றொரு குரல். கழுகின் குரல் தான் அது.

ஆம் என்றேன் நான்.

என் செவிப்பறை சிதறச் சிரித்துவிட்டு

'ஆறறிவு மனிதா! நீ பறப்பதில்லை ஆனால் பறப்பதாக நினைக்கிறாய்' என்றது கழுகு.

'ஏன் அப்படிச் சொல்கிறாய்?' என்றேன்

'பறப்பதற்கு முழுமையான சுதந்திரம் வேண்டும்' என்றது கழுகு

'முழுமையான சுதந்திரம் மனிதனிடம் இருக்கிறதே' என்றேன்

மீண்டும் சிரிப்பதற்கு வாயைத் திறந்தது கழுகு. மேலும் ஒரு செவிப்பறை அதிர்வைத் தாங்க முடியாததால் 'சிரிக்காதே,

முழுமையான சுதந்திரத்துக்கு வழி என்ன?' என்றேன்

'சுவடுகளைத் தவிர்த்துவிடு' என்றது கழுகு.

பறவைகளின் சுதந்திரத்துக்கு அடிப்படையாக அமைவது அவை தமது சுவடுகளைப் பதிவு செய்வதில்லை. மனிதனின்

சுவடுகள் பதியப்படும் வரை, பதியப்படும் சுவடுகள் பின்பற்றப்படும் வரை சுதந்திரம் என்பது மனிதனுக்கு ஒரு கனவு மட்டுமே.

அன்பார்ந்த விளம்பரம் வாசகர்களுக்கு: வாழ்வியல் சார்ந்த எனது ஆக்கங்கள் எழுத்து வடிவில் 'விளம்பரம்' பத்திரிகையிலும் ஒலிவடிவில் கீதவாணி வானொலியிலும் இடம்பெறுகின்றன. இயலுமான வரை இவற்றை உங்கள் உற்றார், உறவினர், நண்பர்களுடன் பகிர்ந்து கொள்ளுங்கள். -
நன்றியுடன் KG Master

**KG Master:**
www.kgmaster.com
www.facebook.com
kgmaster.lifecoach

# தியடோர் பாஸ்கரனுக்கு இயல் விருது - 2013

கனடா தமிழ் இலக்கியத் தோட்டம் வருடா வருடம் வழங்கும் இயல் விருது இவ்வருடம் (2013) திரு சு. தியடோர் பாஸ்கரன் அவர்களுக்கு வழங்கப்படுகிறது. இவர் தமிழ் எழுத்தாளர், தமிழ் திரைப்பட வரலாற்றாளர் மற்றும் சூழலியல் ஆர்வலர் ஆவர். இந்த விருதைப் பெறும் 14வது எழுத்தாளர் இவராகும். இதற்கு முன்னர் இந்த விருது சுந்தர ராமசாமி, வெங்கட் சாமிநாதன், ஜோர்ஜ் ஹார்ட், ஐராவதம் மகாதேவன், அம்பை, எஸ்.பொன்னுத்துரை, எஸ்.ராமகிருஷ்ணன், நாஞ்சில்நாடன் போன்றவர்களுக்கு வழங்கப்பட்டிருக்கிறது.



தாரபுரத்தில் பிறந்த சு.தியடோர் பாஸ்கரன் சென்னை கிறித்துவக் கல்லூரியில் முதுகலைப்பட்டம் பெற்றார். நாற்பதாண்டுகளாக சுற்றுச்சூழல் பற்றியும், சினிமா பற்றியும் தமிழிலும் ஆங்கிலத்திலும் எழுதி வருகின்றார். உயிர்மை பதிப்பகம் 'இன்னும் பிறக்காத தலைமுறைக்காக (2006)', 'தாமரை பூத்த தடாகம் (2008)' வானில் பறக்கும் புள்ளெலாம் (2011) ஆகிய நூல்களைப் பதிப்பித்தது. உல்லாஸ் கரந்தின் The Way of the Tiger என்ற நூலை 'கானுறை வேங்கை' (காலச்சுவடு 2006) என்ற தலைப்பில் மொழிபெயர்த்திருக்கின்றார். காட்டுயிர் பற்றி இவர் எழுதிய The Dance of the Sarus (OUP) 1996 இல் வெளிவந்தது. சென்ற ஆண்டு பெங்குயின் பதிப்பகம் இவரை தொகுப்பாசிரியராகக் கொண்டு The Sprint of the Blackbuck நூலை 2009 இல் வெளியிட்டது. தமிழ்நாட்டில் மதிப்புறு காட்டுயிர் காவலராக பணியாற்றியிருக்கின்றார். இயற்கைக்கான உலக நிதியகத்தில் (WWF-India) அறங்காவலராக உள்ளார். 1980இல் வெளிவந்த இவரது நூல் Message Bearers (Cre-A) தமிழ்த்திரை ஆய்வில் முன்னோடி புலமை முயற்சியாக கருதப்படுகின்றது. தமிழ்சினிமா பற்றிய The Eye of the Serpent நூலுக்காக தேசிய விருதான ஸ்வர்ண கமல் விருதை 1997இல் பெற்றார். இந்நூலின் மொழிபெயர்ப்பு பாம்பின் கண் 2012இல் வெளிவந்தது, தமிழில் சினிமா பற்றி மூன்று நூல்கள் எழுதியுள்ளார். 2003இல் தேசிய திரைப்பட விருதுகள் தேர்வுக் குழுவில் ஒரு நடுவராக இருந்தார். ஐ.நா. சபையின் சார்பில் கென்யா நாட்டில் இரண்டு மாதம் ஆலோசகராக பணியாற்றினார் போஸ்ட்மாஸ்டர் ஜெனரலாகப் பணியாற்றி ஓய்வு பெற்றபின், சென்னை ரோஜா முத்தையா ஆராய்ச்சி நூலகத்தின் இயக்குநராக மூன்றாண்டுகள் (1998 - 2001) பணியாற்றினார். மனைவி திலகாவுடன் பெங்களூரில் வசிக்கின்றார், இவர்களுக்கு ஒரு மகள் ஒரு மகன் உண்டு.

இயல் விருது கேடயமும் 2500 டொலர் பணப்பரிசும் கொண்டது. விருது வழங்கும் விழா ரொறொன்ரோவில் ஜூன் மாதம் வழமைபோல நடைபெறும்.

BrokerTeam INSURANCE SOLUTIONS INC.
DENNIE CHAN MBA
Associate Broker
On your side
•We represent over 10 insurance companies and offer the best premium
•House & Auto, Business, Condo
•Get a free quote today and see how you can save
Bus: 905.415.1188 Ext.120
Fax: 905.475.6448
Markham Branch
8787 Woodbine Ave, #218
Markham, ON L3R 9S2
dennie313@gmail.com
www.BrokerTeam.ca
Cell: 647.293.6980

# ஆயுள்...

## 12ஆம் பக்கத்தொடர்ச்சி

நலன் கொண்டு தொழில் செய்வோரையும் அதே கண்கொண்டே நோக்குவார்.

ஆயுள் காப்புறுதியின் தந்தை திரு. இலிசூர் றயிற் (Mr. Elzur Wright) குறிப்பிடும் வார்த்தை. "ஆயுள் காப்புறுதியின் தந்தை" (Father of life insurance) என குறிப்பிடப்படும் திரு. இலிசூர் றயிற், அமெரிக்காவில் 'கொண்னெக்ரிகற்' (Connecticut) என்னும் மாநிலத்தில் பிறந்த ஒரு தலை சிறந்த கணிதமேதை. (பிறப்பு - பெப்ரவரி 12, 1804 - இறப்பு - நவம்பர் 22, 1885) அதேநேரம் அமெரிக்காவின் கறுப்பின அடிமைத்தளையினை அறுக்க ஜனாதிபதி ஆபிரகாம் லிங்கனுடன் சேர்ந்து செயல்பட்ட ஒரு சமூக சீர்திருத்தவாதி. (Abolitionist - anti slavery leader)

ஆயுள் காப்புறுதியின் விலைகளை தீர்மானிக்கும் கணித கோட்பாடுகளை பல புள்ளி விபர காரணிகளை அடிப்படையாக வைத்து உருவாக்கியவர். (Father of life insurance for his pioneering work on actuarial tables) ஆயுள் காப்புறுதி தொடர்பான கணித கோட்பாடுகளை உருவாக்கிய மேதை (famous insurance actuary) என்பது மட்டுமல்லாமல் காப்புறுதி ஒழுங்கு விதிகளையும் உருவாக்கியவர். அவரது கணித, தத்துவ கோட்பாடுகளை அடிப்படையாக வைத்தே இன்று உலகம் முழுவதும் உள்ள பல்கலைக்கழகங் களிலும், காப்புறுதி கம்பனிகளிலும் புதிய புதிய காப்புறுதியின் கணித கோட்பாடுகள் உருவாக்கப்படுகின்றன.

வாடிக்கையாளர்களை நோக்கி செய்யும் முகவர் தொழில் என்பது எப்படியிருக்க வேண்டும் என்பதனை தமது காப்புறுதி கோட்பாடுகள் தத்துவங்கள் என்னும் நூலில் பின்வருமாறு குறிப்பிடுகின்றார்.

1. காப்புறுதி தொழிலில் ஆற்றலும், அறிவும் திறமையும் இருத்தல் வேண்டும். தொடர்ந்து அதனை வளர்த்துக் கொண்டும் இருத்தல் வேண்டும்.

2. வாடிக்கையாளரின் தேவையினை நிலமையினை அறிந்து சரியான தீர்வினை சிபார்சு செய்ய வேண்டும்.

3. காப்புறுதி தொழில் என்பது ஒழுக்கம் நன்னெறிகளுடன் பிணைக்கப்பட்டதாக இருத்தல் வேண்டும்.

4. காப்புறுதி தொழில் என்பது மக்களுக்கு நன்மையினை வழங்குவதாக இருக்க வேண்டுமே தவிர எந்த சந்தர்ப்பத்திலும் தீங்காக உருவாக கூடாது.

5. அப்பாவி மனிதன் ஒருவன் தங்கள் காப்புறுதி பணியினால் மனமுடைந்து விரக்தி அடையக்கூடாது.

இப்படி ஏராளமான காப்புறுதி நன்னெறி கோட்பாடுகளை, மக்கள் மத்தியில் நின்று சந்தைப்படுத்தும் முகவர்களுக்கு அறிவுரையாக தமது நூலில் குறிப்பிட்டுள்ளதுடன் இறுதியில் வெற்றி என்பது இந்த கோட்பாடுகளின் அடிப்படையில் தங்கியுள்ளது எனவும் குறிப்பிட்டுள்ளார்.

### ஆயுள் காப்புறுதிகளில் பாதிக்கப்பட்டவர்கள்... தீர்வு!



பொதுவாகவே பாதிக்கப்படுபவர்கள் ஏராளம். அதனை வெளிச்சத்துக்கு கொண்டு வருபவர்கள் மேலே செய்தியில் குறிப்பிடப்பட்டது போல ஒரு சிலர் மட்டுமே.

1. முகவர் ஒருவர் மோசடி செய்தால் முறைப்பாடு செய்து, விசாரணைகளையும் நடவடிக்கைகளையும் முன் எடுப்பவர்கள் அவர்களுக்கு அனுமதிபத்திரம் வழங்கும் 'ஒன்ராரியோ நிதி சேவைகள் சபை'

2. முகவரால் நிதியியல் ரீதியாக பாதிக்கப்பட்டவர் நீதித்துறையின் முன்பு போய் அதை நிரூபிக்கும்போது அவரது முகவருடைய தொழில் பொறுப்பு காப்புறுதி அவரது தப்புக்காக பாதிக்கப்பட்ட அப்பாவி மனிதனுக்கு கை கொடுக்கிறது.

3. ஆயுள் காப்புறுதி கம்பனிகள் மீது ஏதாவது முறைப்பாடுகள் பிரச்சினைகள் வந்தால் அதனை விசாரித்து தீர்வு வழங்க ஒரு நியாய சபை இயங்குகின்றது அதுவே Canadian Life & Health Insurance Association.

4. சட்டப்படியான ஆயுள் காப்புறுதி நிறுவனங்கள் வங்குரோத்து நிலைமைக்கு செல்லும் என்ற அச்சம் தேவையில்லை. நிதி அமைச்சு அதனை கண்காணிக் கின்றது. அதனையும் மீறி நட்டமடைந்தவர்களுக்கு உள்ளது ஒரு நட்டஈடு சபை. அது Assures Insurance Compensation.

காப்புறுதி தொழிலில் 18 வருடங்களாக தொழிலில் செய்யும் என்னை போன்ற பலர் ஆயுள் காப்புறுதியின் தந்தை திரு. இலிசூர் றைற்ஸ் வகுத்த கோட்பாட்டின் படி நின்று பணிபுரிகிறார்கள்.




# அல்சர் குணமாக இயற்கை மருத்துவம்

## நீண்டநாள் வாழ நினைத்ததை அடைய நோய் தடுக்கும் வழிமுறைகள்

நீரிழிவு, இரத்த அழுத்தம், உடல் பருமல் போல அல்சர் நோயும் இப்போது சர்வசாதாரணமாகி விட்டது.

### அல்சர் எதனால் உண்டாகின்றது.




1. பொதுவாக பசித்ததும் வயிற்றில் அமிலம் சுரக்கத் தொடங்கும். அந்நேரம் சாப்பாட்டைத் தவிர்த்தால் வயிற்றில் புண் வரலாம். குறிப்பாக காலை உணவை தவிர்ப்பதாலும், நேரம் தவறி உண்பதாலும் வயிற்றில் புண் வரலாம்.



2. விரதம் இருத்தல், பட்டினி கிடத்தல் போன்றவற்றால் வயிற்றில் வாயுவின் சீற்றம் அதிகரித்து குடலில் பல உபாதைகளை ஏற்படுத்தும். இதனால் நாளடைவில் குடல் புண்களை உருவாக்கும்.

3. தூக்கமின்மை, மன அமைதியின்மை, மன அழுத்தம், தீராத கவலை போன்றவற்றாலும் அல்சர் வரலாம்.

4. புகை பிடித்தல், மது அதிகம் அருந்துதல் போன்ற புறக் காரணிகளாலும் அல்சர் உருவாகலாம்.



5. பல நோய்களுக்கான மருந்துகள், மாத்திரைகளை அதிகமாக உட்கொள்வதாலும் இந்நோய் வரலாம்.

6. கலப்பட உணவு, அசுத்தமான குடிநீர், அசுத்தமான காற்றோட்டமுள்ள சூழல் போன்றவற்றாலும் வயிற்றுப்புண் ஏற்படலாமென்று மருத்துவ ஆய்வுகள் கூறுகின்றன.

7. முக்கியமாக வெறும் வயிற்றில் சுரக்கும் பித்த நீர் குடலில் தங்கி விடுவதே அல்சர் ஏற்பட முக்கிய காரணம் என்று சித்த மருத்துவம் கூறுகின்றது. இந்த பித்த நீரால் செமிபாடு மந்தமடைகிறது. குடலில் வாயு உருவாகி வயிறு பருமலடைந்து வலியையும் உருவாக்குகின்றது.

மேற்கண்ட காரணங்களால் குடல் புண் என்ற அல்சர் நோய் உருவாகும் போது சிலருக்கு மலம் கறுப்பாக இறுக்கத்துடன் வறண்டு போய் பெரும் வலியுடன் வெளியேறும். இதன் காரணம் செமிபாட்டுக் கோளாறு தான். மற்றும் சிலருக்கோ சாப்பிட்ட பின் சிறிது நேரத்தில் மலம் வெளியேறும்.

அன்றாட வாழ்க்கை பிரச்சினைகளும் ஓய்வின்றி உழைக்கும் நடுத்தர வயதினருக்கு மன அமைதியின்மையால் தூக்கமின்மையும் இயல்பாகவே வந்து விடுகின்றன. வயது முதிர்ந்தவர்களுக்கோ வாழ்வில் நிறைவேறாத ஆசைகளும் கனவு களும் துயரத்தை உண்டாக்கி தூக்கத்தைக் கெடுத்து விடும். மன அமைதியின்மையும் தூக்கமின்மையும் அல்சருக்கு முக்கிய காரணங்களாகின்றன. எப்படி?

மனம் அமைதியிழந்தால் தூக்கம் தானாகத் தொலைந்துவிடும். அப்போது உண்ட உணவு செரிக்காது வயிற்றின் எல்லா இயக்கமும் சீர்குலைகின்றது. பித்த நீர் அதிகமாக உற்பத்தியாவதால் அல்சர் மட்டுமன்றி அடுத்த கட்டமாக மூலச்சூடும் ஏற்படுகிறது. மனிதர்களுக்கு அமைதியும் தூக்கமும் தான் அருமருந்துகள். அதே நேரத்தில் அவை இரண்டும் கெட்டால் அவைதான் நஞ்சாகி விடுகின்றன. ஓய்வில்லாத உழைப்பும் உறக்கமின்மையும் அல்சர் நோய்க்கான அடிப்படைக் காரணமா கின்றன. பெண்களைப் பொறுத்தவரை மாதவிடாய் காலங்களில் ஏற்படும் சூதக வாயுவானது குடலில் தங்கி பொருமலை ஏற்படுத்துகின்றது. இதனால் குடலானது உஷ்ணத்தால் பாதிக்கப்பட்டு புண்ணாகின்றது.

பொதுவாக அல்சருக்கான மேலே சொன்ன அனைத்துக் காரணங்களும் வயிற்றைப் பாதிக்கும் முன்னர் கல்லீரலைப் பலவீனமடையச் செய்து அதன் இயக்கத்தைக் கெடுத்து விடுகின்றன.

### அல்சர் பாதிப்பைத் தவிர்க்க

1. புகைபிடிக்கக் கூடாது.
2. கோப்பி போன்றவற்றை அதிகம் குடிக்கக் கூடாது.
3. வயிற்றுவலியை உருவாக்கும் உணவு வகைகளைத் தவிர்க்கவும்.
4. அதிகமாகச் சாப்பிடக் கூடாது.
5. பட்டினி கிடக்கக் கூடாது.
6. காரம், எண்ணெயில் பொரித்த உணவு உண்பதை குறைக்க வேண்டும்.
7. பின் இரவு விருந்துகளைத் தவிர்க்க வேண்டும்.
8. சாப்பிட்டவுடன் முன்பக்கமாக சாய்வதோ, வளைவதோ கூடாது. அப்படிச் செய்தால் சாப்பிட்ட உணவு தொண்டைக் குழிக்குள் வந்து சேரும். இதனால் நெஞ்செரிச்சல் ஏற்படலாம்.
9. இரவில் அதிக நேரம் விழித்திருக்கக் கூடாது.
10. மனநிலை தடுமாறி கவலைப்படக் கூடாது.
11. எதிலும் அவசரப்படக் கூடாது.
12. சாப்பிட்டு இரண்டு மணி நேரத்தினுள் படுக்கலாகாது.
13. குறைந்த அளவில் அடிக்கடி சாப்பிடலாம்.
14. மருத்துவர் கூறிய மருத்துவ முறையை ஒழுங்காகக் கடைப்பிடிக்க வேண்டும்.
15. இறுக்கமாக உடை அணியக் கூடாது.
16. படுக்கும் போது தலைப்பகுதி சிறிதளவு உயர்ந்து இருக்க வேண்டும்.
17. மன இறுக்கத்தை விடுத்து மன மகிழ்ச்சியோடு இருக்க வேண்டும்.

### அல்சர் குணமாக யோகாசனம், மூச்சுப்பயிற்சி

யோகாவின் சில மருத்துவமுறையிலான பயிற்சிகளே அல்சரை முழுமையாக மாற்றும் சக்தி வாய்ந்தது. அவற்றில் சில

1. நவகாசனம் (Boat pose)
2. சர்வாங்காசனம் (Shoulder stand)
3. புஜங்காசனம் (Serpent Pose)
4. உட்டியானா பந்தம்

### மூச்சுப் பயிற்சி

1. நாடி சுத்தி 2. கபாலபாதி
3. சித்தாரி என்பன

இவற்றை தினமும் ஒரு யோகாசன ஆசிரியரின் வழிகாட்டலில் பயிற்சி செய்து வந்தால் ஒரு சில வாரங்களிலே மிகுந்த பலனை அடையலாம்.







416.289.2033 after 7:00pm
416.617.5721



# NIRMALA'S CAKE & BRIDAL CREATION



BRIMLEY & STEELES
BIRCHMOUNT & FINCH

- Bridal Dressing
- Hair dressing.
- Cakes for all occasions

Wedding Cake, Birthday Cake, Baby Shower Cake, Chocolate cake.
All kinds of cake for all occasions.

- Bridal dressing & Make up Hair Styles
- Hair styles.
- Threading, facials.
- Waxing, Manicure, pedicure.
- Head Massage



Contact: 647.448.0281



# Industrial Automation Technology

- **Emerson Control Techniques** ladder logic, with CTnet communication and Modbus TCP/IP
- **Allen Bradley RSLogix 5000** Ladder logic, With Ethernet IP communication
- **HMI** development, utilizing Modbus TCP/IP and Ethernet IP communication
- **Siemens**
- **Omron**

Training with Real World Componant (Motors, Sensors, VFT, Encoder, PLC, Beckhoff, Conveyor, Analog I/O, Safety Switch)

**வேலைவாய்ப்புக்கள்**

| | |
|---|---|
| Automation Technician | Electrical Control Technician |
| Maintanance Technician | Electrical Drafter |
| Automation Designer | Electrical Designer |
| Instrument Technician | Control System Designer |

**Next information session - February 22nd, 2014 at 11 AM**
**Please call for your place**

2005க்குப்பின் EI அல்லது Maternity எடுத்தவர்கள் இதை இலவசமாகக் கற்பதற்கு தகுதி உடையவராகலாம்
நீங்கள் 42 வாரத்துக்கு 1. Living expenses, 2. Daycare fees 3. Transport expenses பெறுவதற்கு தகுதியுடையவராகலாம்

**COVERS TUITION AND LIVING EXPENSES UP TO $28,000**

**beta College**
of Business & Technology

Tel: **416.449-BETA**(2382)
**www.betacollege.ca**
info@betacollege.ca
1085 Bellamy Road, Unit 208, (Bellamy & Ellesmere), Scarborough, ON, M1H 3C7





# ஒன்ராரியோவை உலுக்கிய உறைபனி



குறிப்பு: 22 – 12 – 2013ல் ஒன்ராரியோவில், உறைபனியால் ஏற்பட்ட பாதிப்பு பற்றிய கவிதை

கருணை உள்ள கனடா நாட்டை
காரிருளில் கலங்க வைத்தது கடுங்குளிர்
காலம் செய்த கோலமா? இல்லை
கடவுள் தந்த கடும் தண்டனையா?

ஒளிமயமான ஒன்ராரியோ நகரம்
விழியிழந்த குருடன் போலானது ஓரிரவில்
அழிவு அடைந்த ஆலயம் போல்
பழிசுமந்து நின்றது பாதி இரவில்
உப்பில்லாப் பஞ்சத்தால் உறைந்துபோனது சாலைகள்
உண்டி கிடைக்காமல் ஊரூராய் அலைந்தனர்
உறங்க இடம்தேடி உறவின்வீடு நாடினர்
உருக்குலைந்து போனது உறங்கா நகரம்

கொண்டாட்டம்செய்ய எண்ணியோர் திண்டாடி நின்றனர்
கொடுத்த வாக்கை காப்பாற்ற முடியாமல்
குழம்பி நின்றனர் உணவக உரிமையாளர்
கொண்டல்காற்று வீசிய குடியிருப்பு போல்
பனியின் பாரத்தால் பாறிவிழுந்தது பசுமரங்கள்
பயணம் செய்யமுடியாமல் பாதைகள் பங்கமானது
பனையால் விழுந்தவனை மாடேறி மிதித்ததுபோல்
பாழும் பனிவந்து பாழ்படுத்தி விட்டது

தொலைபேசி இல்லை தொலைக்காட்சி இல்லை
தொலைதூரம் போக தொடர்வண்டி இல்லை
தொடர்மாடி மக்களுடன் தொடர்பு ஏதுமில்லை
தொழில் தேடிப்போக தோதான தெருவில்லை
பணக்காரன் என்றோ பதவியுள்ளவன் என்றோ
பாட்டாளி என்றோ பாமரன் என்றோ
பாகம் பிரிக்காமல் பந்தாடிய பனிப்புயலே
பாசமாய் கேட்கிறோம்
பதுங்கிநிற்காமல் பறந்துபோ!



**- மார்க்கம் சந்திரன்**

# சார்பியல் - 38

## விஞ்ஞானத்தின் புதுமை எளிமையாக



இன்று சார்புக் கொள்கையின் ஊடாக வெளியில் வந்த இயற்கையின் அதிசய விளைவான மாயவிண்மீன்கள் பற்றித் தெரிந்து கொள்வோம்.

### மாய விண்மீன்

எடிங்ரனின் ஒளியின் பாதை கதிரவனை அண்மித்து வருகையில் வளைவுறுகின்றது என்பதை உறுதிப்படுத்தியதும், இவ்விளைவின் காரணமாக வரக்கூடிய வானியற் தோற்றப்பாடுகள் இயற்பியல்வாதிகளிடம் மெதுமெதுவாக தெரியத் தொடங்கின. அவற்றில் மிகவும் அவர்களை ஈர்த்துக் கொண்ட இரண்டு விடயங்களை இப்போது பார்ப்போம். மாய விண்மீன்கள், ஈர்ப்பு வில்லை என்ற அவ்விரண்டு விளைவுகளில், முதலில் மாயவிண்மீன்கள் பற்றித் தெரிந்து கொள்வோம். கதிரவனுக்கு அருகில் ஒளியின் பாதை வளைவுறுவது போன்றே, மிகப் பெரிய திணிவுடைய வின்மீன்களின் அருகிலும் நாற்பரிமாண வெளிநேரமானது பெரியதாக வளைவுற்று காணப்படும். அதனால், அவ்விடங்களில் ஒளி வளைவுற்றுத் தனது பாதையை மாற்றிக் கொள்ள வேண்டி வருகின்றது. இந்த விளைவின் தோற்றப்பாடு மாய விண்மீன் ஒன்றினை எங்களுக்குக் காட்டுகிறது. அதனை விளங்கிக் கொள்வதற்கு கீழே உள்ள விளக்கப் படத்தினைப் பாருங்கள்.




படத்தில் A என்னும் விண்மீனில் இருந்து வரும் ஒளிக் கதிரானது, A யில் இருந்து நேரான பாதையிற்றான் வருகிறது. X எனும் விண்மீனின் அருகே A யின் ஒளிக்கதிர் வரும்போது X இன் வலிமையான ஈர்ப்பின் காரணமாக தனது பாதையை விலத்திப் பயணப்படுகின்றது. இவ்விதம் வளைவுற்ற ஒளிக்கதிர், விண்மீன் X ஐக் கடந்ததும் மீண்டும் நேரான பாதையில் பயணப்படுகிறது. இவ்விதம் வளைவுற்று, புதிய பாதையால் வருகிற ஒளிக்கதிரே புவியினை வந்தடைகிறது. இனி, புவியில் இருக்கும் ஒருவர் அவ்வொளியினைப் பார்க்கையில். அவருக்குச் சாதாரணமாகத் தான் காண்கிற ஒளியானது வளைந்து வந்ததினால் தனது பாதையை மாற்றிவிட்டது என்பது தெரியாது. அவரைப் பொறுத்தவரையில் தான் காணும் ஒளியானது நேராக, B என்ற இடத்தில் இருந்து வருவதுபோல் இருக்கும். ஏனெனில் ஒளி நேர்கோட்டில்தான் பயணப்படும் என்பது சாதாரண வழக்கு இதனால் பூமியில் இருப்பவருக்கு ஒளியானது Bயில் இருந்து நேராக வருவதுபோல் தோற்றமளிக்க, அவர் Bயில் ஒரு நட்சத்திரம் இருந்து ஒளிர்வது போல் உணருவார். இது வானிலே நாம் காணும் எல்லா விண்மீன்களுக்கும் பொருந்துவதில்லை. என்றாலும் நாம் காணும் சில விண்மீன்கள் இந்த வியப்பூட்டும் விளைவிற்குட்பட்டு மாயமான தோற்றத்தினை, மாய விண்மீனைக் காட்டுகின்றன. 1919 மே 31ல் எடிங்ரன் குழுவினரும் அந்த அமாவாசை தினத்தில் நிகழ்ந்த முழுக் கதிரவ கிரகணத்தின் போது பகலில் படம் பிடித்துக் கொண்ட விண்மீன்களும் இந்த மாயவிண்மீன்களே. அவைதான் இந்தப் பெரிய உண்மையை வெளிக் கொண்டு வந்தது என்பதையும் நாமறிவோம். அடுத்த தடவையில் இந்நாட்களில் மிகவும் பிரபலமான ஈர்ப்பு வில்லை பற்றித் தெரிந்து கொள்வோம்.



- கனி -
416.261.1348
leptons@hotmail.ca

உங்களது கருத்துக்களை விளப்பரத்திற்கோ அல்லது எனக்கோ தெரிவிக்கலாம். எனது புதிய வெளியீடுகளாகிய புவியீர்ப்புப் பற்றிய வியப்பான விஷயங்கள், வியத்தகு விண்மீன்கள் ஆகிய நூல்களை விளம்பரம் காரியாலயத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

Seeking freedom from DEBT?
We offer Total Debt Free Solutions
Instant relief with one easy monthly payment. SAVE thousands of dollars.
- கடன் தொகையினை 80% வரை குறைத்து அதனை வட்டியின்றி ஒரு மாதத் தவணையில் கட்ட ஏற்பாடு செய்தல்
- We provide expert advice on how to consolidate and reduce debt payments safely without borrowing money
- பாதுகாப்பான முறையில் கடனை அடைப்பது பற்றிய அறிவுரையும் ஆலோசனையும் தரப்படும்
- We shield you from your creditors and offer you a guaranteed protection
- கடன் கொடுத்தவர்களின் அச்சுறுத்தல்கள், சட்ட நடவடிக்கைகளிலிருந்து பாதுகாப்பு
- We package a custom solution to protect all your assets including your hard earned property, vehicle, insurance, RRSP, TFSA, RESP, Shares
- உங்கள் சேமிப்பு, சொத்து, வாகனம், முதலீடுகள் பாதுகாப்பதிற்கு உரிய வழிமுறை செய்தல்
- We arrange a sensible Repayment Plan minimizing potential losses and avoiding bankruptcy

K.T. Keeran
Credit consultant
Debt Free Credit Solution Inc.
PHONE: 416.434.1522
MOBILE: 416.834.7227
FAX: 1.877.800.7899



Web: http://www.paycontrolled.ca
Email: keeran@paycontrolled.ca
ADDRESS:
SUITE #303, MILNER BUSINESS COURT,
TORONTO ONTARIO M1B 3C6



FREE initial consultation
SOLVE YOUR DEBT WORRIES WITH DIGNITY.
CONTACT DEBT FREE CREDIT SOLUTION FOR A FREE INITIAL CONSULTATION

# கடிதம்

முகவரி எழுத்து அப்பம்மாவினுடையது.
சந்தோசமும் அவசரமும் போட்டி போட்டன!

கடித உறை கிரீச்சிட்டது!
அதற்குள் குடங்கிக் கிடந்த கடிதம் குதித்து எழுந்தது!

மனம் கண்களை முந்தியது!

ஒரு நிமிடம் ... இரண்டு நிமிடம் ...

உள்ளம் வெதும்பியது ... உடல் குலுங்கியது ... கண்கள் கலங்கின!

'அப்பையா! ஐயோ அப்பையா! என்ரை அப்பையா!'

சோர்வு. மௌனம். சிந்தனை ...

சிறிது நேரத்தின்பின் கடிதத்தின் மிகுதியையும் படிக்கிறாள்.

'ஆனையிறவுத் தாக்குதலால் உன்னுடன் தொடர்புகொள்ள முடியவில்லை. அந்தச் சூழ்நிலையில் நீ இங்கு வந்திருக்கவும் முடியாது. உன்னுடைய திருமணப் படங்களைப் பார்க்க ஆவலாக இருந்தார். அதற்குள் கண்ணை மூடிவிட்டார். விதி அப்படி. தகப்பனை இழந்த பிள்ளை, தகப்பனை இழந்த பிள்ளை என்று சொல்லிச்சொல்லி உன்மீது உயிரையே வைத்திருந்தார்...'

கண்கள் குளமாகி எழுத்துக்களுக்குத் திரையிடுகின்றன. மீண்டும் குலுங்கிக் குலுங்கி அழுகின்றாள். எனினும் கடிதத்தைப் படிக்வேண்டும் என்ற ஆவல் ...

கண்களைத் துடைத்துக்கொண்டு தொடர்கிறாள் ...

'நீ நல்லாய் இருக்க வேண்டும், நல்லாய் இருக்க வேண்டும் என்றே எப்பொழுதும் கடவுளைக் கும்பிடுவார். கவலைப் படாமல் கணவருடன் சந்தோசமாக இரு. அப்பையா அவத்தைப்படாமல் போனது அவர் செய்த புண்ணியம். அவருந்தான் எங்கே போறது? உன்னுடன்தான் இருப்பார்.'

வாசித்து முடிக்கமுன் அப்பையா!

கடிதத்தை மடியினில் வைக்கிறாள். கண்ணீரைத் துடைக்கிறாள். உற்றுப் பார்க்கிறாள்.

அப்டியே!
அதே வேட்டி, சட்டை, சால்வை!
வயது போனாலும் வடிவான தோற்றம்!
அன்புக் கண்கள்! அரவணைக்குங் கைகள்!
வெற்றிலைக் காவிப் பற்கள் தெரியச் சிரித்தபடி அவர் அவளுக்கு முன்னாலே!
ஆம், அவரேதான்!

புறப்பட்ட வேளை அவர் சொன்னவை அப்படியே ஒலிக்கின்றன.

'கனடா குளிர்ப் பிரதேசம். உடை மாறினாலும் நடை மாறக் கூடாது! நடைக்குப் பெருமை தருவது ஒழுக்கம். அது உயிரினும் மேலாகப் பேணப்படவேண்டும். ஒழுக்கத்துக்கு அச்சாணி போல்வது கட்டுப்பாடு. நல்லவர் வாழ்க்கை கட்டுப்பாட்டோடு கூடியது. வெள்ளத்துக்கு எவ்விதம் அணை அவசியமோ அவ்விதம் சுதந்திரத்துக்குக் கட்டுப்பாடு அவசியம் ...

'உனக்குக் கடவுள் நல்ல கணவரைத் தந்திருக்கிறார். திருமணப் பதிவு இங்கு நடந்தாலும் அங்கு நடக்கப்போகும் திருமணந்தான் முக்கியம். அது நல்லபடி நடக்க இறைவன் அருள் புரிவான். நீ ஒன்றுக்கும் கவலைப்பட வேண்டியதில்லை ...

'எமது வாழ்க்கை முறை கட்டிய கணவனோடு காலம் முழுவதும் வாழ்வதுதான் பெண்ணுக்குச் சிறப்பு என்று கூறுகிறது. எங்கள் பிரிவு கொஞ்ச நாட்களுக்கு உன்னை வருத்தத்தான் செய்யும். போகப் போக எல்லாம் சரியாகிப்போய்விடும் ...

கவிஞர் வி. கந்தவனம்



'குடும்ப வாழ்க்கை எப்பொழுதும் குதூகலமாக இருப்பதில்லை. காலநிலையில் வெயில், மழை, சூறாவளி என்று மாற்றங்கள் வருவதுபோல குடும்பத்திலும் பிரச்சனைகள் வரக் கூடும். அவற்றை எல்லாம் சமாளிப்பதுதான் வாழ்க்கை. கணவனும் மனைவியும் கருத்தொருமித்து ஒருவருக்கொருவர் ஆதரவாக இருந்தால் எந்தச் சங்கடங்களையும் தாங்கிக்கொள்ளலாம். எந்தச் சிக்கலையும் இலகுவாகத் தீர்த்துக்கொள்ளலாம் ...

'இன்னும் ஒன்று... தமிழை மறந்துவிடாதே. தமிழுக்காக, தமிழ் மண்ணுக்காகவே உன் தந்தை உயிர் துறந்தவர் என்பதை மறந்துவிடாதே. தமிழின் பெருமை சொல்லி முடியாது. அங்குள்ள தமிழருக்குத் தமிழ் உணர்வை ஊட்டும் பணியில் ஈடுபடுவாயானால், அதுவே உன் தந்தைக்கு நீ செய்யும் கைம்மாறாக இருக்கும். இறந்த காலத்தை மறப்பவருக்கு வருங்காலம் இல்லை. பிறந்த மண்ணை மறந்தவருக்குச் சிறந்த வாழ்வு இல்லை ...

'சென்று வா! உனக்கு ஒரு குறையும் வராது!'

இப்படி ... ...
விமானநிலையத்தில் தனது போதனையை முடிக்க மனமில்லாமல் முடித்தார் முன்பு ஆசிரியத் தொழில் பார்த்த அப்பையா.

கட்டி அணைத்தல் .. .. முத்தமிடல் .. ..
பேர்த்தி அழுதல் .. ..
அவர் சால்வையால் வாயை மறைத்தபடி விம்முதல் .. ..

ஏதோ இப்பொழுது நடைபெறும் நிகழ்வினைப்போல அவர் வாயை மறைத்தக்கொண்டு விம்முவதைக் கண்டு இவள் முகத்தைப் பொத்திக்கொண்டு குலுங்குகிறாள்.

அவர் அன்று இவளுக்கப் பிரியாவிடை கொடுத்தார். எனினும் இவள் என்றுமே அவருக்குப் பிரியாவிடை கொடுத்ததில்லை.

சில மணித்துளிகள் ...

நிகழ்வு நின்றதே தவிர நினைவு நிற்கவில்லை. இறந்தகாலம் நிகழ் காலமாகிறது. தலை நிமிர்கிறது. கைகள் கண்களைத் துடைக்கின்றன. உதடுகள் அசைகின்றன ...

'அப்பையா! நீங்கள் எங்கும் செல்லவில்லை. என்னுடன்தான் இருக்கிறீர்கள். என்னுடன் தான் இருப்பீர்கள். உங்கள் புத்திமதிகள் என் வாழ்க்கையை வரையறை செய்யும். நீங்கள்தான் எனது வழிகாட்டி! எங்கள் குடும்பத்துத் தமிழ் உணர்ச்சி என்னுள்ளும் இருக்கிறது. தமிழின் பெருமையை இங்குள்ளவருக்குச் சொல்லி வருகிறேன். நான் இங்கு தமிழ் படிப்பிக்கிறேன், அப்பையா!'

# சிறந்த சிறுபத்திரிகை - காலம்

இலங்கை அரசியல் சூழலால், புலம்பெயர்ந்து உலகின் பல நாடுகளில் வாழும் தமிழர்களின் பண்பாட்டுப் படைப்பிலக்கிய சூழலுக்கு வழிவகுத்த இதழ்களில் "காலம்" முக்கியமானது. சுந்தர ராமசாமி, ஜி. நாகராஜன், அசோகமித்திரன், வெங்கட்சாமிநாதன் போன்ற தமிழகத்தின் முக்கிய எழுத்து ஆளுமைகளுக்கும் அ. முத்துலிங்கம், எஸ்.பொ., தெளிவத்தை ஜோசப் போன்ற இலங்கையின் மூத்த எழுத்தாளர்களுக்கும் சம வாய்ப்பு அளிக்கும் இதழ் இது. ஜி. நாகராஜனின் புகழ்பெற்ற படைப்பான "குறத்தி முடுக்கு" குறுநாவல் இந்த இதழில்தான் வெளியானது. அரசியல் பாகுபாடுகள், இலக்கிய பாகுபாடுகள் கடந்த இலக்கிய ஏடாக தன்னை இன்றும் நிலை நிறுத்தி இருக்கிறது "காலம்". பண்பாடு, கலை, இலக்கியம், அரசியல் என ஒட்டுமொத்த உலகத்தமிழர்களையும் இணைப்பதால் கூடுதல் முக்கியத்துவம் பெறுகிறது "காலம்". இதன் அசிரியர் செல்வம், யாழ்ப்பாணத்தைச் சேர்ந்தவர். இப்போது கனடாவில் வசிக்கிறார்.




Nantha Aiyadurai, B.Eng.
Real Estate Broker
Cell: 613 850 9931
கனடாவின் தலைநகர் ஒட்டாவாவில்
Buying or Selling
Relocation Service
Ottawa> > > < < < GTA

நந்தா ஐயாத்துரை
Coldwell Banker Sarazen Realty, Brokerage 2544 Bank St. Ottawa, Ontario K1T 1M9 Office: (613) 288-1999 Fax: (613) 288-1555

காப்புறுதியின் பயனைக் காலம் சொல்லும்

# மருத்துவப் பரிசோதனையற்ற காப்புறுதி!

## (Non Medical Insurance - Up to age 85)

உங்கள் காப்புறுதி நிராகரிக்கப்பட்டு விட்டதா?
கவலையை விடுங்கள்; இன்றே அழையுங்கள்...






**Chandran Rasalingam** CHS
President / Financial Advisor
**Bus: 416 321 6000 Ext. 400**
**Direct: 416 909 0400**

www.inforcelife.com
10 Milner Business Court, Suite 707
Scarborough ON M1B 3C6

Insurance Solutions for
**LIFE | HEALTH | GROUP**
Investment

iNFORCE LIFe
Financial Services Inc.

Desjardins · IA Industrial Alliance Insurance and Financial Services Inc. · IA Excellence Life Insurance Company · La Capitale · Assumption Life

சிறந்த ஆலோசனை! தெளிவான விளக்கம்!

# COMING.......

FWD

## Condominiums

10%

HomeLife Higher Standards

# HomeLife GTA Realty Inc., Brokerage*

## 5215 Finch Ave, E, #203, Toronto, ON : 416.321.6969

*Independently Owned & Operated

# "மக்கள் சேவையே மகேசன் சேவை"

உங்களுக்கேற்ற நல்லதோர் வீட்டை
தெரிவுசெய்து வாங்கவும் உங்கள் வீட்டை
நல்ல விலைக்கு விற்கவும் என்னை அழையுங்கள்

வீடு வாடகைக்கு கொடுக்க, பெற அழையுங்கள்

HomeLife
Galaxy Real Estate Ltd., BROKERAGE
INDEPENDENTLY OWNED AND OPERATED



## Kuna Kunathasan

Sales Representative
880 Ellesmere Road, Suite 204, Toronto, ON. M1P 2W6
**DIR : 416-994-3953**
BUS: 416-284-5555
FAX: 416-284-5727
kuna.kunathasan@hotmail.com




### Warden / Finch
3 + 1 Bedrooms, 2 Washrooms, New Doors, Hard Wood Floor & New Paint.




### Ajax Hwy 2 / Harwood
3+1 Bedrooms, 4 Washrooms
Sep. Entrance, Fenced Lot
Closed to GO Stn / HWY 401
New Furnace/New Singles.




### Danforth / Midland
2+1 Bedrooms, 2 Washrooms
Separate Entrance, Hardwood Floors, Close to GO Stn.
New Roof & Furnace




### Lawrence / Galoway
2 Bedrooms, 1 Washroom
All Laminate Floor,
Facing Ravine.




### Markham / Ellesmere
3 Bedrooms, 2 Washrooms
Separate Entrance, Fenced
Landscaped Yard, Hardwood Floors.




### Lawrence / Kingston
2 Bedrooms , 1 Washroom
Renovated Kitchen, Laminated floor on Main Floor
Closed to U.of. T, Centennial College.




### Markham / Lawrence
3 Bedroom, 1 Washroom- Main Floor
Living, Dinning and 2 B.R Hardwood floor
Walk To Markham/Lawrence Road,
Cedarbrae Mall And High School




### McCowan / Ellesmere
3 Bedrooms,1 Washroom in Basement, Separate Entrance.
Big Kitchen and New Washer and Dryer.




### Midland / Danforth
3 Bedrooms, 3 Washrooms
All Hardwood Floors,
Double Garage
Large Eat-in Kitchen

ஊரார் பிள்ளையை ஊட்டி வளர்த்தால் உங்கள் பிள்ளை தானே வளரும்

# புதிய அலை இயக்குனர்களிடம் தமிழ் கலாசாரப் புரிதல் இல்லை

## நேர்காணல்: வேல. ராமமூர்த்தி

கவிஞர் வ.ஐ.ச. ஜெயபாலனைத் தொடர்ந்து மீண்டும் ஒரு திவீர தமிழ் இலக்கியவாதி நடிகனாயிருக்கிறார். இசையமைப்பாளர் ஜீ.வி. பிரகாஷ் குமார் தயாரிப்பில் இயக்குனர் விக்ரம் சுகுமார் (பாலுமகேந்திரா மற்றும் வெற்றிமாறனின் உதவியாளர்) இயக்கத்தில் வெளிவந்திருக்கும் 'மதயானை கூட்டம்' திரைப்படத்தில் வில்லனாக அறிமுகமாகி யிருக்கிறார், வேல. ராமமூர்த்தி. 'விளம்பரம்' பத்திரிகைக்காக வேல. ராமமூர்த்தியைச் சந்தித்தோம்.



**நீங்கள் நடிகரானது எப்படி?**

'மதயானை கூட்டம்' இயக்குனர் விக்ரம் சுகுமாரன் என்னுடைய கதைகளின் தீவிர ரசிகர், சின்ன வயசிலே இருந்து என் கதை-களை படித்து வருபவர் என்று தெரிகிறது. ஆனால், நாங்கள் நேரில் சந்தித்ததே இல்லை. இந்தப் படம் ஆரம்பிப்பதற்கு மூன்று மாதங்களுக்கு முன்னால் சந்தித்தோம். அந்த படத்தில் வரும் வீரத்தேவன் கேரக்டரில் என்னை நடிக்கச் சொல்லி கேட்டார். எனக்கு நடிக்கத் தெரியாது என்றேன். சில நாட்களுக்குப் பிறகு, கோவா உலகப் பட விழாவுக்கு சென்றுவிட்டு, ஊருக்குத் திரும்பும் வழியில் சென்னை வந்தேன். யதார்த்தமா அவர் போன் பண்ணினார். சென்னையில்தான் இருக்கிறேன் என்றதும் நேரில் வந்தார். 'மதயானைக் கூட்டம்' வீரத்தேவன் கதாபாத்திரத்தை விவரித்தார். என் கதைகள் படிக்கிற எல்லாருக்கும் தெரியும் அதில் வருகிற மனிதர்கள் என் மண்ணில் வாழும் மக்களின் சதையும் ரத்தமும் கலந்த கதாபாத்திரங்களாகத்தான் இருப்பார்கள். அவர் சொன்ன அந்த வீரத்தேவன் மாதிரி நூற்றுக்கணக்கான வீரத்தேவன்களை என் கதைகளில் உருவாக்கி இருக்கிறேன். அந்த விதத்தில் அந்தப் பாத்திரம் எனக்கு ரொம்ப பிடித்தது. இப்படித்தான் நடிகனானேன்.

**தொடர்ந்து நடிக்கிற எண்ணம் உண்டா?**

விக்ரம் சுகுமாரன் மாதிரி இயக்குனர்களும் வீரத்தேவன் மாதிரி முக்கியமான பாத்திரங் களும் கிடைத்தால் நிச்சயம் நடிப்பேன்.

- சிவதானு -

தொடர்ச்சி 29ஆம் பக்கம்



# ....பிடித்தவர்கள்

## தொடர்கதை

### இக்கதையின் பெயர்கள், சம்பவங்கள் யாவும் கற்பனையே

ாசியம்மானின் வீட்டிலையிருந்து கந்தசாமியின் வீடு கிட்டத்தான் இருந்தது.

'குஞ்சியாச்சி வளவுக்குள்ளாலை விழுந்து, ஞானியக்காவின் பனையளுக்காலை வந்து மொட்டையன் வளவுக்குப் பக்கத்தாலை வாற ஒற்றையடிப் பாதையாலை வாறதெண்டால் ஒரு பத்து நிமிசத்திலை வந்திடலாம். இந்தப் பொடியன் கேட்டாத்தானே' செல்லாச்சி மாமிக்கு மனம் அங்கலாய்த்தது.

'சரிரிரி.. காலமை வெள்ளனத்தாலை வெளுக்கிட்ட நீங்கள், பிறகேன் இவ்வளவுக்குச் சுணங்கின நீங்கள்? இஞ்சை நானும் என்னவோ ஏதோ எண்டு யோசிச்சுக் கொண்டு இருந்தனான்' செல்லாச்சி மாமி கணவனைக் கேட்டாள்.

'காத்தாலை காசியம்மானும் கந்தசாமியும் சாவகச்சேரி சந்தைக்குப் போய், தோட்டச் சாமான்களை விக்கப் போனவை. அவையோடை வைத்திமாமாவும் சேர்ந்திட்டார். பிறவு சந்தை முடிந்ததும் பக்கத்திலை கொடிகாமம் போய், வைத்திமாமாவுக்கு காவளாயும், பாவட்டை இலையளும் கட்டைத் தில்லையனிட்டை வாங்கிக் கொண்டு வந்தனாங்கள். தில்லையனைச் சந்திச்சதிலை கொஞ்சம் சிக்கலாய் போனதிலை நேரம் சுணங்கிட்டுது.

நாளைக்கு வைத்திமாமாவின்ரை தோட்டத்திலை தாழ்வை. அதாலை ஏத்தி வந்த குழையளை தோட்டத்திலை பறிச்சுப் போட்டு வந்ததிலைதான் இவ்வளவு சுணக்கம். காசியம்மான் அன்று நடந்தவற்றைக் கூறிக் கொண்டு இருந்தார்.

'மாமி, மாமி'

குசினிக்குப் பின்னால் இருந்து குரல் வந்தது. முத்தம்மாவின் குரல் என்பதை இருவரும் புரிந்து கொண்டார்களட்.

குசினிக்குப் பின்னால் இருவரும் எட்டிப் பார்க்க,

குசினிக்கு நேராக பின்னால், வேலியில் இருந்த பூவரசுக்குப் பக்கத்திலை இருந்த கண்டாயத்துக்குள்ளால் முத்தம்மா வந்து கொண்டிருந்தாள். முன்னால் மகன், சிவா. ஆறேழு வயதுதான் இருக்கும். முகத்தில் எக்கச்சக்கமான நித்திரையைத் தேக்கி வைத்துக் கொண்டு...பாதித் தூக்கத்தில் இருந்தான்.

கையில் ஒரு குப்பி விளக்கு. இடது கையால் காற்று அணைத்துவிடாது இருக்கமறைத்துப் பிடித்துக் கொண்டு வந்தாள்.
காசியம்மானை முத்தம்மா கண்டதும் 'அம்மான் வந்திட்டியளே! எங்கை இவரைக் காணேலை?'

'ஏன் பிள்ளை இந்த நேரத்திலை வந்தனி. தம்பி இப்பதான் இதிலையும் இருக்க மாட்டேனெண்டிட்டு தண்ணியும் குடிக்காமல் வெளுக்கிட்டவன். உதிலை காளிகோயிலடிக்கும் இப்ப போயிரான். நீ ஏன் இப்ப இந்த நேரத்திலை குழந்தையையும் கூட்டிக் கொண்டு..'

**◊ கனி ◊**

'அப்ப இப்ப வீட்டை வந்திடுவர். களையிலை வாற மனுசனுக்கு வீட்டிலை இவனில்லை எண்டால் கோவம்தான் வரும். நான் வாறேன் மாமி' என்றவர், மகனையும் இழுத்துக் கொண்டு திரும்பிக் கண்டாயத்துக்கள்ளாலை குனிஞ்சு கொண்டு போனாள்.

'அவதானமா போ பிள்ளை, நல்ல இருட்டு பாம்பு பூச்சியள் இருந்திடப் போவுது.' செல்லமாமாமி கூறியது முத்தம்மாவிற்குக் கேட்டிருக்குமோ தெரியாது.

வீட்டுக்கு வந்த முத்தம்மா வளவுக்குள்ளே வண்டில் மாடுகளைக் காணேல்லை. இன்னமும் இவர் வரவில்லை என்று நினைத்தவள்,
'பிள்ளையாரிட்டைப் போய், கால், கை கழுவிக் கும்பிட்டிட்டு வருவாரெல்லோ! அதுதான் சுணங்குது போலை' எனத் தனக்குள் கூறிக் கொண்டவள்,
வீட்டுக்குள் வந்தாள்.

அடுப்பிலை கேத்தலை வைத்துத் தண்ணியை சூடாக்கத் தொடங்கினாள். பன்னாடையைச் சுருட்டி, குப்பி விளக்கில் நெருப்பை மூட்டியவள், அதனை அடுப்புக்குள் வைத்து, நன்கு காய்ந்த சில சுள்ளித் தடிகளையும் அடுப்புள் வைத்தாள். சுள்ளிகள் பற்றி எரியத் தொடங்க, குசினிக்குள் வெளிச்சம் பரவத் தொடங்கியது. இரண்டு பூவரசம் தடியளையும் அடுப்பினுள்ளே தள்ளியவள் அவை மூண்டதும்

தொடர்ச்சி 23ஆம் பக்கம்



# Malayal Bhagawathi Joythidam

## Pandit Tulsidhar Swamiji








கேரளாவிலிருந்து வருகை தந்துள்ள பிரபல ஜோதிட வல்லுனா பண்டித் Thulsidhar Swamiji சாஸ்திரிகள் பல இடங்களுக்கு சென்று தற்போது கனடா வந்துள்ளார். இவர் கைரேகை, சாதகம், முகநாடி ஆகியவை கொண்டு மிகத்துல்லியமாக நடந்தவை, நடக்க இருப்பவை பற்றிய விபரங்களைக் கூறுவார். இவற்றை எல்லாம் அறிந்து பரிகாரம் செய்து கொள்ள ஒரு முறை என்னை சந்தியுங்கள்.

* கைரேகை
* கல்வி, உத்தியோகம்
* வதிவிடப் பிரச்சினைகள்
* குடும்ப பிரச்சினைகள்
* குழந்தை பாக்கியம்
* எதிரிகள் பிரச்சினைகள்
* கர்ப்ப தோஷம்
* நாம நட்சத்திரம்
* தொழில் வியாபாரம்
* நீதிமன்ற வழக்குகள்
* திருமண யோகம்
* கணவன் மனைவி ஒற்றுமையின்மை
* சர்ப்ப தோஷம்
* கஸ்ட நஷ்டங்கள்

**பிளெக் மஜிக் 3 நாட்களுக்குள்**
**அகற்றி பாதுகாப்பு கொடுக்கப்படும்.**

**Tel.:647.856.0559**

*GTA Square Mall (2nd Floor)*
*5215 Finch Ave. E., Unit #257*
*Scarborough ON M1S 0C2*
*(FINCH & MIDDLEFIELD)*

# புற்றுநோய் ஒரு தொற்று நோயா?

## எம்மை நாம் பாதுகாப்பது எப்படி?

கடந்த இதழ்தொடர்ச்சி....

நுரையீரல் புற்றுநோய் 4 வகை உண்டு. இவை வருவதற்குப் பலகாரணம் உண்டு. ஆனால் முக்கியம் புகைப் பிடித்தல் ஆகும். ஆரம்பத்தில் குணம் குறிகள் தெரிவ தில்லை. மார்பு வலியுடன் இரத்த வாந்தியும் தொடர்ந்து நிமோனியா சுரம் வரும் மாதிரி இருப்பதுடன் தொண்டைகரகரப்புடன் கூடிய குரல் மாற்றமும், எதிர்பாராத மூச்சுத் திணறலும் இருக்கும். பசிக்குறைவு, எடை குறைந்து காணப்படும். இவை ஆரம்ப நிலையில் தெரியாது. நாளடைவில் தான் தெரியவரும் என அறியமுடிகின்றது. எனவே இதில் முக்கிய கவனம் செலுத்த வேண்டும்.



இதில் ஏற்பட்ட புற்றுநோயை அகற்ற அறுவைச் சிகிச்சை செய்து பாதிக்கப்பட்ட பகுதியை அகற்றப்படும். பின்பு ரேடியோ தெரபி, கீமோதரபி மருத்துவம் செய்யப்படும் எனவும் கூறப்படுகின்றது.

ரேடியோ தெரபி கதிர்வீச்சுப் புற்றுநோய் திசுக்கள் மீது மட்டும் பாய்ச்சப்படும். சாதாரண திசுக்கள் மீது கதிர்வீச்சு ஏற்றமாட்டார்கள். தற்பொழுது இதனை செய்து வருவதாக அறியமுடிகிறது. இருந்தும் நுரையீரல், சிறுநீரகம், ஈரல் ஆண் பெண் உறுப்புக்களில் மீது ரேடியோ திரபி செய்வது ஆபத்தானது. இது வலியை ஏற்படுத்தக் கூடியது. உறுப்புக்களின் உருவம் மாற்றமடையும். உடல் பகுதி தோல் உரியத் தொடங்கும். நிறமாற்றம் கொடுக்கும். அயர்வு அதிகம் இருக்கும். தலைமயிர்கள் உதிரத் தொடங்கும். பசியின்மை ஏற்படும். ஆனால் உதிர்ந்த தலைமுடி மீண்டும் வளரத் தொடங்கும். நாளடைவில் யாவும் சரியாக வந்து விடும். இதில் பொறுமையை கடைப்பிடிக்க வேண்டியது நமது கடமையாகும்.

கீமொதெரபி நிமிர்த்தம் வாந்தி, குமட்டல், தோல் தழும்பு, முடியுதிர்தல் சாதாரணமாக ஏற்படும். இரத்தத்தில் உள்ள வெண்சீவ அணுக்கள் குறைந்தும் காணப்படும். இம்முறையால் நோயுற்றவருக்கு நோய் எதிர்க்கும் சக்தி இழந்து விடும். இந்தப் பக்க விளைவை நன்கு கவனித்து வைத்தியத்தை செய்துகொண்டு இருக்க வேண்டும். தகுந்த கண்காணிப்பும், மருந்தும் வழங்கி வந்தால் பக்க விளைவுகளை ஓரளவு தவிர்த்துக்கொள்ள முடியும் என கூறப்படுகின்றது.

புற்று நோய் ஒரு நோயல்ல. ஏதோ வகை சேர்ந்த பல நோய்கள் எனக் கூறலாம். சிலவற்றை குணமாக்க முடியும். சிலவற்றை குணமாக்குவது கடினமாக்க முடியாது எனவும் கூறலாம். நமது இரத்தத்தில் உள்ள வெண்சீவ அணு உற்பத்தியை புற்று நோய் திசுக்கள் அழிக்கும் தன்மையுடையது எனவும் அறியப்படுகின்றது. அது அழியா திருக்க மருத்துவமுறையில் முன்னேற்றம் காணப்படல் வேண்டும்.

தனியாக நுரையீரலில் புற்று நோய் வந்தால் அதனை உடன் அகற்றமாட்டார்கள். கதிர் வீச்சால் குணம் கிடைக்காவிடில் பாதிக்கப்பட்ட பகுதியை அகற்றி விட்டு கதிர்வீச்சு மருத்துவம் செய்வார்கள். அதற்குப் பதிலாக மற்றொரு நுரையீரலே அதன் வேலைகளைச் செய்யும். மேலும் பரவாமல் இருக்க கீமோதரபி மூலம் புற்று நோய் மருந்துகளை பயன்படுத்தி வருகின்றார்கள். இவை நோய் எந்தளவு நிலையில் உள்ளது என்பதைப் பொறுத்து அமைவதாகும்.

வாய் - தொண்டை, புற்றுநோய் பெரும்பாலும், புகை பிடித்தல், மது அருந்தல், புகையிலை பாவித்தல், மூக்கு பொடி பாவித்தல் என்பவற்றால் வர இடம் உண்டு என அறிய முடிகின்றது. இதனால் வாய் புற்று அதிகரிக்கின்றது. A,E உயிர்சத்து குறைந்தாலும் இந்நோய் வர இடம் உண்டு எனவும் கூறப்படுகின்றது.

புற்றுநோய் ஏற்பட்டு முகப்பாகத்தில் குறைபாடு இருந்தால் பிளாஸ்ரிக் செயற்கைப் பொருள் மூலம் முகஅமைப்பைச் சரியாக அமைக்க முடியும். அல்லது உரியவரின் எலும்பு, தோல் முதலியவற்றை எடுத்து செயற்கை முகமாக அமைக்க முடியும் என கூறப்படுகின்றது.

மேலும் வயிற்று வலியுடன் பசியின்மை, தொடர்ந்த அஜீரணம், எடை குறைவு, குமட்டல், வாந்தி, ஓங்காளம், விழுங்கும் தன்மையில் சிரமம் இவற்றுடன் மலம் கழியும் போது இரத்தம் கலந்திருந்தாலும் இதனை வயிற்றுப் புற்று நோய் எனவும் கண்டுகொள்ள முடியும். எனவே இந்நிலையை உள் மூலவியாதி எனக் கருதக்கூடாது. எனவே இந்நிலை இருந்தால் தாமதியாமல் மருத்துவரிடம் செல்ல வேண்டும். அவர் நன்கு பரீட்சித்து ஆய்வு செய்து நோயை நிர்ணயித்து சிகிச்சை செய்யும் முறைய


**வைத்திய கலாநிதி**

**கே.ரி. கோபால்**



D.A.M.S R.A.M.P (Sri Lanka)
C.D.S - C.N.H.P (Canada)
*Tel.: 647.456.9796*


தொடர்ச்சி 29ஆம் பக்கம்




# BASEMENT RENT

**BRIMLEY & STEELES**
2 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry. Close to all facilities. Avail. immediately.
தொடர்புகளுக்கு: 905.470.2859

**BRIMORTON & SCAR.GOLF CLUB**
1 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry. Close to TTC, mall, school. Avail. immediately.
தொடர்புகளுக்கு: 416.431.1837

**MORNINGSIDE & STAINES**
2 Bedroom bsmt இல் 1 bedroom வாடகைக்கு உண்டு. Parking, laundry. Close to all facilities. Avail. Anytime. 1 Bedroom also avail. in main floor. Family or students preferred. No drinks. தொடர்புகளுக்கு:
647.656.6462 / 416.494.7149

**KENNEDY & DENISON**
2 Bedroom bsmt for rent. Sep. entrance, laundry. Close to all facilities. Avail. immediately. தொடர்புகளுக்கு:
905.474.2748 / 647.278.0862

**NEILSON & SHEPPARD**
2 Bedroom bsmt for rent. Sep. entrance, 3 parking, laundry. Close to TTC, school, mall. Avail. immediately.
416.473.2988 / 647.924.2783

**9TH LINE & 14TH AVE.**
2 Bedroom bsmt for rent. Sep. entrance, park ing, laundry. Close to all facilities. Avail. Anytime.
905.554.7476 / 416.371.7146

**MCCOWAN & SHEPPARD**
2 or 3 Bedroom walk-out bsmt for rent. Sep. entrance, parking, laundry. Close to all facili- ties. Avail. February 01, 2014.
**OSHAWA**
1 Bedroom for rent. Close to all facilities.
தொடர்புகளுக்கு: 416.554.7114

**MCCOWAN & STEELES**
2 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry. Close to all facilities. Avail. February 01, 2014. Family preferred.
தொடர்புகளுக்கு: 647.285.9871

**MCCOWAN & STEELES**
1 Bedroom bsmt for rent. Parking, laundry. Close to all facilities. Avail. Anytime. School preferred.
647.882.3521 / 647.339.7544

**MORNINGSIDE & MCNICOLL**
1 Bedroom bsmt for rent. Sep. entrance, park ing. Close to TTC, mall, school. Avail. Anytime. Family preferred.
416.939.4381 / 416.898.1242

**9TH LINE & 16TH AVE.**
2 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry. Close to all facilities. Avail. Anytime.
தொடர்புகளுக்கு: 647.968.3591

**MARKHAM & DENISON**
2 Bedroom bsmt for rent. Sep. entrance. Close to all facilities.
**KEELE & FINCH**
Furnished rooms for rent. Close to all facilities. Avail. immediately.
**905.209.9212 / 416.562.5113**

**MCCOWAN & STEELES**
2 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry. Close to all facilities. Avail. Anytime.
416.546.6264 / 647.866.9837

**MCCOWAN & ELSON**
2 Bedroom bsmt for rent. Sep. entrance, laundry. Close to TTC, YRT, school. Avail. immediately.
தொடர்புகளுக்கு: 905.209.0876

**MAJOR MACKENZIE & DUFFERIN**
2 Bedroom bsmt for rent. 2Washroom, Sep. entrance, parking, laundry. Close to all facilities. Avail. January 15, 2014.
தொடர்புகளுக்கு: 416.823.3552

**KENNEDY & EGLINTON**
2 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry. Close to all facilities. Avail. immediately.
647.342.9417 / 647.669.0179

**MEADOWVALE & ELLESMERE**
2 Bedroom bsmt for rent. Parking, laundry. Close to all facilities. Avail. immediately.
தொடர்புகளுக்கு: 647.622.7912

**WARDEN & FINCH**
2 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry. Close to all facilities. அறைகள் தனித்தனியாகவும் கொடுக்கப்படும்.
தொடர்புகளுக்கு: 416.723.7243

**BIRCHMOUNT & ELLESMERE**
3 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry. Close to all facilities. Avail. immediately.
தொடர்புகளுக்கு: 647.856.5541

**PHARMACY & FINCH**
2 Bedroom walk-out bsmt for rent. Sep. entrance, parking, laundry. Close to all facilities. Avail. immediately. Working people or College students preferred.
416.491.1593 / 647.885.3476

**MARKHAM & HIGH GLEN**
2 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry. Close to all facilities. Avail. immediately.
தொடர்புகளுக்கு: 647.609.1309

**NEILSON & FINCH**
Beautiful 2 bedroom bsmt for rent. Sep. entrance, Close to TTC, grocery & park. Small family or bachelors preferred.
தொடர்புகளுக்கு: 647.606.3230

**MIDDLEFIELD & ELSON**
2 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry. cable. Close to TTC, mall, school. No smoking & No pets. Couple preferred. Avail. immediately.
தொடர்புகளுக்கு: 647.393.2081

**WARDEN & SHEPPARD**
1 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry. Close to all facilities. Avail. immediately. 2 Persons preferred
தொடர்புகளுக்கு: 416.494.7547

**MCCOWAN & FINCH**
1 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry. Close to TTC, mall, school. Avail. immediately.
தொடர்புகளுக்கு: 647.530.8091

**KENNEDY & LAWRENCE**
3 Bedroom bsmt for rent. Parking, laundry. Close to all facilities. Avail. immediately.
தொடர்புகளுக்கு: 647.836.0800

**MARKHAM & 14TH AVE**
Newly finished 2 bedroom bsmt for rent. Sep. entrance. Avail. immediately.
**647.831.7151 / 647.427.5587**

**MARKHAM & BRIMORTON**
2 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry. Close to all facilities. Avail. immediately.
416.890.8384 / 647.893.1361

**LAWRENCE & MARKHAM**
1 bedroom bsmt for rent. Sep. entrance, laundry. Close to all facilities. Single person or couples preferred. Avail. immediately.
416.438.2552 / 647.853.5524

**MORNING SIDE & FINCH**
1 Bedroom bsmt. for rent. Parking, cable, laundry. Close to TTC & etc. Avail. immediately. Single family preferred.
416.284. 0712 / 416.906.5353

**9TH LINE & STEELES**
2 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry. Close to YRT, school, bank, mall. Avail. immediately.
416.875.3611 / 905.554.9353

**MORNINGSIDE & OLD FINCH**
2 Bedroom bsmt for rent. Sep. entrance, parking. Close to all facilities. Avail. immediately.
தொடர்புகளுக்கு: 416.417.6725

**MCCOWAN & ELLESMERE**
1 Bedroom bsmt for rent. Sep. entrance, living Room, Kitchen, Full washroom, Close to TTC (McCowan Subway), School, Scarborough Town Center and all Amendment. Quiet place. Avail. immediately.
416 265 9138 / 416 271 8467

**NEILSON & FINCH**
1 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry. Close to TTC, mall, school. Couple preferred. 1 Master bedroom also avail. தொடர்புகளுக்கு:
416.267.0072 / 647.466.6755

**BRIMORTON & SCAR. GOLF CLUB**
2 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry. Close to all facilities. No Smoking. Avail. immediately.
647.628.7879 / 647.748.7879

**MEADOWLAND & SHEPPARD**
1 Bedroom bsmt for rent. Parking, laundry. Close to all facilities. Avail. Anytime. No Smoking.
தொடர்புகளுக்கு: 416.509.5750

**KEELE & MAJOR MACKENZIE**
1 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, cable. Close to all facilities. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **647.204.4970**

**MORNINGSIDE & SHEPPARD**
1 Bedroom bsmt for rent. Sep. entrance, washrooms, parking, laundry. Close to TTC, school, HWY 401. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **416.305.7317**

**MORNINGSIDE & SEWELLS**
1 Bedroom walk-out bsmt Apt. for rent. Parking, laundry. Avail. immediately. Close to all facilities.
தொடர்புகளுக்கு: **416.289.9744**

**FINCH & PHARMACY**
1 Bedroom bsmt for rent. Sep.entrance, parking, laundry. Close to all facilities. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **416.759.2030**

**MORNINGSIDE & SEWELLS**
Newly renovated 2 bedroom walk-out bsmt for rent. 2 washrooms. அத்துடன் 4 அறைகள் கொண்ட வீடும் வாடகைக்கு உண்டு. தனித்தனியாகவும் கொடுக்கப்படும். Avail. immediately. Close to ttc, school, mall, stores, etc.
தொடர்புகளுக்கு: **416.551.8379**

**MCCOWAN & HIGH GLEN**
2 bedroom bsmt Apt. for rent. Sep. entrance. Parking, laundry, cable. Small family preferred. Close to Bus, stores, etc. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **416.409.5352**

**NEILSON & MCLEVIN**
1 Bedroom bsmt for rent. Sep. entrance, laundry. Close to all facilities. Pentecost Christian preferred. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **416.831.8549**

# CONDO. FOR RENT

**MARKHAM & SHEPPARD**
2 Bedroom condo for rent. Parking, laundry. Close to all facilities. Avail. February 01, 2014.
தொடர்புகளுக்கு: 416.887.3707

## திருமண சேவை

மணவாழ்க்கையை மனம்போல் அமைத்துத் தர 20 வருடங்களுக்கு மேலாக கனடாவில் திருமண சேவையை திறம்பட செய்து வருபவரை அணுகுங்கள்.
647.556.4114 / 416.992.8782

## ஜோதிடம்

எண்கணிதம், கைரேகை பார்த்தல், ஜாதகம் பார்த்தல் போன்றவை இந்து மதமல்லாத கிறிஸ்தவ மதத்தைச் சேர்ந்தவரால் மிகவும் துல்லியமாக நடந்தவை, நடக்க இருப்பவை என்பன கூறப்படும்.
தொடர்புகள்: 416.502.3033

**உடனடி விற்பனைக்கு**
Markham / Highglen
2BR & 2WR கொண்டோ
Kipling / Steeles
2BR & 2WR கொண்டோ
**உடனடி வாடகைக்கு**
வீடுகள், கொண்டோக்கள், பேஸ்மென்ட்கள்.
மேலதிக தகவல்களுக்கு :
**Jey 416-816-9011**

வீடு, அறை, நிலஅறை (BSMT), கட்டிடம் வாடகை / விற்பனை விளம்பரங்களை இரு நாட்களுக்கு முன்பாகத் தரவும்.

மேலும் பக்கங்கள் 27, 28

# ROOM FOR RENT

***MIDDLEFIELD & FINCH***
1 Bedroom for rent in a main floor. Parking, laundry, free internet, washroom. Avail. immediately. Close to all facilities.
416.502.3048 / 647.847.5156

***MCCOWAN & ELLESMERE***
1 Bedroom for rent. Parking, laundry. Close to all facilities. Avail. Anytime. Ladies preferred.
தொடர்புகளுக்கு: 416.276.0143

***MARKHAM & ELLESMERE***
One Room for rent. Close to all facilities. Avail. February 01, 2014.
தொடர்புகளுக்கு: 416.566.1918

***WARDEN & FINCH***
One Room for rent in a bsmt. Sep. entrance, parking, laundry. Close to TTC, school, mall. Men's preferred. (50 years and older).
647.927.4637 / 647.880.4346
(Call after 5:00pm)

***MARKHAM & DENISON***
1 Bedroom for rent in a main floor. Parking, laundry. Close to all facilities. Avail. Anytime
தொடர்புகளுக்கு: 416.554.9487

***FINCH & MIDDLEFIELD***
Newly renovated 1 bedroom for rent. Sep. washroom, parking, laundry, free internet. Close to TTC, mall, school, tamil stores, temples. Avail. February 01, 2014.
தொடர்புகளுக்கு: 647.404.3004

***MARKHAM & LAWRENCE***
Newly renovated bsmt apt. Close to TTC, mall, Centennial college. Avail. immediately.
647.706.4881 / 416.439.4076

***BIRCHMOUNT & FINCH***
2 Rooms for rent. Laundry. Close to all facilities. Avail. immediately. 2 People preferred.
தொடர்புகளுக்கு: 647.618.5357

***MCLEVIN & TAPSCOTT***
1 Bedroom for rent in a main floor. Parking, laundry. Close to all facilities. Avail. immediately.
தொடர்புகளுக்கு: 647.998.3535

***WARDEN & FINCH***
1 Bedroom for rent. Laundry. Close to all facilities. Avail. immediately.
416.274.2133 / 647.500.1990

***EGLINTON & MARKHAM***
1 Bedroom for rent in a condo. Laundry. Close to all facilities. Avail. immediately.
தொடர்புகளுக்கு: 416.303.1666

***BIRCHMOUNT & ELLESMERE***
1 Bedroom for rent. Parking, laundry. Close to all facilities. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **647.403.0893**

***KENNEDY & ELLESMERE***
இரு முதியோர் ***(Husband & Wife)*** வசிக்கும் வீடொன்றில் ஒரு அறை உடனடியாக வாடகைக்கு உண்டு. All utilities including. Laundry. Close to Highland Farm, TTC, school, Hopper hut. வேலை பார்க்கும் அல்லது படிக்கும் மாணவிகள் / பெண்கள் மட்டும் விரும்பத்தக்கது.
***416.291.6667 / 416.895.8111***

# ROOM FOR RENT

***MCCOWAN & DENISON***
***1*** Bedroom for rent in a main floor. Laundry. Close to all facilities. Avail. immediately.
***905.554.3595 / 647.532.1233***

***MARKHAM & SHEPPARD***
சகல வசதிகளுடன் கூடிய 3 அறைகள் கொண்ட வீட்டில் ஒரு அறை வாடகைக்கு உண்டு. Sep. entrance, kitchen, washroom, parking, Laundry. Avail. immediately. Close to TTC, school, mall...
தொடர்புகளுக்கு: ***416.335.5242***

***FINCH & BIRCHMOUNT***
1 Bedroom for rent in a bsmt. All inclusive. Close to all facilities. Rent $350. Avail. immediately.
தொடர்புகளுக்கு: ***416.890.5267***

***LAWRENCE & PHARMACY***
***2*** நேரச் சாப்பாட்டுடன் Room வாடகைக்கு உண்டு. 4 Bedroom bsmt சகல வசதிகளுடன் உண்டு. மற்றும் மேல் தளத்தில் 1 அறை வாடகைக்கு உண்டு. குறைந்த செலவில் TVI, Sun TV, Vijay TV, free Internet தேவையெனில் ஒழுங்கு செய்து தரப்படும். ஆண்கள் விரும்பத்தக்கது.
தொடர்புகளுக்கு: ***416. 759.7016***


**FREE PARKING**
APARTMENTS FOR RENT
In a NEWLY Renovated High-Rise Apartment Building
Utilities Included, Clean, New Elevator, TTC, Tamil store in bldg, Schools nearby
CALL: 416-264-2818


# FOR SALE

***FINCH & HWY 27***
தமிழ் உணவகம் ஒன்று விற்பனைக்கு உண்டு. Close to all facilities.
தொடர்புகளுக்கு: 416.908.3011

# TUTORING

***By Experienced Graduates.***
- Math • Adv. Function, Calculus & Vectors
- Physics, Data managt, Java
- Computer Training
- CCNA / CCNP Preparation Help

***Contact: 416.706.1654***

# TUITION CLASSES

Gr. 3 - Gr.12, College & University Math, Science, English, Functions Calculus & Vectors, Data, physics, Chemistry 7 Biology. University Preparation Class. Calculus I & II, Linear Algebra, Linear Statics, Dynamics, Mechanics, Physics & Chemistry.
***Ruban Master: 416.817.8226***

# TUITION

***CINDY'S SUPER TUTOR CENTRE***
***Pre - JK to Grade - 8***
***BRIMLEY & STEELES***
***BIRCHMOUNT & FINCH***
English, Reading, Writing, Math, Spelling Bee, Weekly book report, project, EQAO Preparation, Homework help in all subjects.
Contact: **647.448.0281**
(8 Years of teaching experience)

மேலும் பக்கங்கள் 26, 29

# HOUSE FOR RENT

***MCCOWAN & MCNICOLL***
3 Bedroom house for rent. Parking, laundry. Close to all facilities. Avail. immediately.
தொடர்புகளுக்கு: 416.844.8415

***HWY 07 & 9TH LINE***
4 Bedroom detached house for rent. 3 Washrooms, 4 parkings. Utilities included.
438.879.6064 / 514.998.6064

***SCAR.GOLF CLUB & ELLESMERE***
3 Bedroom house + 2 bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry. Close to all facilities. Avail. immediately.
தொடர்புகளுக்கு: 416.836.2253

***NEILSON & FINCH***
3 Bedroom house for rent. Dinning room, family room, 2 ½ washroom, parking. Close to TTC, Eraa super market, schools. 1 Bedroom bsmt also avail.

***MCCOWAN & BUR OAK***
Newly 4 bedroom house for rent. Close to all facilities. Avail. Anytime.
647.628.6991 / 905.947.1356

***BRIMLEY & MCNICOLL***
3 + 1 House for rent. 2½ Washroom. Close to TTC, school, library, mall. Avail. immediately.
தொடர்புகளுக்கு: 416.801.3863

***MORNINGSIDE & SEWELLS***
3 Bedroom house for rent. parking, laundry. Close to TTC, school, mall, Tamil stores. Avail. Anytime. அறைகள் தனித்தனியாக கொடுக்கப்படும்.
தொடர்புகளுக்கு: 416.728.7274

***MARKHAM & STEELES***
3 Bedroom house for rent. Parking, laundry. Close to TTC, school, bank. Avail. February 01, 2014.
905.604.8426 / 416.565.7291

***MARKHAM & PAINTED POST***
3 Bedroom house for rent. Parking, washroom. Close to TTC, school, Centennial college, mall.
416.289.6171 / 647.831.9005

***BRIMORTON & MCCOWAN***
3 Bedroom house for rent. Parking, laundry. Close to TTC, mall, bank, school, Hospital, subway. Avail. December 01, 2013. 2 Bedroom bsmt also avail.
வீடு முழுமையாகவும் கொடுக்கப்படும்.
தொடர்புகளுக்கு: ***416.271.6573***

# SAREE BLOUSE

**தையல் தேவைகளுக்கு**
சாறி Blouse உட்பட அனைத்து தையல் தேவைகளுக்கும் மற்றும் சாறியில் இருந்து நூல் எடுத்து குஞ்சம் பின்னியும் கொடுக்கப்படும். தொடர்புகளுக்கு:905.492.0259

# GRACE HOPPERS

***YOUR HOME HOPPER'S PARTY***
We will come and do fresh tasty hoppers, dosa, rottie with 4 kind sambol, chicken and mutton curries, chilly chicken, noodles, Pittu, biryani. Appetizer - Rolls, Vada, cake.
***Maria: 647.522.7599***

வீடு, அறை, நிலஅறை (BSMT), கட்டிடம் வாடகை / விற்பனை விளம்பரங்களை இரு நாட்களுக்கு முன்பாகத் தரவும்.

# JOB JOB JOB

**குழந்தை பராமரிப்பாளர் தேவை**
***MORNINGSIDE & SHEPPARD***
2 வயது ஆண்குழந்தையை பராமரிப்பதற்கு பெண்மணி ஒருவர் தேவை.
647.909.0475 / 416.800.6404

**பகுதி நேர வேலை வாய்ப்பு**
பகுதி நேரமாக குறிப்பாக சனி, ஞாயிறு நாட்களில் மாலை நேரத்தில் Toronto பெரும் பாகத்தில் நடைபெறும் நிகழ்வுகளின் தொகுப்பாளர் தேவைப்படுகின்றது.
realtystudio24@gmail.com

# JOB JOB JOB

***JBS EXPEDITE LTD.***
A-Z Drivers wanted with 2 years experience.
A-Z அமெரிக்காவிற்கான சாரதிகள் 2 வருட அனுபவத்துடன் தேவை. மைல் இற்கு 45 சதம் வீதம் சம்பளம் வழங்கப்படும்.
905.908.1985 / 416.271.8467

***FINCH & MIDDLEFIELD***
GTA Square இல் அமைந்துள்ள உணவகம் ஒன்றிற்கு Cashier, cleaner, cook ஆகிய வேலைகளுக்கு ஆட்கள் தேவை.
தொடர்புகளுக்கு: 416.318.9866

# DAY CARE

***MIDLAND & EGLINTON***
உங்கள் பிள்ளைகளை மிகக்கவனமாகவும் அன்பாகவும் பராமரிக்கப்பட வேண்டுமா?
அழையுங்கள்: ***647.402.5253***

# TUITION

***U.K, S.K, Grade 1-8***
Math , English ,Science, and Social study
20 years Canadian Experience.
More informations please
Contact: Ruby
***647. 680 .9131 / 647. 409 .5511***

# TUITION

## KEY BOARD CLASSES

***MARKHAM & LAWRENCE***
ஆரம்ப, நடுத்தர மற்றும் உயர்தர சகல வகுப்பினர்களுக்குமான key board வகுப்புக்கள் Weekdays & Week ends இல் 3 மாத காலத்தில் தமிழ் மற்றும் ஆங்கில பாடல்கள் வாசிப்பதற்கு கற்றுக்கொடுக்கப்படும்.
416.438.2552 / 647.853.5524

**தையல் வகுப்புக்கள்**
**தையல் *Orders***
***MARKHAM & LAWRENCE***
Saree Blouse, Salwar Kameez, Skirt & Blouse மற்றும் Ladies Items தைப்பதற்கு கற்றுக் கொடுப்பதுடன், order க்கும் தைத்துக் கொடுக்கப்படும். மணப்பெண்ணுக்கும் Saree blouse தைத்துக் கொடுக்கப்படும். Saree Blouse Block எடுத்து தைப்பதற்கு கற்பிக்கப்படும்.
416.438.2552 / 647.853.5524

# TUITION

An experienced Graduate tutor for Grade 5 to Grade 10. Math & Science. Tuition Center இலும், வீட்டிற்கு வந்தும் குறைந்த கட்டணத்தில் கற்பிக்கப்படும். Guna Master: 647.834.7358
atgunam@yahoo.ca

# கருத்தொருமித்த கமலமும் யோகியும்

அது ஒரு இலையுதிர்காலம். வெய்யில் கொழுத்தி எரிகிறது. கனடாவின் நில வகையான 'பிறயறிஸ்'. அதாவது சிறுபற்றைக் காடுகளைக் கொண்ட பிரதேசம். நகரங்களின் நெருக்கடிகள், திட்டமிட்ட வகையில் தம் ஒரு நாள் பொழுதை இயந்திர ரீதியாக கழிக்கும் மக்கள், ஓய்வு கிடைக்கும் ஒரு நாள் பொழுதை சுதந்திரமாகக் களிக்க விரும்புவர்.

இரு ஊரவர்களோ, இரு குடும்பத்தவரோ அல்லது இரு பாடசாலைகளோ ஒன்று சேர்ந்து உல்லாசப் பிரயாணமாக இத்தகைய இடங்களுக்கு வருவதுண்டு.

யோகி குடும்பமும் பல வருடங்களாக இத்தகைய பிரயாணங்களை மேற்கொள்வது உண்டு. யோகி சமூகத்தோடு பழகுபவன். தன்னைச் சேர்ந்தோரை மகிழ்விக்கும் உற்சாகமுடையவன். தன் மனைவி கமலா அவளுடைய இயல்பான தன்னடக்கமோ அல்லது உணர்வுகளில் அசண்டையோ அதிலிருந்து மீட்பது போல அளவு கடந்த அன்பைச் செலுத்துவான். எல்லாரும் புகழ்ந்து தள்ளும்போது ஒரு சிறு புன்சிரிப்பு வேண்டா வெறுப்புக் கிடைக்கும்.

நகரங்களில் இருந்து வெகு தூரமாக சில பொழுது போக்கு இடங்கள் அமைந்திருக்கும் ஐந்து ஏக்கருக்கு ஓரிடமாக 4,5 உயர்ந்த மரங்களை வளர்த்து, இரு பக்கங்களும் வாங்குகள் அமைத்து இணைக்கப்பட்ட மரமேசைகள் இரண்டு, ஒரு குப்பை வாளி, தற்காலிகமாக அமைக்கப்பட்ட கழிப்பறைகள், தற்காலிக தண்ணீர்ப்பைப் அமைக்கப்பட்டிருக்கும். சுத்திகரிக்கப்பட்ட விளையாட்டு மைதானம் அமைந்திருக்கும். உதைபந்தாட்டம் முதல் தடகள விளையாட்டுக்கள் வரை ஆடமுடியும். போகிறவர்கள் தமக்கு வேண்டிய பொருள்களைத் தாமே கொண்டு செல்ல வேண்டும்.

யோகி இறந்து இரு வருடங்களின் பின் பலரது நிர்ப்பந்தத்தால் கமலா பாட்டியும் வந்திருந்தார். வயது முதிர்ந்த முதாட்டிகள் வாங்கில் இருந்து கொண்டு இளவட்டங்களின் சுதந்திரமான நடத்தைகளையும் சாகசங்களையும் பார்த்து ரசித்துக் கொண்டும் இருப்பர்.

யோகியும் தானும் இப்படிப் பல விளையாட்டுப் போட்டிகளைப் பார்த்து மகிழ்ந்த காலம். யோகி ஒரு கிரிக்கட் வீரன். யாழ்ப்பாண மத்திய கல்லூரி மாணவனாக இருந்த காலத்தில் கல்லூரி கிரிக்கட் குழுவில் இருந்து பல வெற்றிகளை கல்லூரிகளுக்கிடையேயும் மாவட்ட, மாகாண, அகில இலங்கை ரீதியிலும் பெற்றுக்கொள்ள காரணமானவர்களில் இவனும் ஒருவன். குழுவின் தலைவனாக தொழில்வாய்ப்புப் பெற்று வெவ்வேறு இடங்களில் உத்தியோகம் பெற்ற போதும் குடும்பம் குடாநாட்டிலேயே இருந்தது. மனைவி ஆசிரியையாக இருந்ததும் பெற்றோரின் உதவி தேவைப்பட்டதும், யோகிக்கும் தனி ஒரு இடமாக இல்லாமல் இருவருடங்களுக்கொருமுறை மாற்றல்கள் வருவதாலும் அவர்கள் நிரந்தரமாக ஊரிலேயே இருந்தனர். ஏழு வயதிலும் ஐந்து வயதிலும் இரு ஆண் குழந்தைகள்.

கமலம் எனும் அந்த வயது போன பாட்டி யோகியின் நினைவுகளில் ஆழ்ந்து விட்டார். மத்தியகல்லூரிக்கும் வேறு கிரிக்கட் குழுவுடன் ஆட்டம் எனில் பழைய மாணவர்களுக்குத் தெரியவரும். எங்கிருந்தாலும் விடுப்பெடுத்துக் கொண்டு வந்து விடுவார்கள். கமலத்துக்கு கிரிக்கெட் என்றால் சோம்பேறி விளையாட்டு என்பது கணிப்பு. லீவு நாட்களைக் குடும்பத்தோடு களிக்காமல் மைதானம் போய்விட்டால் 'மனைவி பாவம்' என எண்ணி அவளையும் தன்னுடன் வரும்படி நிர்ப்பந்திப்பான்.



நிறைய 'சாண்ட்விச்' செய்து அவர்களும் போவார்கள். ஊரிலே அவன் ஒரு கனவான். பொறுப்புள்ள சமூக சேவையும் செய்வான் என்றதொரு அபிப்பிராயம். கணவன், தந்தை எனும் பொறுப்புகளை சாதாரண உலகம் எதிர்பார்ப்பது போல நடந்து கொள்பவன். அந்நியோன்யமான தம்பதிகள் என அவர்களது கிராமத்தவர்களும், கமலத்தின் ஆசிரிய நண்பிகளும் கூறுவதுண்டு. சக ஆசிரியைகள் கூட கணவன்மாரோடு சினிமா பார்க்கவோ கோயில் குளத்துக்கோ, கலியாண வீடு போன்றவற்றிற்குப் போய் வருவார்களே தவிர ஆண்களிடையே நடக்கின்ற இத்தகைய விளையாட்டுகள், சவாரிப் போட்டி போன்றவற்றிக்கு செல்வதில்லை.

கிரிக்கட் போட்டிக்கு பட்டணத்தைச் சேர்ந்த நவநாகரிகமான உயர் உத்தியோத்தவரின் மனைவிமார், அழைக்கப்பட்ட கௌரவ விருந்தினரோ, அவர் தம் மனைவிமாரோ அல்லது சில வெள்ளைக்கார ஆசிரியைகளோ வருவதுண்டு.

விளையாட்டு மைதானத்துள் வந்ததுமே யோகியிடம் ஒரு மாற்றம் தென்படும். ஓரிடத்தில் கமலமும் பிள்ளைகளும் இருக்கிறார்கள் என்பதையே மறந்து விட்டது போல நண்பர்களோடு ஒன்றிவிடுவான்.

பழைய மாணவர்களாகிய நண்பர்களோடு அரட்டை அடித்தல், தமக்குத் கீழே படித்து பழையமாணவர் எனும் பட்டத்தைப் பெற்றவர்களோடு அறிமுகம் செய்தல், தத்தம் ஆசிரியர்கள் யார் யாரென அறிதல், தத்தம் காலத்தில் நடந்த சுவாரஸ்யமான தகவல்களைப் பகிர்ந்து கொள்ளல் அவர்களின் தற்கால பதவிகளை அறிதல் பின்னர் அவர்களை மற்றவர்களுக்கு அறிமுகம் செய்து பெருமைப்படுதல், 'அடே தேவசிகாமணி! இவர் யார் தெரியுமோ எங்கடை சீனியராய் படித்தான். சந்திரசேகரன் அவன்ரை இளைய தம்பியார். இப்ப களுத்துறையில் பொலிஸ் திணைக்கள உயர் பதவி வகிக்கிறார். இவருக்குக் கீழே முப்பது பொலிஸ்கந்தோர் இருக்கிறதாம்.

இதன் மத்தியில் சிக்ஸர் அடித்தாலோ அல்லது ஏதும் மத்திய கல்லூரிக்கு சாதகமாக நடந்தாலோ ஹோ ஹோ என கையை உயர்த்தி மேலே வீசி கத்துதல், ஓடித் திரிதல் 'பழைய மாணவர் வந்திருக்கிறோம் எங்களை ஏமாற்றாதீர்' போன்று சில சுலோகங்களைச் சொல்லிக் கொண்டே, கல்லூரி இலட்சிய வாசகத்தைத் திருப்பித் திருப்பிச் சொல்லிக் கை கொட்டி விளையாட்டுக் குழுவை உற்சாகப்படுத்துவான்.

இரு குழந்தைகளும் அப்பாவின் கையைப் பிடித்துக் குலுக்கியும் தோளில் தூங்க வைத்துப் பார்த்தும் நண்பர்கள் போல செல்லம் கொஞ்சியும் வளைய வருவார்கள். இந்தக் குதூகலத்தைக் கண்டு கமலம் வியந்து போவாள். இதுதான் யோகியின் இயல்புக்குணங்களா! இத்தகையதொரு சொந்த இயல்பைத் தன்னிடம் கொண்டவனா இவன். இத்தகைய மகிழ்ச்சியும் பிரகாசமும் கொண்டவான இவன். இதைப் பார்த்து ரசிக்கத் தானே நானும் வருடா வருடம் வருகிறேன் எனச் சிந்திப்பாள் கமலம்.

இந்த சுதந்திரத்தை அனுபவித்த குழந்தைகளா வீடு வந்ததும் 'அப்பா' என்று மடியில் ஏறினால் 'போங்கோடா' அங்கால், கமலி இஇ' இவங்களைக் கூப்பிடு. அலுப்பா யிருக்கு. ஏறி மிதிக்குதுகள் என்று சீறுவான்.

பொறுப்புள்ள கணவன், செல்லங்கொடுத்துக் குட்டிச் சுவராக்கக் கூடாத தந்தை ஆகிய முகமூடிகளுள் நுழைந்து பொறுப்புள்ள உழைப்பாளி எனும் முகமூடி அணிவதற்கான ஓய்வு நிலை தேவைப்படுகிறது யோகிக்கு.

அந்த யோகி இன்று இல்லையே என ஆதங்கப்படுகிறாள் பாட்டி கமலம். உதைபந்தாட்டக்குழுவின் உற்சாகமான கரைபுரண்டோடும் சத்தங்கள் அவள் கனவுலகில் இருந்து நிஜத்துக்கு இழுத்து வந்து பார்க்க வைத்தது.

**- குறமகள்-**






**சந்திரமௌலீஸ்வர சிவாலயம்**

தினமும் ஆறுகால பூஜைகள் நடைபெறும்
ஆலயம் திறந்திருக்கும் நேரம்

வெள்ளி, சனி, ஞாயிறு மற்றும் விசேட தினங்களில் காலை 7am - மாலை 9pm வரை
திங்கள் - வியாழன் - காலை 7am - 2pm மாலை 5pm - 9pm

விசேட தினங்களில் பூஜை நேரங்களில் மாற்றங்கள் ஏற்படலாம்.
ஆலயத்தை அழைத்து பூஜை நேரங்களை நிச்சயப்படுத்திக் கொள்ளுங்கள்

**Tel: 416 . 754 . 7338 / 416 .724 .7480**
3011 Markham Road , Unit 62 & 63 (North of McNicoll Ave.), Scarborough

**Sales Reps. Welcome**

For All your Real Estate & Investments Needs!

**Raja M. Mahendran,** P. Eng.
(Broker / Owner)



* INDEPENDENTLY OWNED AND OPERATED

**HomeLife/GTA Realty Inc.** Brokerage *
5215 Finch Ave E, #203 Toronto, ON
Tel.: **416.321.6969**

ROOM FOR RENT
KENNEDY & ELLESMERE
Rooms available. Close to Kennedy Station, TTC, school, mall. Avail. immediately.
3 Bedroom house also avail.
Contact: 416.830.5560

CARS, VANS & TRUCKS WANTED
Any make, Any condition.
Pay top dollars.
Contact: 416.835.3475



# பிடித்தவர்கள்

23ஆம் பக்கத்தொடர்ச்சி

தலைவாசலுக்கு வந்தாள்.

சிவா தலைவாசலில் பாயைப் போட்டுப் படுத்து விட்டான். அவனுக்குத் தெரியும் அய்யா வந்து தன்னோடை படுப்பாரெண்டு. அய்யா என்றுதான் அப்பாவை அவர்கள் அழைப்பார்கள்.

தலைவாசலில் இருந்த திண்ணையில் முதுகைச் சாய்த்துக் கொண்டு, கணவனைப் பார்த்துக் கொண்டிருந்த முத்தம்மா, எவ்வளவு நேரம் காத்திருந்தாளோ தெரிய வில்லை, மெதுவாக கண்ணயர்ந்து விட்டாள்.

மறுநாள் எவ்வளவு வில்லங்கங்கள் வரப் போகின்றன என அவளுக்கு அப்போது தெரிந்திருக்கவில்லைத்தான். - வளரும்.

# புதிய அலை...

22ஆம் பக்கத்தொடர்ச்சி

சினிமாவில் உங்கள் கதைகள் திருடப்படுவது பற்றி தொடர்ந்து பேசி வருகிறீர்களே?

சமீபத்தில்கூட 'பட்டத்துயானை' என்ற பெயரில் ஒரு திரைப்படம் வந்தது. என் நாவலின் தலைப்பு அது. அதற்கு என்னிடம் அனுமதி வாங்கவில்லை. அந்த விளம்பரத்தை பார்த்ததும் எனக்கு அதிர்ச்சி யாக இருந்தது. 'பட்டத்துயானை' படத்தின் இயக்குனர் என் கதைகளை எல்லாம் படித்துவிட்டு என்னோடு தொலைபேசியில் பேசியிருக்கிறார். அவருடைய உதவியாளர் களும் என்னோடு பேசியிருக்கிறார்கள். உண்மையிலே அவர் ஒரு வார்த்தை என்னிடம் கேட்டிருந்தால்கூட நான் மறுத்திருக்கப் போவதில்லை. இதுபோல் நாஞ்சில் நாடனின் 'எட்டுதிக்கும் மதயானை' தலைப்பும், பூமணியின் 'பிறகு' தலைப்பும் திருடப்பட்டிருக்கிறது. என்னுடைய தலைப்பு மட்டுமல்ல என்னுடைய சிறுகதைகளும், என் நாவலில் வரும் பல சம்பவங்களும்கூட இப்படி சினிமாக்காரர்களால் திருடப்பட்டிருக் கிறது. இப்படி திருடி படம் எடுத்தவர்கள் எல்லோரும் எனக்கு நெருக்கமானவர்கள் என்பதுதான் துரதிஷ்டமானது. இது தமிழ் சினிமாவுக்கு ஆரோக்கியமான செயல் இல்லை.



உங்களுடைய 'குற்றப்பரம்பரை' நாவலை பாரதிராஜா படமாக்கப் போகிறேன் என்றார். நீங்களும் அதை திரைவடிவமாக்கி கொடுத்தீர்கள். அப்படத்தின் வேலைகள் தொடர்ந்து நடக்கிறதா?

அதை இயக்குனர் பாரதிராஜாதான் சொல்ல வேண்டும். இயக்குனர் பாலாவுக்கு அதை படமாக்க வேண்டும் என்ற ஆசை இருக்கிறது. வெற்றிமாறனின் 'பொல்லாதவன்' வெளிவந்து பத்தாவது நாள் மதுரைக்கு வந்து என்னை பார்த்தார். 'குற்றப்பரம்பரை' நாவலை நான் படமாக்குகிறேன் என்றார். பல காரணங்களுக்காகவும் அது தள்ளிபோனது. இப்படி தமிழ் சினிமாவில் உள்ள முக்கியமான பல இயக்குனர்களுக்கு அதை படமாக்க வேண்டும் என்ற ஆசை இருக்கிறது. ஆனாலும், ஏதோவொரு காரணத்தால் அது நிகழாமல் இருக்கிறது. தமிழ் இலக்கியத்துக் கான இந்திய அரசின் சாகித்ய அகடமி விருது ஒவ்வொரு வருடமும் சர்ச்சைக்குள்ளா கும். இந்த வருடம் எழுத்தாளர் ஜோ.டி. குரூஸ்க்கு வழங்கப்பட்டுள்ளது. இதனைப் பற்றி...

அவருக்கு விருது கிடைத்தது சந்தோஷமாக இருக்கிறது. மிகச் சிறந்த படைப்பாளிக்கு கொடுத்திருக்கிறார்கள். நீங்கள் குறிப்பிட்டது போல், எல்லா வருடமும் விமர்சனங்கள் எழும். ஆனால் இம்முறை அப்படி எந்த சர்ச்சைகளும் விமர்சனங்களும் இதுவரை எழவில்லை. எப்படி நான் ராமநாதபுரத்து மக்களின் வாழ்க்கையை சித்தரிக்கிறேனோ அதே போல் ஜோ.டி. குரூஸ் தூத்துக்குடி வாழ் பரத்தவர் வாழ்வை ஆழமாக படைப்பவர்.

## தற்கால தமிழ் சினிமாவின் போக்கு குறித்து...

புதிய இளைஞர்கள் வந்து கொண்டிருக்கிறார் கள். இது சந்தோஷமான விஷயம்தான். ஆனால், எல்லாருமே நேற்று பெய்த மழையில் பூத்த காளான் மாதிரி தெரிகிறார்கள். இது எனக்கு அச்சமாக இருக்கிறது. தமிழர்களுடைய வாழ்க்கையை, கலாசாரத்தை பற்றிய ஆழமான புரிதல் இவர்களிடம் இல்லை. உலகில் சிறந்த படங்கள் எல்லாமே அந்த மக்களின் கலாச்சாரத்தை, பண்பாட்டை மையப்படுத்தி எடுக்கப்பட்டவைதான். பக்கத்து கேரளாவில் கூட சிறந்த படங்கள் எத்தனையோ வருகின்றது. தமிழில் அந்தளவு வருவதில்லையே. குறைந்த செலவில் முதல் படத்தை வெற்றியாக்கியவர்கள், அடுத்து கோடிகளை நோக்கி போகிறார்கள். நான் சமீபத்தில் பிரசன்னா ராமசாமி இயக்கிய ஒரு டொக்குமெண்டரி பார்த்தேன். அது கேரளாவில் எத்தனையோ விருதுகள் பெற்ற இயக்குனர் அடூர் கோபலகிருஷ்ணனை பற்றியது. உலகளவில் அவர் வாங்காத விருதே கிடையாது. அப்படிப்பட்ட ஒரு இயக்குனர் தன்னுடைய அன்றாட வாழ்வில் வயலில் இறங்கி வேலை செய்கிறார். சாதாரண ஒரு விவசாயி போல வேட்டியும் ஒரு ஜிப்பாவும் போட்டிருக்கிறார். ஆனால், தமிழ் சினிமாவில் அவரைப்போல ஒரு படம் கொடுத்தால் அடுத்து அவர்கள் கோடியில் தான் புரள்வார்கள்.

இயக்குநர் பாலாவின் அடுத்த படத்திற்கான கதை உங்களுடையது என்றொரு பேச்சு அடிப்படுகிறதே?

அவர் இரண்டு, மூன்று கதை கருக்கள் சொல்லி எதை படமாக்கலாம் என்று என்னிடம் கேட்டார். நான் ஒரு கதைக் கருவை தேர்வு செய்தேன். பாலா என்னை எல்லா விதத்திலும் பயன்படுத்திக் கொள்ளலாம். அதற்கு நான் பரிபூரணமாக சம்மதிக்கிறேன்.

## தற்கால தமிழ் இலக்கிய போக்கு குறித்து...

எழுபதுகளில் தமிழ் இலக்கியத்தில் இருந்த போக்கு, வளர்ச்சி தற்போது இல்லை. நல்ல சிறுகதைகள், நாவல்கள், கவிதைகள் படிக்கக்கிடைப்பது அருகிக்கொண்டே வருகிறது. 'ஒரு இடத்திலாவது காவியத் தன்மை இல்லாத படைப்பு இலக்கியமே இல்லை' என்றார் வண்ணநிலவன். ஆனால், தற்போது காவியத்தன்மை இல்லாத படைப்புகள்தான் வந்து கொண்டிருக்கிறது.

# புற்றுநோய்...

25ஆம் பக்கத்தொடர்ச்சி

விளக்குவார்.

சிறுநீருடன் இரத்தம் கலந்து வெளியேறினால் ஆண், பெண் இருபாலாருக்கும் புற்று நோய் உள்ளது எனவும் கூறமுடியும். எதற்கும் மருத்துவர் பரிசோதனை முக்கியமாகும். வேறு வியாதிகளிலும் சிறுநீருடன் இரத்தம் வருவதற்கு இடம் உண்டு. அதனை தங்கள் மருத்துவர்கள் நுட்பமாக கண்டு அறிந்து சிகிச்சை செய்ய ஆரம்பிப்பார்கள். எனவே நீங்கள் அநாவசியமாக ஒன்றையும் யோசித்துக் கவலையடைய வேண்டியதில்லை.

நமது எலும்பில் உள்ள மச்சையில் (போன் மரோ) இருந்து வெண்சீவ அணுக்கள் உற்பத்தியாகின்றன. இந்த மச்சையில், ஒருவகை வெள்ளை திசுக்கள் ஏராளமாக உற்பத்தியாகி போன் மரோவை அடைத்துக் கொள்ளும். இது இரத்தத்தில் கலந்து உடல் முழுவதும் பரவும். இதனால் நல்ல வெள்ளைத் திசுக்கள் ஏராளமாகப் பெருகும். புற்று நோய் திசுக்களை செயல்படாமல் செய்யும். இதனால் பிராணவாயுவை எடுத்துச் செல்வது இலகுவாகும்.

பெருங்குடல், மலக்குடல், ஆசனவாய் என்பவற்றில் (Colon and Rectam) புற்று நோயின் தாக்கம் இருந்தால் மலத்துடன் இரத்தம் கலந்து வருதல், மலம் வேண்டியளவு வெளியேறவில்லையே என்ற உணர்வு, வயிற்றுப் பகுதி பாரமாக இருக்கும் தன்மை, வாயு வெளியேறுவதில் சிரமம் என்பன இருக்கலாம். ஆனால் பரீட்சிக்காமல் இது புற்று நோய் அறிகுறிதான் எனக் கருதவேண்டாம். தங்கள் மருத்துவர் ஆக வேண்டிய பரீட்சைகள் எல்லாம் செய்து முடிவு எடுப்பார்.



1. கையுறை போட்டு உரிய இடத்தில் விட்டு பரிசோதிப்பார்.
2. எக்ஸ்ரே எடுப்பார்.
3. சிக்மாயிடோஸ்கோப் (sigmoidoscope) என்ற கருவியாலும், கோலனோஸ்கோப் (Colonscope) கருவியாலும் கட்டி அல்லது ஏதும் அனாவசிய வளர்ச்சி உள்ளனவா? எனவும் அறிந்து கொள்வார்கள். இப்படி பலவித நுட்பமான பரிசோதனைகள் உண்டு. இவற்றைக் கொண்டு இவை புற்று நோய் தானா என்பதை நிர்ணயித்து வைத்தியத்தை, செய்ய ஆரம்பிப்பார்கள்.

# போருக்குப் பின்னான தமிழ் திரைப்படங்கள்

வானரன்

நிழல் (இந்தியா) செம்ரம்பர்-நவம்பர் 2013இல் வெளிவந்த கட்டுரை சில மாற்றங்களுடன் இங்கு பிரசுரமாகின்றது.

கடந்த இதழ் தொடர்ச்சி...

## 5. With You, With out you

அடகுக் கடை வைத்திருக்கும் ஒரு சிங்களவருக்கு அக்கடைக்கு அடிக்கடி வரும் ஒரு தமிழ்ப் பெண் மீது ஒரு ஈர்ப்பு ஏற்படுகின்றது. அப் பெண்ணிற்கு அப் பெண்ணின் உறவினர்கள் வயது முதிர்ந்த வரை திருமணம் செய்து வைக்கப் போகின்றார்கள் என அறிந்து இவர் அப் பெண்ணை திருமணம் செய்து கொள்கின்றார். இவர்களின் திருமணத்தின் பின்னர் ஒரு நாள் அடைவுக்கடைக்காரரின் நண்பர் இவர்களது வீட்டில் வந்து தங்கு கின்றார். நண்பர் மூலம் அடைவுக் கடைக்காரரின் முன்னாள் வாழ்வு தெரிய வருகின்றது. இவர் முன்னர் இராணுவத்தில் வேலை பார்த்தவர் என்பது தெரிய வருகின்றது. இது இவரது தமிழ் மனைவிற்கு அதிர்ச்சியளிக்கின்றது. இத்தமிழ்ப் பெண்ணிள் குடும்பம் இராணுவத்தால் சிதைக்கப்பட்டுள்ளது. அனைவரும் கொல்லப் படுகின்றனர். இப்பொழுது இப்பெண்ணிற்கு உளச்சிக்கல். தனது குடும்பத்தைக் கொன்றவருடன் எப்படி வாழ்வது என்பது அவளின் கேள்வி. தனது அடைவுக் கடையை ஒரு முஸ்லீம் வர்த்தகரிடம் விற்று விட்டு மனைவியின் விருப்பமான இந்தியா விற்கு செல்வதை நிறைவேற்ற முயற்சிக்கின்றார். பணத்துடன் வரும் இவரிற்கு அதிர்ச்சியான செய்தி ஒன்று காத்திருக்கின்றது. இவரது மனைவி தற்கொலை செய்து கொள்கின்றார்.

"A Gentle Creature" by Fyodor Dostoyevsky என்ற சிறுகதையை மையமாகக் கொண்டே இப்படத்தை பிரசன்னா உருவாக்கியுள்ளார். இப் படத்தில் தமிழ்ப் பெண்ணாக மராத்திய நாடகரான அஞ்சலி பட்டீல் மிகவும் சிறப்பாக நடித்திருந்தார். இவர் சில ஹிந்தி படங்களிலும் நடித்துள்ளார். முன்னாள் இராணுவ வீரனாக இயல்பாக நடித்துள்ள சியாம் பெனான்டோவும் ஒரு நாடகராவார்.

இப்படத்தை ரொரண்ரோவில் சிறப்புக் காட்சியாக மார்க்கம் யோர்க் அரங்கில் சுயாதீன திரைப்படக் கழகம் திரையிட்டிருந்தது. இதன் பின்னர் பிரசன்னாவுடனான கலந்துரையாடலும் இடம் பெற்றிருந்தது. எனது சிங்கள இனத்தின் கொடுமைகளுக்கு எதிராக எனது மனச்சாட்சியை பதிவு செய்துள்ளேன் என பிரசன்னா கலந்துரையாடலில் தெரிவித்தார். இறுதியில் தமிழ் மனைவி தற்கொலை செய்வது சிங்கள அரசு தமிழ் மக்களையும் அவர்களது உரிமைகளையும் கொலை செய்து விட்டது என்பதையே காட்டுகின்றது. தமிழ் மக்களுக்கு சம உரிமைகள் வழங்கப்பட வேண்டும். இல்லையேல் சிங்கள மக்களுடன் சேர்ந்து வாழ்வது சாத்திய மில்லை என்பதையும் இப்படம் தெளிவாக குறிப்பிடுகின்றது. படத்தின் இறுதியில் இவரது அடவுக் கடையை ஒரு முஸ்லீம் வர்த்தகர் வாங்குகின்றார். இன்று இலங்கை யில் முஸ்லீம்கள் தொடர்ச்சியாக வர்த்தக ரீதியில் பலமானவர்களாக மாறுகின்றனர். 1915ல் சிங்கள முஸ்லீம் இனக்கலவரம் ஏற்பட்டது. படத்தில் காட்டப்படும் சம்பவம் சாதாரணமானதாகவும் இயல்பானதாகவும் இருக்கலாம். ஆனால் அடுத்த



கட்டத்துக்கான எச்சரிக்கை ஒன்றையும் இங்கு பிரசன்னா பதிவு செய்ய தவற வில்லை. ஒரு கலைஞனாக கடந்த கால துயரங்களையும் கொடூரங்களையும் நிகழ் கால யதார்த்தத்தையும் எதிர்கால நடை பெறப்போகும் விளைவுகளையும் அவர் இங்கு பதிவு செய்கின்றார். பிரசன்னா தனது ஆவணிவெய்யில் படத்தில் யாழ்ப்பாணத்தில் இருந்து முஸ்லீம் மக்கள் வெளியேற்றத்தை விமர்சிக்கின்றார். இவர் ஒரு நேர்மையான படைப்பாளியாகவே செயல்பட்டுவருகின்றார்.

பொதுவாகவே பிரசன்னாவின் படங்களில் போர்க் காட்சிகள் இடம் பெறாது. ஆனால் போர்ச் சூழலின் கோர முகங்கள் இப்படங்களில் பதிவு செய்யப்பட்டிருக்கும். இவரது அனைத்துப் படங்களிலும் குற்ற உணர்வு ஒரு பாத்திரமாக மையமாக இருக்கும். இப்படத்தையும் ஒரு குற்ற உணர்வுடனேயே இவர் படமாக்கியுள்ளார். இவரது ஒவ்வொரு படத்திலும் நிறம் மாறுபட்டிருக்கும். ஆவணி வெய்யிலில் படம் முழுவதும் மதிய நேரம் கடும் வெயில் அனல் கொதிப்பது தெரியும். போரின் அகோரத்தை வெளிப்படுத்துகின்றது இந்நிறம் மற்றும் சூழல். இப்படம் ஒரு சில காட்சிகளை தவிர அனைத்துக் காட்சிகளும் இருளான பொழுதிலேயே படமாக்கப் பட்டுள்ளது. இது போர் முடிந்தும் இன்னமும் விடிவு பிறக்கவில்லை என்பதை வெளிப்படுத்துகின்றது. இருள் சூழ்ந்த மனத்துடனேயே தமிழ் மக்கள் உள்ளார்கள் என்பதைக் குறிக்கின்றது. இயற்கை ஒளியின் ஊடாகவே சூழல் அனர்த்தங்களையும் மனோநிலையையும் வெளிப்படுத்துகின்றார். இவரது படங்களின் பின்னணி இசையும் சூழலின் நிறங்களை வெளிப்படுத்தும்.

முன்னாள் இராணுவ வீரன் தேர்ந்து எடுத்த தொழில் சம்பாதிப்பதற்கு இலகுவான வழியான அடவு வைக்கும் கடை. இது பிரசன்னா இராணுவ வீரர்கள் மீது தொடர்ச்சியா முன்வைக்கும் விமர்சனமாகும்.

பிரசன்னா தமிழ் மக்களுக்கு உரிய முறையான தீர்வு வழங்கப்பட்ட பின்னரே சேர்ந்து வாழ்தல் சாத்தியம் என்கின்றார். அசோக ஹங்கம முரண் நிலையில் தமிழ் மக்கள் சிங்கள மக்களை சார்ந்திருத்தல் அவசியம் என்கின்றார். இங்கு அசோக ஹங்கம ஒரு பக்க சார்பு நிலையிலேயே தனது பதிவை முன்வைக்கின்றார். இதனை ஒரு மேலாதிக்க பார்வை என்று கூட கூறலாம். பிரசன்னா போர்ச் சூழலில் இருந்து சற்று விலகி உள்ள பிரதேசத்தில் தனது படத்தை உருவாக்கி போரின் கோரங்களை வெளிப்படுத்துகின்றார். அசோக ஹங்கம இராணுவம் 24மணி நேரமும் பிரதேசம் முழுவதும் பரவியிருக்கும் பிரதேசத்தில் தனது படத்தினை படமாக்கியுள்ளார். களமும் அங்கு தான் உள்ளது. ஆனால் மருந்துக்குக் கூட ஒரு இராணுவத்தையும் காணவில்லை. அதன் அழுத்தங்களையும் முகங்களையும் கூட படத்தினூடாக பெறமுடியவில்லை. இங்கு சிலியில் 1973ல் அப்போதைய அதிபர் Salvador Allendeன் கொடுமைகளை Post Mortem என்ற படம் பதிவு செய்திருந்தது. ஒரு பிரேத பரிசோதனை இடம் சிலியின் அரச கொடுமைகளை இயல்பாக வெளிப்படுத்தி யிருந்தது. தற்செயலாக ஒருவர் உயிரோடு அங்கு கொண்டுவரப்பட்டாலும் அவர் இறக்கப்படவேண்டும். இவ்வாறான சில கட்டளைகளுக் கூடாக இயங்கும் பிரேத பரிசோதனை அலுவலகம் அப்போதைய ஆட்சியின் முகமாக வெளிப்படுத்தியிருந்தார் இயக்குனர் Pablo Larraín. அசோக ஹங்கம அரசு இயந்திரத்தின் அநீதிகளை வெளிப்படுத்துவதற்கு பதிலாக மீண்டும் ஒரு போர் வெடித்து விடுமோ என்ற அச்சத்தில் முன்னாள் போராளிகளை மக்கள் ஏற்றுக் கொள்ளமாட்டார்கள் என்ற கற்பிதத்துக்கு வருகின்றார். இவரும் அரச பிரதிநிதியோ என்ற அச்சம் படத்தைப் பார்த்தவுடன் எழுகின்றது.

6. போருக்குப் பின்னான படைப்புக்கள் போரினால் ஏற்படுத்தியுள்ள உள்மனச் சிக்கல்களையும் போர் ஏற்படுத்தியுள்ள மனக் காயங்களையும் குற்ற உணர்வையும் கருப்பொருட்களாக பதிவு செய்கின்றன. இந்த மெய்யுணர்வு விளக்கத்தை சில படைப்பாளிகள் சிறப்பாக வெளிப்படுத்த தவறிவிடுகின்றார்கள். பிரசன்னா விதானகே, லெனின் சிவம், சதா பிரணவன் போன்றோர் இதனை சிறப்பாக வெளிப்படுத்தியுள்ளனர். போரினை கட்டுடைக்கும் இப்படைப்புக்கள் சமூக சக்திகளையும், ஆக்கிரமிப்புச் சக்திகளையும் இனம் காட்டத் தவறவில்லை. இவ்வாறான ஆழமான படைப்புக்களின் தொடர்ச்சி போரின் கோரத்தையும் பன்முகத்தன்மையும் உலகிற்கு நினைவூட்டிய வண்ணமே இருக்கும்.


நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்
இலவச ஆலோசனை வழங்கப்படும்



சிறியோர் தொடக்கம் முதியோர்வரை இதுவரை தீராத வியாதியினால் பீடிக்கப்பட்டு குணமடையாமல் இருப்பவர்களுக்கு இயற்கை மூலிகைகளிலான தீங்கு விளைவிக்காத சூரணங்கள், குளிகைகள், லேகியங்கள், உயிர்ச்சத்துக்கள், பானங்கள் போன்றவற்றினாலும் எண்ணையினாலும் குணமடைய தகுந்த ஆலோசனை! இலவசமாக வழங்கப்படும். இது தவிர விளம்பரம் பத்திரிகை அலுவலகத்தில் "எம்மை நாம் பாதுகாப்பது எப்படி" என்ற புத்தகம் விற்பனைக்கு உள்ளது.

இலவச ஆலோசனைகளுக்கு: 647.456.9796

**வைத்திய கலாநிதி கே.ரி. கோபால்**

D.A.M.S - R.A.M.P. (SriLanka) M.H.D.C (Madras) C.D.S. _ C.N.H.P. (Canada) Herbalist - Sidha - Ayurvedic - Homeopathic & Biochemic Family Physician LG.Ayurvedic Medical Services (SriLanka)

Sales Reps. Welcome

For All your Real Estate & Investments Needs!

Raja M. Mahendran, P. Eng.

(Broker / Owner)



HomeLife/GTA Realty Inc. Brokerage *

* INDEPENDENTLY OWNED AND OPERATED

5215 Finch Ave E, #203 Toronto, ON

Tel.: 416.321.6969

# தியானம்

பல்வேறு துறைகளிலும் வளர்ச்சி அடைந்துள்ள மேலைத்தேச நாடுகள் பல உளவியல் சிகிச்சை முறைகளை புதிது புதிதாக உலகிற்கு வழங்கி வருகின்றன. அதேவேளையில் கீழைத்தேச நாடுகளில் நீண்ட காலமாகக் கடைப்பிடிக்கப்படுகின்ற தியான முறைகளை ஒதுக்கி வைத்திருந்த மேலைநாடுகள் மீண்டும் ஒரு புதிய முடிவுக்கும் வந்துள்ளன. மாற்ற முடியாத, அல்லது குறைக்க முடியாத உள-உடல் பிரச்சினைகளுக்கு மிகச் சிறந்த தீர்வாக 'தியானமும்' எதிர்காலத்தில் விளங்கும் என்பதாகும். ரொறன்ரோ ஸ்ரார் பத்திரிகையில் வெளிவந்த 'Cracking Depression' என்ற கட்டுரை ஒன்றில் கூறப்பட்டுள்ள அரிய கருத்துகளே மேலும் இதனை ஆராயத் தூண்டியது. ஆசிய நாடுகளில் ஆயிரக்கணக்கான ஆண்டுகளாக தியானத்துடன் மனித வாழ்வு இணைந்திருந்தது.

உள-உடல் ரீதியில் இதன் பயன்பாடு உணரப்பட்டமையால் இயல்பாகவே சமயத்தின் வழி நின்று வளர்ச்சியடைந்தது. இன்று இதன் மகத்துவத்தினை புரிந்து கொண்ட மேலைத்தேச நிபுணர்கள் மனநிலையையும் உடல்நிலையையும் அழகாக ஒழுங்குபடுத்துவதில் தியானம் மிகவும் உதவும் என இன்று அறிக்கைகள் எழுத ஆரம்பித்துள்ளனர். பல விஞ்ஞானிகள் பரம்பரை அலகு, மூளைச்செயற்பாடு, ஆளுமை மாற்றங்கள் பற்றி ஆராயும் வேளையில் உலகில் 121 மில்லியன் மக்கள் உள நோயாளிகளாக இன்னும் உள்ளனர். கனடாவில் மட்டும் 36 சதவீதத்தினர் உளக் குறைபாடு உள்ளவர்கள் என்று கூறலாம். உளச்சோர்வு, பதட்டம், பயம், பீதி போன்ற உளக் குறைபாடுள்ளவர்கள் அனைவரும் இனிமேல் தியானத்தின் மூலமே இதனை மாற்றவேண்டி வரலாம் என வைத்தியர்கள் கூறுகின்றனர். ரொறன்ரோவில் உளவியல் நிபுணர் Zindel Segal தற்போது தியான முறைகளை அறிமுகம் செய்துள்ளார். இதில் பங்கு பற்றிய 50 வீதத்தினர் தமது உளச்சோர்வினை நீக்கியுள்ளனர். இதற்கு முன்பே 1977 இல் Goleman என்ற அறிஞர் தியானம் செய்பவர்கள் பற்றி ஆராய்ந்து சில கருத்துகளை வெளியிட்டுள்ளார். "கண்களை மூடுதல், மந்திரங்களை உச்சரித்தல், புலன்களை ஒன்றாக்குதல், சிந்தனைகளை சிதறவிடாதிருத்தல் போன்றவற்றில் மீள்புத் தாக்கம் நிகழ்கின்றது" என்பதே அவரது கருத்தாகும். "உளவியல், உடலியல், சுய கணிப்பு, நம்பிக்கை, மனஅழுத்தக்குறைவு, இரத்த அழுத்தசமச்சீர், பதட்டமின்மை போன்ற பல தீர்வுகள் இதிலிருந்து பிறக்கின்றன" என்றார். 'சுவாசத்தினை சமன் செய்து இதய ஒலியை நிலை நிறுத்தி பல்வேறு முறைகளில் உடல்சீரடைகிறது' என்கிறார். எனவே, இன்று மேலைத்தேச உளவியலாளர்கள், ஆரோக்கிய வல்லுநர்கள் மீளவும் தமது கவனத்தினை தியானத்தில் செலுத்த ஆரம்பித்துள்ளனர்.

பொதுவாக உளச்சிகிச்சை முறை மூன்று நிலைகளில் நடைபெறுகிறது. நோய் அறிமுறை, நோய் இருப்புமுறை, நோய் மாற்றமுறை என்பதே அவை. சில நோய்களுக்கு மருந்து வழங்குவதே இவர்கள் நிலைப்பாடு. எனவே, சமயத்தினால் அறிமுகமான தியானத்தின் வழிப்படின் மருந்து தேவையற்றதாகிறது. மனிதமனம் விழிப்பு நிலையில் உள்ளபோது தியானம் செய்யப்படின் சில ஒழுங்குகளைப் பெற்றுக் கொள்ள முடிகிறது. அமைதியுடன் ஒருமுகப்பட்டு உள்வலுவைக் கூட்டும்



இத்தியானம் "நான் ஒரு ஆன்மா" வெளிச்சத்தின் அடையாளம், அமைதியுள் வாழ்கிறேன், என் உடலுக்கு அப்பால் உள்ளேன், வடிவம் இல்லை, உருவம் இல்லை, உள்ளொளியை ஏற்றுகின்றேன், அன்பின் ஆழத்தினை உணர்கிறேன், நான் அந்த அன்பாகிறேன். இப்படியே சில ஆழ்மனப்படிவுகள் தொடர்கின்றன. ஒரு மணிநேரம் அநாவசியமாக சிந்தித்தவர்கள் தியானத்தில் சில நிமிடங்களில் செழுமை யாக சிந்திக்கிறார்கள். உடல் ஓய்வு பெற மனக்காட்சிகளை ஒன்றாக்கி அன்பு, மகிழ்ச்சி, சக்தி இவர்களில் ஒன்றாகின்றன. ஆசிய நாடுகளில் தற்போது தியானம், யோகப்பயிற்சி என்பன மிக முக்கியமான உளச்சிகிச்சை முறைகளாகக் கொள்ளலாம்.

இதில் தியானம் என்பது உளச்செயற்பாடு களை கட்டுப்பாட்டில் கொண்டுவருவது, விழிப்புணர்வு, ஒருமுகப்படுதல், மகிழ்ச்சி, அன்பு, கருணை என்பனவற்றினை மிகவும் ஆழமாக நினைவு கூருதல் ஆகும். யோகப் பயிற்சி என்பது தியானம் போன்றது. எனினும் சில உடற்கட்டுப்பாடுகள், சுவாசக் கட்டுப்பாடுகள் கொண்டது. Hatha Yoga என்ற முறை மேற்குலகில் மிகவும் வளர்ந்துள்ளது. தற்போது Raja Yoga முறையும் பிரபலமாகியுள்ளது. தன்னை அறிதல் என்னும் கோட்பாட்டில் இது மிகவும் பயன்பாடுள்ளது. பொதுவாக தியானமும் யோகாசனமும் மூவாயிரம் ஆண்டுகளுக்கு முன்பிருந்தே அறியப்பட்டிருந்தாலும் நூற்றுக் கணக்கான ஆய்வுகள் இன்றுள. இன்று பொதுவாக பதட்டம் பீதி போன்றவற்றில் மிகவும் வலுவுள்ளதாக தியானமும் உள்ளது. 1982இல் Shapiro, West (1987) Kwee (1990) தியானம்பற்றி ஆய்வு செய்துள்ளனர்.

அத்துடன் மாரடைப்பு, ஆஸ்த்மா, நித்திரை யின்மை, உயர் இரத்த அழுத்தம், கடுமையான உடல் நோ என்பதில் கூட தியானம் உதவ முடியும் என்பதே இவர்கள் முடிவாகும். படைப்பாற்றல், சுயகட்டுப்பாடு, திருமணதிருப்தி, கல்வித்திறமை, ஒழுக்கக் கட்டுப்பாடு போன்ற பலவற்றில் தியானம் மிகவும் உதவுவதாக குறிப்பிட்டுள்ளனர். அத்துடன் ஆயுள் அதிகரிப்பு ஏற்படலாம் என்ற அலெச்சாண்டர் (1989) அறிஞர் கூற்றும் உள்ளது. இன்னும் ஆசிய நாடுகளில் மில்லியன் கணக்கான மக்கள் தியானம் செய்கின்றனர். இதனை ஒரு கட்டாய வழக்கமாக்கியும் உள்ளனர். சமயத்தின் வழி நின்று அன்பு மன எழுச்சி, நற்கருணை, அமைதி, ஆசையை அழித்தல், கோபத்தினை குறைத்தல், தாராள மனப்பான்மையை வளர்த்தல் என்பதில் இது உதவுகின்றது. 1986இல் Brown & Engler செய்த ஆய்வில் தியானம் செய்தவர்கள் ஆவேசம் உடையவர்கள் அல்ல. பாலியல் பிரச்சினைகளுக்கும் உட்பட்டவர்களுமல்ல என்கிறார். தியானத்திலிருந்து பல்வேறு அனுபவங்களை பெறமுடிகின்றது. முதலில் தன்னைப்பற்றி முழுமையாக அறிதல் நிகழுகிறது. உள்ளும் புறமும் உணர முடிகிறது. சமாதானம் உள்ளே இருக்கிறது என்பதனை அறிய முடிகிறது. 'Mederi' என்ற லத்தீன் சொல்லில் இருந்தே Meditation பிறந்தது. இதன் கருத்து 'மனம் ஆறுதல்" என்பதாகும். மனத்தினை ஆற்றுவதில் மலர்போல் மெழுகுவர்த்திபோல் செயல்படுகிறோம். உள்மனதினை ஆராய்தல், எல்லா சிந்தனைகளையும் நெற்றிக்கு கொண்டு வருதல், வெளியுலகிலிருந்து விடுவித்தல், அமைதி என்னை ஆட்கொள் கிறது, எனது மனம் அமைதியாகிறது, தெளிவாகிறது, இதனை சற்று நேரம் அனுபவிக்கிறேன் இப்படியே மனஅமைதி கிட்டுகிறது. பிரம்ம குமாரிகள் ஈஸ்வரிய விஸ்வ வித்தியாலயம் வெளியிடும் நூல்களில் ராஜயோகம் முதன்மை பெறுகிறது. பல்வேறு யோக முறைகளில் சிறந்ததாக இவர்கள் கருதுவது இதனையே.

இதற்காக 80க்கு மேற்பட்ட நாடுகளில் நூற்றுக்கணக்கான சங்கங்கள் செயல்படு கின்றன. இவ் ராஜயோகத்தில் 8 விதமான அனுகூலங்களை அடையமுடியும். என்பதே இவர்களது நம்பிக்கையாகும். சகிப்புத் தன்மை, தைரியம், கூட்டுறவு, ஒத்துழைப்பு, பகுத்தறிதல், நடுநிலைமை, சாதக நிலை, விடுதலை என்பனவே அவையாகும். 'நான் ஒரு அமைதியான ஆன்மா' என்றும் 'ஓம் சாந்தி' என்றும் இவர்கள் கூறும்போது இயல்பாகவே அமைதி பிறக்கிறது. ஒருவர் போல் இன்னொருவரில்லை. என்ற நிலையை மாற்றி ஒன்றாக்குகின்றது. மன எழுச்சியை பூரண அமைதிக்கு கொண்டு செல்கிறது. தாமரை மலர் போல் தனித்துவமாக்கிறது. அழியாத சாந்தி கிடைக்கிறது. எதனையும் சமாளிக்கும் சக்தி கிடைக்கிறது. இருட்டிலிருந்து வெளிச்சத்திற்கு வரும் நிலையில் இன்று உலகின் பல்வேறு பிரச்சினைகளுக்கும் சில நிமிடங்களில் ஆற்றப்படும் தியானம் பலன் தருமாயின் உண்மையில் இது ஒரு பூரண விளக்க மாகும். தொடர்ந்தும் உலகம் விருப்புடன் இதனையே செய்து வரும்.



**சிந்தனைப் பூக்கள்**
**எஸ். பத்மநாதன்**


TUTORING
KEEN TUTORING CENTRE
By Qualified & Experienced Tutors
CHEMISTRY, PHYSICS, BIOLOGY
FUNCTIONS, ADV. FUNCTIONS
CALCULUS & VECTORS, DATA MGT
SCIENCE, MATH, ENGLISH, FRENCH
Individual & Small Group classes, Individual care
GR 1-12, UNIV. 1st & 2nd Yr; "Affordable Fees"
Call: 647 341 3975 / 647 869 3974 / 416 335 5956
www.keentutoringcentre.com
SPECIAL CLASSES FOR
PRE-UNIVERSITY
MCAT EXAM
IB & AP program
SUMMER CLASSES
"July- August"
REGULAR CLASSES
"Throughout the year"
உங்கள் கல்விக்கான சிறந்த தெரிவு

LAW OFFICE
STEFANO FORTINI
B.A., LL.B., Barrister & Solicitor
3 Catherine Avenue,
Aurora, Ontario
L4G 1K4
Tel: 416.999.4376
Fax: 905.727.7017
Email: sfortini@rogers.com

# அனைவருக்கும் உளம் கனிந்த பொங்கல் நல்வாழ்த்துக்கள்

# நிரு பிராண்ட்



Niru Enterprises Inc
40 Minuk Acres
Scarborough, ON M1E 4Y6
Canada
Tel: 416.750.1976
Fax: 416.750.8779
www.niru.com

Niru Niru
நிரு
பிராண்ட்

# நால்வகை கரடிகள்

முன்னொரு காலத்தில் எல்லா கரடிகளும் ஒரே மாதிரி சாம்பல் நிறமாக இருந்தன. ஆனால் காலப்போக்கில் ஒவ்வொரு இனமாக பிரிந்து வெவ்வேறு நிறமாயின. அந்தக் காலத்தில் ஒரு கூட்டமாய் சாம்பல் நிற கரடிகள் வாழ்ந்து வந்தன. அவை அனைவரும் சேர்ந்து பழங்கள், சிறு மிருகங்கள் போன்றவற்றை உண்டு வந்தன.

ஒரு முறை அவை வாழ்ந்த இடத்தில் உணவு தீர்ந்து போய் விட்டது. ‘இனி என்ன செய்யலாம்?’ என்று ஒரு கரடி கேட்டது. ‘வேறு ஒரு இடத்திற்கு செல்வோம்’, என்றது மற்றொன்று.

சரி என்று மற்ற கரடிகளும் சம்மதித்தன. ஆனால் எங்கு செல்லலாம் என்று அந்தக் கரடிகளுக்குள் சண்டை வந்தது. ‘சரி நாங்கள் பிரிந்து ஒவ்வொரு திசையில் எங்களுடைய எண்ணதிற்கு செல்வோம்’ என்றது ஒரு கரடி. அப்படியே நாலு திசையிலும் கரடிகள் நான்காக பிரிந்து சென்றன.



வடக்கு திசையில் சென்ற கரடிகள் நெடுந்தூரம் சென்றன. மாதக்கணக்கில் நடந்து சென்றன. கடைசியில் பனி இருந்த இடத்திற்கு வந்தன. அங்கு மீன்கள் அதிகமாகக் கிடைத்தன. இவ்விடம் நன்றாக இருக்கிறதே என்று அந்தக் கரடிகள் அங்கேயே இருந்து விட்டன. அவை பனியில் நடந்து பனியில் வாழத் தொடங்கியதால், அவை பனியின் நிறமாக மாறின. அவை துருவக் கரடிகள் என அழைக்கப்பட்டன.

கிழக்கே சென்ற கரடிகள் பனி உள்ள இடத்தினூடாக நெடுந்தூரம் சென்று களைத்துப் போய், ஒரு குளத்திற்கு அருகில் சென்றடைந்தன. அதன் அருகில் கொஞ்சப் பழங்களை உண்டு, பின்னர் குளத்தில் கை, கால், முகம் கழுவின. குளத்தில் பார்த்தால் கழுவிய இடம் எல்லாம் பழங்களின் கறுப்பு நிறமாக மாறியதை கண்டு அதிசயப்பட்டன. ‘இனி இந்த வகை பழம் சாப்பிடக் கூடாது’ என்று நினைத்த கரடிகள் அங்கிருந்த ஒரு புல்லை சாப்பிட ஆரம்பித்தன. அவை தான் Panda கரடிகள் என அழைக்கப்பட்டன. அந்தப் புல்தான் மூங்கில் மரம்.

தெற்கே சென்ற கரடிகள் கனதூரம் சென்றன. அவை களைத்து போய் நீண்ட நேரம் படுத்து உறங்கின. எழும்பிய போது அவை சூரியனால் கறுத்து போய் விட்டன. அங்கு போதிய உணவு இருந்ததால் அவை அங்கேயே வாழத்தொடங்கின. அவை கறுப்புக் கரடிகள் என அழைக்கப்பட்டன.

கடைசியில் மேற்கு நோக்கி சென்ற கரடிகள் கல்லிலும் மண்ணிலும், சேற்றிலும் சென்று, அதற்கு பழக்கப்பட்டு மலையடியயில் வசிக்கலாம் என்று நினைத்தன. அவை குளத்தில் போய் கழுவி மண்ணை போக்கலாம் என நினைத்து கழுவின. ஆனால் மண்ணும் போகவில்லை. அவை மண்ணிற கரடிகள் ஆக மாறின. அவை மண்ணிறக் கரடிகள் என அழைக்கப்பட்டன.

**நீதி: தேசத்தோடு ஒத்து வாழ்**
(ஆத்திசூடி)



**ஞா. ஆரணி**
அகவை 15

## இளையோர் ஆக்கம்

இதில் 19 வயதும் அதற்கு உட்பட்டவர்களும் தமிழில் எழுதும் சொந்த ஆக்கங்கள் கதை, கட்டுரை, கவிதை எதுவாக இருந்தாலும் தரமானதாயின் பிரசுரிக்கப்படும்.

# பெண்கள் மட்டுமல்ல ஆண்களும் தங்கள் விருப்பத்தை வெளிப்படுத்துவது இயல்பே

தலைமகன் தனது காதலைத் தோழனிடம் வெளிப்படுத்துகின்றான்.

**- த. சிவபாலு -**
B.Ed (Hons), M.A



தாம் ஒருதலையாகக் கொண்ட காதலை வெளிப்படுத்தமுடியாமல் அவதிப்படும் பல இளைஞர்கள் எம் மத்தியில் உள்ளனர். யாரிடமும் சொல்லவும் முடியாமல் தான் காதலிக்கும் நங்கையிடமும் சொல்ல முடியாமல் தடுமாறும் தன்மை கொண்ட ஆண்கள் பலர். பெண்களைப் போலவே ஆண்களும் இந்த அவத்தைக்கு உள்ளான வர்கள். எனது நண்பன் ஒருவனுக்கு ஒரு பெண்மீது ஒருதலையாக காதல் ஏற்பட்டு விட்டது. அவனது நடை, உடை, பார்வை என்பனவற்றில் மாற்றங்கள் ஏற்பட்டதனை என்னால் அவதானிக்க முடிந்தது. அவன் தான் காதலிக்கும் அணங்கு மிக அழகானவள், அவளின் நடை, உடை, பார்வை எல்லாவற்றையும் பற்றி விபரித்துக் கொண்டிருப்பான். சிலவேளை களில் அதனைக்கேட்க ஆசையாகவும் இருக்கும் சிலவேளைகளில் வெறுப்பாகவும் இருக்கும். இருந்தும் நண்பனாச்சே எனது அருகே தினமும் அமர்ந்திருக்கும் அந்த இனிய நண்பனின் சொற்களுக்கு செவி கொடுப்பதைத்தவிர என்னால் வேறு எதுவுமே செய்யமுடியவில்லை. இந்த நிலை இன்று நேற்றல்ல சங்க காலத்தமிழர் வாழ்விலும் இடம்பெற்றுள்ளமையைக் காணமுடிகிறது.

குறுந்தொகைப் பாடல் ஒன்று தலைவனின் மனவேதனையை எடுத்துக்காட்டுவதாக அமைகின்றது. வெள்ளிவீதியார் என்னும் சங்கப் புலவரால் யாக்கப்பட்ட இப்பாடல் தலைவனின் ஆற்றாமையைத் தோழனிடம் எடுத்துக்கூறி அவன் உதவிசெய்ய வில்லையே என்பதனைச் சுட்டிக்காட்டுவதாக அமைகின்றது.

“இடிக்கும் கேளிர் நும்குறையாக
நிறுத்தல் ஆற்றினோ நன்றுமன் தில்ல
ஞாயிறு காயும் வெவ்வறை மருங்கின்
கையில் ஊமன் கண்ணில் காக்கும்
வெண்ணை உணங்கல் போலப்
பரந்தன்று இந்நோய் நோன்றுகொளற்கு
அரிதே”.

என்னும் குறுந்தொகை 58வது பாடலால் புலவர் எடுத்துரைக்கின்றமையை நோக்கு மிடத்து, காதல் நோயை ஆற்றமுடியாது. இந்தநோயிலிருந்து விடுபடுவது அரிது, எனத் தன் தோழனுக்கு எனது தவறுகளை இடித்துரைத்து என்னை நெறிப்படுத்தும் எனது அருமை நண்பா! நான் சொல்வதை நன்கு செவிமடுத்து அதனை உனது சொந்தச் செயலாகக் கருதி அதனை நிறைவேற்றவேண்டும். அதுவே மிகவும்

தொடர்ச்சி 34ஆம் பக்கம்

**YOGA - MEDITATION CLASSESS**

ஆரோக்கிய வாழ்விற்கு வழிகாட்டும் மருத்துவமுறை யோகாசன பயிற்சிகள்




மூட்டுவலி - முதுகுவலி - ஆஸ்துமா - இரத்த அழுத்தம், நீரிழிவு நோய் - பெண்களின் மாதவிடாய் கோளாறுகள் - உடல் எடை - தொந்தி குறைய மற்றும் மன அழுத்தம் போன்றவற்றிகு நிவாரணம்.



நீரிழிவு, இருதய நோயாளிகளுக்கு தனிப்பட்ட நேரடி பயிற்சிகள்

**GTA Square Mall** இல் புதன்கிழமைகளில் காலை 8:00 மணிக்கு வகுப்பு நடைபெறுகின்றது

தொடர்புகளுக்கு: **Scarborough - Markham -** செல்வ சோதி - **416.289.2033**

# Education

## Review Tutorials 14 -2

➢ **POLYNOMIAL FUNCTION (Gr 12)**

**(i) A ploynomial with the equation of $f_{(x)} = ax^3 + bx^2 + cx + d$ has the following properties**

**(a) Remainder -7 when divided by $(x-1)$**

**(b) Same remainder when divided by $(x-2)a(x+2)$**

**(c) one of the factor $x$**

**Determine the equation of the polynomial.**

➢ **CHEMISTRY 11**

**A sample of crushed eggshell (2g), containing Calcium carbonate is mixed with 100 ml of 0.5mol/L HCl and then the excess HCl in the mixture was titrated with 22ml, 0.5mol/L NaOH. Determine the mass percent of Calcium carbonate in egg shell.**

➢ **BIOLOGY 12**

**(i) Describe the functional and evolutionary importance of "introns ".**

**(ii) List the roles of eukaryotic DNA polymerases.**

**Glucose can be obtained from the conversion of glycogen for ATP production. Do the liver glycogen and muscle glycogen supply the same amount of ATP to the muscles**

**CHEMISTRY IB/12**

**1. (i) Name the following compounds**




**(ii) Identify conditions (A,B,C....) required for the reactions**




## Answer Key : 14-1

**CHEMISTRY IB/12**

1. (1) (a) Rate = k $[NO]^1 [Cl_2]^1$

(b) $3.8 \times 10^{-2}$ $mol^{-1} L s^{-1}$

(ii) $\Delta H = -77.1kJ$

(ii) $\Delta S^{\Theta} = -121.3J$

(iii)increasing temperature do not affect the spontaneity of the reaction.

**PHYSICS 11**

The two frequencies are too far apart to produce beats. However, The piano string will oscillate not only in its fundamental mode at (110Hz) when tuned, but also in its second harmony mode (220Hz)) when its tuned. Therefore with the string somewhat out of tune, the frequency of its second harmonic will beat the 220Hz of the tuning fork.

**PHYSICS 12**

Question : A thin film coated on one side of .......

Ans: $L = \lambda/4$ $n_2 = 99.6$ nm

**ADV. FUNCTIONS**

$\log_a x - (\log_a y^3) = \log_a x - 3(\log_a y) = 11$

**BIOLOGY(Gr12)**

**Cyclic Photophosphorylation-** requires only PS-I, electron emitted by P700 is recycled back and no external source of electron is needed. It synthesizes only ATP, Oxygen is not evolved. It operates at low light intensity, less availability of $CO_2$ and under anaerobic conditions.

**Non-cyclic Photophosphorylation** -It requires PS-I and PS-II. It needs external electron donor. It forms ATP as well as $NADPH_2$. Oxygen is liberated due to photolysis of water.

*Answer key 14- 2 - next issue*

**Contact: 647 341 3975**
**ask@ keentutoringcentre.com**

KEEN TUTORING CENTRE

# பெண்கள்...

33ஆம் பக்கத்தொடர்ச்சி

சிறந்ததான செயலாகும். கொடுமையான கோடை வெய்யில் காயும் பாலைநிலத்து பாறையில் வெண்ணெய்த்திரள் வைக்கப்பட்டு அது வெப்பத்தினால் உருகுகின்றது. அதனைப் பார்த்திருக்கும் கைகளில்லாத வாய்பேசமுடியாத ஊமையன் ஒருவன் எதுவும் செய்ய இயலாது இருப்பதுபோன்றது எனது உள்ளத்தில் நிறைந்துள்ள இந்த நோய். அது எல்லோருக்கும் வரக்கூடியது மன்று, தீர்த்துக்கொள்ளத்தக்கது மன்று. கைகளில்லாத ஊமையால் துணைக்கு யாரையும் அழைக்கவும் முடியாது, அதனை எடுத்து உரைக்கவும் முடியாது. அவனாலும் செய்யவும் இயலாது. அவ்விதமே ஒருத்தலை யாகக் கொண்டு காதலை வெளிப்படுத்த இயலாது தவிப்பவனது நிலையும் என்பதனை மிக அழகாக நல்ல உவமான உவமேயங்களால் எடுத்துரைக்கும் புலவரது இயற்கையின் எழிலையும் கோடையின் கொடுமையையும் எடுத்து ஒப்பு நோக்குகின்றார். கற்பாறையில் இடப்பட்ட வெண்ணை பகற்பொழுதில் அதுவும் கோடை வெய்யிலில் என்னவாகும் என்பதனை சாதாரணமாக விளங்கிக்கொள்ளமுடியும்.



அந்தத் தோழனோ தலைவனின் துன்பத்துக்கான காரணத்தை அறிவான். அவன் துன்பத்தால் உடல் நலிந்து துரும்பாகிப் போகின்றான். கை, கால், கண்கள் எல்லாம் உள்ளவனாக இருந்தும் இவன் எனக்கு உதவ வில்லையே என்னும் ஆதங்கத்தையும் மனதின் ஏமாற்றத்தையும் சாடைமாடையாக எடுத்துரைக் கின்றான். நீ, எனது உண்மையான நண்பனானால் எனக்கு உதவியிருப்பாய், எனது காதலை அவளிடம் போய்ச் சொல்லியிருப்பாய், எங்கள் இருவரையும் சேர்த்து வைத்திருப்பாய். ஆனால் நீயோ எந்த உதவியும் செய்யாது என்னைச் சாகடிக்கின்றாய். உண்மையான நண்பனுக்கு இது முறையோ அல்லது தகுமோ என்ற தனது ஏக்கத்தை எடுத்தியம்பு வதன் மூலம், தான் தற்கொலைசெய்து கொள்ளவதைவிட வேறு வழி யில்லை, என்னால் இன்னும் உயிர்வாழ முடியாது என்னும் முடிவுக்கு அவன் வருவதனை எடுத்துக் காட்டுகின்றார் புலவர். "இந்நோய் நோன்று கொளற்கு அரிதே" என்று இறுதி யடியால் என்னால் இந்த காதல் நோயிலிருந்து விடுபடமுடியவில்லை என்றால் நான் இறப்பதே மேல் என்று சூழுரைக் கின்றான் தலைவன். தோழனின் நிலைமை சற்று விபரீதமானது, என்ன செய்வது என்று சிந்திக்கின்றான்.

பாலை நிலத்துத் தலைவனின் கூற்று இவ்வாறு அமைகின்றது. அவன் உயிர் துறப்பேன் என்று உறுதிபடச் சொல்கின்றான். ஆனால் குறிச்சித்தலைவனோ நான் தலைவியைக் கூடவில்லை என்றால் மடலேறியாவது அவளை அடைவேன் என்று தோழியிடம் உரைக்கின்றான். அது எவ்வாறு எனப்பார்ப்போம். தொடரும்....



**PARTY HALL**
**EVENT CENTRE**
**MEETING PLACE**

**AVAILABLE**
**FOR RENT**
**Starting from $100.00**

**Anniversary, Birthday, Get-together, Office Meeting, School Meeting,** புத்தக வெளியீடு, கலந்துரையாடல்... போன்றவை நடத்தக்கூடிய இடம் வாடகைக்கு உண்டு. ஏறக்குறைய **50** பேருக்கு போதுமானது. நிறைந்த வாகனத்தரிப்பு வசதிகள் உண்டு. *GTA Square Mall (FINCH & MIDDLEFIELD)* தொடர்புகளுக்கு: 416.917.6883

# பூரித்த தமிழகத்தில் பொலிவுற்ற தனி நாயகம் (C)




என் இனிய நண்பர்களே! வாழ்த்துக்கள். நலம் பெறப்பிரார்த்திக்கிறேன். இரண்டாவது தமிழாராய்ச்சி மாநாட்டின் போது பூரித்த தமிழகத்தில் பொலிவுற்ற தனிநாயக அடிகளார் அவதானித்த பண்புகளையும் அடையாளப்படுத்திய தமிழியல்புகளையும் எண்ணி எண்ணி இதயத்தில் பதித்துக் கொள்ள வேண்டியது தமிழர் தம் கடமையாகும். ஈழத்தமிழர்களுக்கு மட்டு மல்லாது இந்தியத் தமிழர், மலேசிய சிங்கப்பூர் தமிழர், புலம் பெயர்ந்து வாழும் உலகத்தமிழர் (Diaspora) அனைவருக்கு மான கருத்துக்களையே அவர் வெளிப்படுத்தினார். தமிழ் தமிழியல் சார்ந்த உண்மைகளை உலகப் பரப்பெங்கும் விதைத்து தமிழன் என்றோர் இனம் உண்டு, தனியே அதற்கோர் குணம் உண்டு என்ற சிந்தனையே அறிவு ஜீவிகளுக்குள் கொழுத்தி எரியவைத்துப் பிரகாசப்படுத்திய காரணத்தினாலேயே இன்று தமிழ் ஆய்வுகளும் விமர்சனங்களும் வியாக்கியா னங்களும் கூர்மைப்பட்டு வருகின்றது.

ஒரு மொழியாகத் தமிழைப் படிக்கத் தொடங்கியவர்கள் அது வாழ்க்கையின் வழிகாட்டியாயும் தெரிந்ததால், மொழியின் இலக்கிய இலக்கணங்களோடு அதன் பக்தி உணர்வும் அவர்கள் உள்ளத்தைத் தொட்டு உருக்கியதால் திருவாசகம் தேவாரம் முதலிய பக்திப் பனுவல்களையும் படித்தார்கள். திருக்குறள், திருவாசகம் என்பனவற்றை மொழி பெயர்த்து தாம் பெற்ற இன்ப அன்பு அருள் அனுபவங்களை இவ் வையகத்து மனிதர்கள் அனைவரும் பெறவேண்டும்மென்று விரும்பினார்கள். ஜி.யூ. போப்பினுடைய மொழி பெயர்ப்புகள் பற்றி நீ அறிந்திருப்பாய். பக்தியோடு பண்பாட்டையும் பரப்பிய மொழியாக தமிழ் தனிநாயக அடிகளாருக்குத் தெரிந்தது.

நண்பா!
தனிநாயக அடிகளார் ஒரு பன்மொழிப் புலவராக விளங்கியவர். தமிழ், ஆங்கிலம், பிரஞ்சு, இலத்தீன், ஜேர்மன் மொழிகள் கற்று அவற்றின் உச்சங்களோடு தமிழின் உச்சங்களையும் ஒப்பிட்டு காய்தல் உவத்தல் இன்றி ஆய்வு செய்து தமிழன் மேன்மைகளை அறிவித்தவர். தமிழை உலகத்தரத்திற்கு உயர்த்த வேண்டும் என்ற அவாவினாலேயே அவர் உலகத்தமிழ் ஆராய்ச்சி நிறுவனத்தை உருவாக்கினார். உலகத்து மொழி அறிஞர்களை ஒன்று சேர்த்தார். உலகத் தமிழ் ஆராய்ச்சி மாநாடுகள் நடக்க வழி செய்தார். தமிழ்பண்பாடு, தமிழ் நாகரிகம் என்பன அவருடைய இரு கண்களாயின. 'யாதும் ஊரே யாவரும் கேளிர்' என்ற புறநானூற்றுப் புலவர் கணியன் பூங்குன்றனாரின் கருத்துமணி அடிகளாரின் கண்ணின் மணியானது. அவருடைய பண்பாடு என்ற கண்ணுக்கும், நாகரிகம் என்ற கண்ணுக்கும் பூங்குன்றனாரின் கருத்துமணி காகத்தின் கண்கள் போல் அங்கும் இங்குமாக உருண்டு உருண்டு உணர்வு பூர்வமாகவும் அறிவு பூர்வமாகவும் உரைகளைப் பேச வைத்தன. கட்டுரைகளை எழுத வைத்தன.

தனிநாயக அடிகளாரின் இந்தப் பண்புகலந்த நாகரிக நிலை உலகத்தமிழ் ஆராய்ச்சி நிறுவனம் அமைத்த பின்போ, ஆராய்ச்சி மாநாடுகள் நடத்திய போதோ உருவாக வில்லை. இவற்றிற்கெல்லாம் முந்தைய ஆண்டில் 1950களில் தோன்றி விட்டது. 1952 ஆம் ஆண்டு யாழ்ப்பாணம் பரமேஸ்வராக் கல்லூரியில் நடந்த தமிழ் மாநாட்டிலே தமிழின்பம் தந்த தக்கார் பேரார்சியர் ரா.பி சேதுப்பிள்ளை தனிநாயகத்திற்கு ஒரு சபா-நாயகம் வேண்டியதில்லை என்று தனது தலைமை உரை இடம்பெற வேண்டிய நேரத்தை நழுவவிட்டுப் பிந்தி வந்து மேடையில் ஏறியவுடன் சொன்னார். இந்தப் புகழாரம் ரா.பி சேதுப்பிள்ளையின் நாவில் சட்டென்று வருவதற்கு அடிகளாரின் பண்பு கலந்த நாகரிக நிலை சேதுத்தமிழ் பிள்ளையின் இதயத்திலே ஏற்கனவே பதிந்திருந்த முடிவாகும்.

நண்பா!
கவிஞர் கண்ணதாசன் பேராசிரியர் சேதுப்பிள்ளையை சேதுத்தமிழ்ப்பிள்ளை என்று குறிப்பிட்டதன் பொருத்தப்பாடு புரிகிறதா? நிற்க. மேற்குறித்த தமிழ் சூழ்நிலையை விதந்து அன்றைய கல்கி ஆசிரியர் கிருஷ்ணமூர்த்தி கல்கிவார இதழில் எழுதிய 'இலங்கையில் இரண்டு வாரங்கள்' என்ற கட்டுரைத் தொடரில் படித்தது உனக்கு ஞாபகம் வருகிறதா? அன்றைய பரமேஸ்வராக் கல்லூரியின் கட்டிடவண்ணத்தையும், திருநெல்வேலியின் தண்ணீர் குளிர்மையையும் சுவையையும் வெளிச்சம் போட்டுக்காட்டிய தமிழ் மாநாடு ஞாபகம் வருதே! ஞாபகம் வருதே! நெஞ்சில் புதைந்த பொக்கிசம் எல்லாம் ஞாபகம் வருதே! இது முதுமை உளறலா? நிற்க! இரண்டாவது உலகத்தமிழ் ஆராய்ச்சி மாநாட்டில் ஆராய்ச்சி கட்டுரைக-ளைப் படிப்பதற்காய் பலநாட்டு அறிஞர்கள் சென்னைப் பல்கலைக்கழகத்தில் கூடியிருந்தார்கள். முதல் அமைச்சர் அறிஞர் அண்ணா தலைமையுரையின் ஒரு பகுதியை நிகழ்த்தி விட்டு பன்நாட்டு அறிஞர்களையும் வரவேற்று காமராஜர் அவர்கள் உரை நிகழ்த்துவர் என்று கூறிவிட்டு இருக்கையில் இருந்தார். இரண்டு நிமிடங்கள் கழிந்தும் காமராஜர் மேடைக்குப் போகவில்லை. அறிஞர் அண்ணா உடனே எழுந்து அகில இந்திய காங்கிரஸ் தலைவர் கே. காமராஜ் அவர்களை வரவேற்புரை நிகழ்த்த அன்புடன் அழைக்கிறேன் என்றார். அண்ணா பேசி முடிக்க முன்பே காமராஜர் எழுந்து (இவர் உயரமான நின்ற சீர் நெடுமாறனைப் போன்ற தோற்ற முடையவர்). மேடைக்குப் போனார். சபையோரின் கையொலி எழுந்து அடங்கவே ஒரு நிமிடம் சென்றது. புன்முறுவலோடு மேடையில் நின்ற காம-ராஜர் தனக்கே உரியபாணியில் பேசினார். (இவருக்குச் செந்தமிழ் நடைவராது. செம்மொழி நடையும் இல்லை. கொடுந்தமிழும் கிடையாது. ஒரு கிராமத்து விவசாயி போன்று பழகு தமிழ் பேசிச் சபையோரைக் கவர்ந்து விடுவார். அண்ணாவின் அழகு நடையும் நாவலரின் அலங்கார நடையும் ஏனைய தி.மு. க வினருடைய அடுக்கு நடைகளும் அரசோச்சிய காலத்தில் காமராஜருடைய பழகு தமிழ் சொற்செட்டு வார்த்தை மக்களை வசீகரித்தமை ஓர் அதிசயமே) வரவேற்புரையை அளவான நேரத்துக்குள் முடித்துக்கொண்டு காமராஜர் இருக்கைக்குச் சென்றார்.

இதனைக் கவனித்த தனிநாயக அடிகளார் பக்கத்தில் இருந்தவர்களிடம் Tamil culture is this என்றார். இதனைக் கேட்ட ஆங்கிலேயர் தன் கழுத்தில் கட்டியிருந்த Tie ஐக் கழற்றி ஆசுவாசம் உற்றார். இது தனிநாயக அடிகளாரின் பண்பாட்டு அவதானிப்பில் ஒன்று.

நண்பா!
பண்பாட்டைப் படிப்பது வேறு. பண்பாடு பற்றி பேசுவது வேறு. பண்பாடாய் நடப்பது வேறு. பண்பாட்டை அவதானித்து உள்வாங்குவ தும், பாராட்டுவதும் வேறு. அடிகளாரிடம் இத்தனை பண்பாட்டுக் கூறுகளும் பதித்திருந்தமை மனங்கொள்ளத்தக்கது. ஒரு மாதத்திற்கு முன்பு நடந்த தேர்தலில் எதிர் கட்சியினராய் நின்று பிரசாரம் செய்தவர், இன்று தோல்வி கண்ட பிறகும் தமிழர் கூடும் தமிழியல் மாநாட்டிற்கு மரியாதை செய்தவற்காக வந்து இருந்ததும், தேர்தலில் தோற்றாலும் அவர் கணிப்புக்குரிய தமிழர் தலைவர் என்பதை மதித்து அவரை மேடைக்கு அழைத்த அறிஞர் அண்ணாவின் நயத்தக்க நாகரிகத்தையும் பாராட்டுக்குரிய பண்பாட்டையும் தனிநாயக அடிகளார் சென்ற இடமெல்லாம் குறிப்பிட்டுப் புகழ்ந்திருக்கிறார்.

சோவியத்யூனியன் உடைந்து சிதைந்து போகாத காலத்தில் நடந்த இரண்டாவது உலகத் தமிழ் ஆராய்ச்சி மாநாட்டிற்கு வருகை தந்த கமில் சுவலபத் என்பார் கார்ள் மாக்ஸ் எழுதிய 'பொதுஉடைமைத் தத்துவம்' உலகத்தின் முதல் தத்துவமாகப் பேசப்படுகிறது. கார்ள் மாக்சுக்கு முன்பே தமிழரான திருவள்ளுவர் இயற்றிய திருக்குறள் பொதுஉடைமையோடு வாழ்வியல் அனுபவங்களையும் இணைத்து கூறிய முதல் நூல் என்று சொல்லலாம். இந்தத் திருக்குறளும் இதன் கருத்துக்களை நடைமுறைப்படுத்தக் கூடிய முதல் அமைச்சரான அண்ணாத்துரையும் தமிழருக்கு கிடைத்திருப்பது ஒரு கொடை என்பேன். இந்தக் கருத்தை எனது நாட்டில் நான் சொல்ல முடியாது. சொல்லவும் கூடாது. அந்தச் சுதந்திரம் எனக்கு இல்லை என்று உரையாற்றினார்.

இதனைக் கவனித்துக் கொண்டிருந்த தனிநாயகம் அடிகளார், This is also culture என்றார். பண்பாட்டினை அவதானித்துப் பாராட்டிய அடிகளார் மாநாட்டின் ஊர்வலத்தைக் குழப்புபவர்களுக்கு அடி போட அனுமதி கேட்ட பொலீஸ் அதிபர் தேவாரத்திற்கு முதல்வர் அண்ணா சொன்ன 'கடி தோச்சி மெல்ல எறிக' என்ற திருக்குறள் வரியை (இறுக்கி ஓங்கி மெல்ல அடி) கேள்விப்பட்டதும் மகிழ்ந்த மகிழ்வையும் அதனைப் பலருக்கும் சொல்லி மகிழ்ந்த பண்பாட்டையும் இன்று நினைத்தாலும், அந்தக் காலமும் காட்சியும் தமிழருக்கு எப்போது கிடைக்கும் என்ற ஏக்கமே உண்டாகிறது.

நண்பா!
இரண்டாவது உலகத் தமிழ் ஆராய்ச்சி மாநாட்டிற்கு வருகை தந்த பிறநாட்டு அறிஞர்களுக்கும் ஆய்வாளர்களுக்கும் பேராசிரியர் தெ.பொ.மீனாட்சி சுந்தரனார் தலைமையில் அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் ஒரு விருந்து உபசாரமும் பாராட்டு நிகழ்வும் நடைபெற்றது. அந்த நிகழ்வில் கலந்து கொண்டவர்களில் சோவியத் யூனியனைச் சேர்ந்த அறிஞர்களும் அடங்குவர். அவர்களில் ஒரு ருஷ்ய நாட்டவர் எழுந்து மக்கள் திலகம் எம்.ஜி.ஆர் தமக்குப் போட்டுக் காட்டியதிரைப்படமான 'தில்லான மோகனம்பாள்' பற்றி வியந்து வியந்து பேசினார். அந்தப் படத்தில் அவர் கண்ட பரதநாட்டியத்தின் திறனையும், அழகியலை யும், அபிநயங்களையும் குறிப்பிட்டுப் பாராட்டினார். 'Bharatanatyam shows your identity' என்று பலருடைய கரவொலி களுக்கு மத்தியில் புகழ்ந்து மகிழ்ந்தார். பரதநாட்டியத்தில் தமிழர் அடையாளத்தைக் காட்டுவதற்காக மக்கள் திலகம், நடிகர் திலகம் சிவாஜிகணேசன் நடித்த 'தில்லானா மோகனம்பாள்' என்ற திரைப்படத்தை பிறநாட்டு அறிஞர்களுக்குப் போட்டுக் காட்டிய பண்பாட்டு அடையாளத்தை தனிநாயக அடிகள் மிகவும் உயர்த்தி மதிப்பீடு செய்தார்.

அந்தக்காலத்தில் அதாவது 1986ஆம் ஆண்டில் எம்.ஜி ஆருக்கும், சிவாஜிக்கும் கடும் போட்டி நடந்து கொண்டிருந்தது. இருவருடைய இரசிகர் மன்றங்கள் இரண்டும் இரண்டு அரசியல் கட்சிகள் போல் ஊர்வலங்களாலும், பிரசாரங்களா லும், திரையரங்குகளில் கைதட்டியும், விசில் அடித்தும் ஆரவாரம் செய்தும் தமது விசிறிகள் வீச்சினை வாள் வீச்சாய் விசுக்கிய காலகட்டத்தில் தில்லானா மோகனம்பாள் என்ற சிவாஜி நடித்து தமிழர் கலை பண்பாட்டுத் திறனை வெளிப்படுத்திய திரைப்படத்தை தமது போட்டி மனப்பான்மையை புறந்தள்ளி வெளி நாட்டவர் பார்வைக்கு அப்படத்தினைக் காண்பித்தமையை தமிழர் பண்பாட்டின் ஒரு அலகாய் தனிநாயக அடிகளார் போகுமிட மெல்லாம் தனி உரையாடல்களிலும் மேடைப் பேச்சிலும் குறிப்பிட்டு பேசியமை திருவள்ளுவர் கூறிய

'பண்புடையார்ப் பட்டுண்டு உலகம் அது இன்றேல்
மண்புக்கு மாய்வது மன்'

என்ற குறளை நினைவுக்கு கொண்டு வருகிறதல்லவா? உலகத் தமிழ் ஆராய்ச்சி மாநாடுகள் உண்டாக்கிய பகுப்பாய்வுகளை யும் பன்நாட்டு உறவுகளையும் பேணி வளர்ப்பவர்களுக்கு உறுதுணையாய் நிற்க வேண்டியது அனைத்துலகத் தமிழர்களின் தலையாய கடமையாகும்.

வேறு என்ன,
பிற பின்பு



- புலவர். ஈழத்துச்சிவானந்தன் -
(நிறுவனர் ஆதி அருள்நெறி மன்றம் - கனடா)


அனைத்துலக தமிழ் வானொலி
GLOBAL TAMIL RADIO

www.gtr24.com
* செய்திகள்
* போட்டிகள்
* பாடல்கள்
* தகவல்கள்
24 மணி நேர தமிழ் ஒலிபரப்பு
416-264-4283 / 416-264-3666
"மண்ணையும் மனங்களையும் நேசிக்கலாம்"




யோகா சோதிடம்
• கிரகப்பொருத்தம் பார்த்தல் • சுபமுகூர்த்தம் கணித்தல்
• பலன் பார்த்தல் • சாதகக் குறிப்புக் கணித்தல்
தொடர்புகளுக்கு: 416.299.8361


# கோல் முறித்து நீதியினை வழங்க வாராய் புத்தாண்டே



கண்ணீர்தான் வாழ்வாகக் கதறியழும் தமிழர்களை
காக்குமொரு இறையரசாய், கருணையுடன் அரவணைத்து
எண்ணத்தில் உவகையுற எதிர்காலம் தெளிவு பெற
ஏற்ற நெறி பல சுமந்து எழுந்தருள்வாய் புத்தாண்டே

மானிடர்கள் விழுமியங்கள் அத்தனையும் விழுங்கி விட்டு
மக்கள் வாழ் விடங்கவர்ந்து மனைகளையே தகர்த்து விட்டு
கோஎனவே கொலுவிருக்கும் சிங்களத்து அதிபதியின்
கோல் முறித்து நீதியினை வழங்கவாராய் புத்தாண்டே

நடுநிசியில் மனை புகுந்து மங்கையரைக் கற்பழிக்கும்
நாசகாரப் பணியினிலே அக்கனிக்கும் கயவர்களின்
கொடும் செயலிற் பலியாகும் கன்னியரை மீட்டெடுக்கும்
கொற்றவனாய் மனமிரங்கி அருள் சுரப்பாய் புத்தாண்டே

சானல் தோறும் வளைந்து வந்து வனிதையரை கடத்துகின்ற
காதகரை மடக்கியவர் பாதகத்தைத் தடுப்பதற்கு
மேலுறையும் பரம் பொருளின் சக்தியுடன் வலிமை மிக்க
வாலிபர்க்கு உரம் கொடுத்துக் காப்பளிப்பாய் புத்தாண்டே

அனுதினமும் பெருக்கெடுக்கும் அக்கிரமச் செயல்களினால்
மனங்குமுறி யுருக்குலையும் மக்கள் துயர் நோக்காது
தனிவழியிற் செல்லுகின்ற தலைவர்களின் ஆணவமும்
இனமழிய வழிவகுக்கும் மௌனப்புகல்வாய் புத்தாண்டே

தலைக்கு மேல் வெள்ள மின்று உயர்ந்து விட்ட போதினிலும்
தாங்கியெமைக் காத்த நிலம் கைநெகிழ்ந்து போகையிலும்
சிலையாகிக் தடுமாறும் தலைவர்களை
சிங்களத்தைப் பற்றி நிற்கும் நிலை தகர்ப்பாய் புத்தாண்டே

\- மாரீசன்.


SPACE AVAILABLE FREE*
**KENNEDY & EGLINTON** பகுதியில் சிறப்பாக இயங்கி வரும் புதிதாக அமைக்கப்பெற்ற Coin Laundry யினுள் Tailoring (free*) செய்வதற்கான இடம் உண்டு. அனுபவமிக்கவர்கள் தொடர்பு கொள்ளலாம். தொடர்புகளுக்கு:416.856.0408





## தமிழ் தைப்பொங்கல், புதுவருட வாழ்த்துக்கள்

### – பேராசிரியர் கோபன் மகாதேவா –

எங்கள் ஈழத்தமிழர் இலங்கைஎனும் மாங்காய்த் தீவில்
பொங்கல், புதுவருடம் போன்றவற்றைக் கொண்டாடத்
தங்குதடைகள் இல்லை, தாழ்ப்பாள்கள் என்றும் இல்லை.
பொங்கிநாம் மற்றஇனச் சோதரர்க்கும் பாற்சோறு அளிப்போம்.

தனிஆட்சிக்கு எமதுரிமை என்பதனைப் பின் நகர்த்தி
மனிதேய உரிமைகளை இனியும் இழுத்து அடிக்காமல்
பெறுவதற்கு முதலமைச்சர், மந்திரிமார், மக்களுடன்
பொறுமை, பேரிராச-தந்திரப் போரைத் தொடர்ந்திடுவோம்.

ஆண்டவர் எம்நலனுக்கே ஆயுதப்போரை அடக்கி வைத்தார்.
மாண்டவர் தியாகத்தை மறக்காமல் அவர்விட்ட இடமிருந்து
வேண்டிய நல்லோரை வையகத்தில் எங்கிருந்தும் நட்பித்து
மீண்டும் எமைக்கட்டி ஒற்றுமைஅமைதியுடன் முன்செல்வோம்.

வெறுப்பு வெறுப்பைவளர்க்கும் விரோதம் விரோதம்வளர்க்கும்
வெறி வெறியையே வளர்க்கும் என்பது உண்மை.
மறுபுறத்தான் மனச்சாட்சி தனைமாற்றும் வழிச் சென்று
வெல்லுதலும் போர்வழிதான் என்பது உண்மை.
சமரசத்தின் வழிச்சென்று சமவுரிமை பெறப் பாரின்
இனங்கள் இன்று உதவிடுவார் என்றல் திண்மை
எமதுநலன் பேணிஎங்கள் உரிமைகளைப் பெற இறைவர்
எம் இன்றைத் தலைவர்க்கு உதவல் திண்மை.


விளம்பரம் பத்திரிகையை இணையத் தளத்தில் வாசிப்பதற்கு www.vlambaram.com / www.tamilvanakkam.com



COMMERCIAL UNIT FOR Lease /SALE
Main floor / Second floor commercial space for Lease / sale. Available for any retail business or professional office. Very demand location. High traffic area. Easy access. one of the best location in Scarborough.
Pl. Call: 416.315.9397



AMBIHA SILK (Fancy Jewellery)
FINCH & MIDDLEFIELD

இந்தியாவில் இருந்து நேரடியாக இறக்குமதி செய்யப்பட்ட உயர்தர Gold கவரிங் தலிக்கொடி, Gold Bangle, செயின், பதக்கம், மணப்பெண் அலங்கார நகைகள், Fancy Necklaces வித்தியசமான Designகளில் மற்றும் Saree, Shalwar, Top இவை எல்லாவற்றையும் ஒரே இடத்தில் பெற்றுக்கொள்ள

அழையுங்கள்: 416.297.5261

# எனக்குக் கிடைத்த செருப்பு அடி

அன்று மறுவாழ்வு உடல் அப்பியாசங்களுக்கான முதல் நாள். காலை 11:00 மணி முதல் 12:30 வரை நடந்தது. எனக்கு மீண்டும் வீடு வருவதற்கான சக்கரப் போக்குவரத்து ஊர்தி 1:30 மணிக்குத் தான் வருமென்றார்கள். ஆகவே வெளிவாரி நோயாளிகள் உட்செல்லும் பக்கத்து விறாந்தையில் தங்கியிருப்பதற்காகச் சென்றேன். வேறு சிலர் ஆசனங்களில் உட்கார்ந்திருக்க இரு வயதான பெண்மணிகள் மாத்திரம் நெடுக்கும் குறுக்குமாக கைத் தடியுடன் நடந்தபடி இருந்தனர். ஒரு அவசரம் தெரிந்தது. வழமைக்கு மாறாக குளிர் காலம் அவசரப்பட்டு முந்திக் கொண்டமையால் முகம் தவிர உடலின் பகுதிகள் யாவும் குளிரில் இருந்து பாதுகாக்கப் பட்டமையால் கோலங்கள் மாறிவிட இனங்காண முடியாத நிலையில் இருந்தார்கள். அவர்களில் ஒருவர் என்னை மீண்டும் மீண்டும் பார்த்தார். அவர் முகத்தின் சாயலில் இருந்து, ஒரு கறுப்பின மாதோ என்ற சந்தேகம் எழுந்தது. மீண்டும் என் தலைமயிர் பிரச்சினையா என ஆச்சரியப் பட்டேன். மற்றவர் முகம் நல்ல சிவப்பாக புத்தம் புது மலர் போல இருந்தது. இளமைக் காலத்தில் எத்தனையோ இளம் வட்டங்களின் கனவைக் கலைத்த கன்னியாக இருந்திருக்கலாம் என எண்ண வைத்தது. விறாந்தைக்கு முன்னர் ஒரு சிறிய முன்றில் உள்ளது. அங்கே சில மலிவான பூச் செடிகள் இருந்துள்ளன என்பதற்கான அடையாளம் தெரிந்தது. ஆனால் இலையுதிர் காலத்தின் கொடுமையால் அவற்றில் சில, இலைகள் யாவற்றையும் உதிர்த்து விட்டுத் தலைவிரி கோலமாகக் காட்சி தந்தன. இன்னும் சில, குளிர்க் கடுமையால் பச்சிலையத்தை இழந்து உலர்ந்த இலைகள் ஒன்றுக்கும் பிரயோசமற்றவையாக செடிகளின் கிளைகளிலே தவம் செய்து கொண்டிருப்பதைக் காண முடிந்தது.

ஒவ்வொரு சக்கரவூர்தியும் வந்து நிற்க இவர்கள் இருவரும் நமக்குத் தான் என்று ஓடிப்போய், இல்லை என்றதும் தொங்கப் போட்ட முகத்துடன் உள்ளே வருவதைப் பார்க்க வருத்தமாகத் தான் இருந்தது. செம்முக ஆரணங்கு வெளியே போனவர் இம்முறை சிறிது நேரத்தின் பின்னரே உள்ளே வந்தார். அவர் கையில் இருந்த திறந்த வாயுள்ள பை, முன்னே உள்ள செடிகளின் சிறுகிளைகளால் நிறைந்திருந்தது. அவை வெளியே தலை நீட்டியபடி காணப்பட்டன. ஏதடா இந்தச் சுள்ளிகள், ஊரிலேயாயினும் அப்பம் சுடுவதற்குப் பயன் படுத்தியிருப்பார்கள் என எண்ணினேன். திடீரென அந்தக் கருமுக மாது என்னைப் பார்த்துப் பரவசத்துடன் உங்களை எங்கேயோ பார்த்துள்ளேன். யோசிக்கிறேன் வரவில்லை. யோசனையில் வருவதற்கு நான் என்ன அசாதாரணமானவனா அல்லது அசாத்தியனா என மறுப்பான் விட்டேன். நானும் அவரைப் பார்த்துச் சிரித்தேன். அவர் முகம் கொடுக்கவில்லையே என்றார். செம்முக அழகி. நீங்கள் தமிழரென்று இப்போ தானே அறிகிறேன். முகம் ஒன்றைத் தானே கண்டேன். அதை வைத்து நான் எப்படி உங்களை அடையாளம் காண்பதாம் என்றவள், எங்கேயாயினும் கூட்டங்களில் என்னைக் கண்டிருப்பீர்கள், என என் பிரதாபத்தை அளக்க முற்பட்டேன். நாங்கள் கூட்டங்களுக்குப் போவதில்லை என ஏகோபித்த குரலில் கூறியவர்கள் நீங்கள் ஏதாயினும் முதியோர் அமைப்பில் உள்ளீர்களா என்றார்கள். அதற்கெல்லாம் எனக்கு நேரம் கிடைக்கவில்லை என்றவன் நீங்கள் எதற்காக இந்தச் சுள்ளிகளைச் சேகரிக்கிறீர்கள். ஊர்ப் பாணியில் அப்பம் சுடுகிறீர்களா என்றேன். வாய்விட்டுச் சிரித்தார். பற்கள் யாவும் பவுத்திரமாக இருந்தன. நான் இவற்றைக் கொண்டு போவது இவற்றுக்கு நிறம் தீட்டி அழகு படுத்த என்றார். அவரது கலை ஆர்வம் என்னை அவருடன் தொடர்ந்து பேசும் ஆவலை ஏற்படுத்தியது. கோடையில் என் வீட்டு மலர்த் தோட்டம் வந்து பார்த்தீர்கள் என்றால் அதனையே வரைந்திருப்பீர்களே என்றேன். எனக்கு வரைதலில் ஆர்வம் இல்லை. நிறம் தீட்டல் சுலபமானது முயலலாம் என எண்ணினேன். ஓ! இப்போ தெரிகிறது உங்களை என்றார் கருவதனத்தவர். அவர் முகத்தில் கண்டு பிடித்து விட்டடேனே என்ற கர்வம் தெரிந்தது. நீங்கள் TVIயில் பூக் கன்றுகள் பற்றிச்




சொல்கிறவர் தானே என்றார். ஆமாம் சொன்னவன் என்றேன். இவற்றினுக்கு நிறம் தீட்டியபின்னர் என்ன செய்வீர்கள் என்றவன் ஏன் நீங்கள் சார்ந்த முதியோர் மன்றத்தில் ஒரு கலைக்காட்சி வைக்கலாம் தானே என்றேன். அந்த அளவுக்குத் திறமை எனக்கில்லை. நானும் முதியோர் மன்றங்களில் அத்தனை அக்கறை காட்டுவதில்லை. எனது பொழுது போக்கிற்காக இதனைச் செய்து எனது விடுதியில் வைப்பேன். நண்பர்களுக்கும் கொடுப்பேன். முதியோர் மன்றத்திற்குப் போவதிலும் பார்க்க மற்றவர்களுக்கு உதவுவதில் மனம் நிறைவு பெறுகிறேன் என்றார். இதனைப் பாருங்கள் என்றவர் தனது கைப் பையுள் இருந்து ஒரு துண்டுப் பிரசுரத்தை எடுத்து நீட்டினார். அது என்ன என்பது எனக்குத் தெரிந்திருந்தது. இப்படியாகச் சிலர் எனது இல்லம் வந்தவர்களை, எனக்கு இதில் நம்பிக்கை இல்லை என விரட்டியுள்ளேன். ஆனால் இந்த அம்மையாரை அப்படிச் செய்ய முடியவில்லை. பெற்றுக் கொண்டேன். நான் வாசிப்பதற்காகக் கொண்டு சென்ற திருமாவளவனின் அண்மையான கவிதைத் தொகுதி புத்தகத்துள் அதனை வைத்தேன். துண்டுப் பிரசுரத்தின் முற்புறத்தில் 'நாங்கள் கூறும் நற்செய்தி' என இருந்தது. அம்மையார் 'ஜீவ வசன அருட்பணிச் சபை'யினைச் சார்ந்தவர் என்பதை அறிய முடிந்தது. 'நாளைக்கு என்று சொல்லி நாட்களைத் தள்ளி விடாதே, இன்னும் ஒரு நாள் இருப்பதை நாம் அறியோம்' என்ற வசனம் என்னை மிகவும் கவர்ந்தது. அதனை அவரது செயல் ஒன்றின் மூலமும் அறியமுடிந்தது. நேரம் 12:45 ஆகி விட்டது. அவருக்கு ஊர்தி 12:00 மணிக்கு வந்திருக்க வேண்டும். அவர்கள் இருவரும் பொறுமையை இழந்து விட்டனர். இவர்கள் அதிகாலையில் வந்திறங்கியது முன் வாசலில். ஆகவே சிலசமயம் அங்கு ஊர்தி வந்திருக்குமோ என்ற சந்தேகம் எழ, நீ இங்கேயே இரு நான் போய்ப் பார்த்துவிட்டு வருகிறேன் என மற்றவருக்குச் சொல்லியவர் கிடுகிடு எனக் கைத்தடியுடன் புறப்பட்டு விட்டார். மறுவாழ்வு அப்பியாசத்துக்கு செல்லும் சலரோகக் காரர் மீது அப்பியாசச் சிகிச்சையாளருக்கு (exercise therapists) கரிசனை அதிகம். முதலில் தந்த துண்டுப் பிரசுரத்திலேயே அவர்கள் எடுக்க வேண்டிய முன் எச்சரிக்கைகள் பற்றிக் குறிப்பிட்டுள்ளார்கள். அப்பியாசம் முடிந்ததும் குருதி வெல்லத்தின் அளவு குறையும் வாய்ப்பு உள்ளது. எனவே ஏதாயினும் நொறுக்குத்தீனி (Snack) கொண்டு வரவும் என்றிருந்தார்கள். எனக்குச் சலரோகம் உள்ளது எனக்கண்டு பிடித்த ஆண்டு 1976, அதற்கு எத்தனை ஆண்டுகளுக்கு முன்னிருந்து அது என்னுடன் நட்புறமையுடன் பிரயாணம் செய்து வந்துள்ளது என்பது யாருக்கும் வெளிச்சமில்லை. இந்த 37 வருடங்களும் அது எனக்கு எந்த விதமான பிரச்சினையும் கொடுத்ததில்லை. நானும் அதனுடன் முரண்டு பிடிக்காமல் ஒரு சாமான்யன் போலவே வாழ்க்கையை நடத்தி வந்துள்ளேன் என்பதை எனது நண்பர் குழாம் யாவரும் ஒரு மனதாகச் சொல்வார்கள். வைபவங்களிலே நான் உணவு உட்கொள்ளும் பாங்கினைப் பார்த்தவர்கள் எவருமே எனக்குச் சலரோகம் உள்ளது என எண்ணமாட்டார்கள். சலரோகக் குளிகைகள் மூன்று நேரமும் உள்ளே செல்கின்றன. ஆனால் இன்னும் ஊசி மூலம் இன்சுலின் ஏற்றும் நிலை வரவில்லை.

அவர்கள் கேட்டதற்கு இணங்க சொக்லற்றுடன் நிலக்கடலை கலந்து செய்யப்பட்ட K பார் இரண்டினை எடுத்துச் சென்றிருந்தேன். அந்த அம்மையார் முற்புறம் சென்ற சமயம் அது நினைவு வர ஒன்றினை எடுத்துச் சுவைக்க ஆரம்பித்த பொழுது அம்மையார் சோர்வுடன் வந்து அங்கேயும் இல்லை என்றவ, என்ன சொக்கலேற் சாப்பிடுகிறீர்களா என்றார். இப்போ அப்பியாசம் செய்தமையால் வெல்லத்தின் மட்டம் குறைந்துள்ளது. ஆகவே சாப்பிடுகிறேன் என ஒரு பொய்யினை உரைத்து விட்டு இதோ நீங்களும் ஒன்றினைச் சாப்பிடுங்களேன் என அவருக்கு நீட்டினேன். நான் சொக்கலேற் சாப்பிடுவதை முற்றாக விட்டு விட்டேன், அதற்குப் பின்னர் ஒரு கதை உள்ளது கேட்கிறீர்களா என்றார். சொல்லுங்கள் என்றேன். எனக்குச் சொக்கலேற் என்றால் அத்தனை மோகம். அதுவும் கனடா வந்த பின்னர் Mars சொக்கலேற்ரைக் கண்டால் விடமாட்டேன். எனது கட்டில் தலைமாட்டில் எப்பொழுதும் அது இருக்கும். ஐந்து வருடங்களுக்கு முன்னர் எனது மைத்துனி இலண்டனிலிருந்து வந்து சில நாட்கள் எங்களுடன் தங்கினார். ஒரு நாள் இருவரும் இரவுச்சாப்பாட்டின் பின்னர் பேசிக் கொண்டிருந்தோம். முடிவில் இருவரும் பல்துலக்கிய பின்னர் படுக்கச் சென்றோம். அன்றைக்கென எனக்கு உறக்கம் கொஞ்சம் மக்கர் பண்ணியது. சிறிது காலார நடந்தால் உறக்கம் வருமே என எண்ணி எழும்புதற்கு இருகைகளையும் தலைமாட்டுப்பக்கமாக நீட்டிய பொழுது பாவி சொக்கலேற்று என் கைகளில் பட்டது. நாக்கில் ஜலம். ஒன்றினை எடுத்துச் சப்பியவாறு நடந்தேன். என் மைத்துனி கெக்கட்டம் இட்டுச்சிரித்தார். பல்துலக்கி ஜேசுவின் நாமம் கூறிப் படுத்த உனக்கு இந்தச் சொக்கலேற் கெடு போகவில்லையா என்றார் ஏளனமாக. எனக்கு ஐந்தும் கெட்டு அறிவும் கெட்டது. உடனடியாக வந்து சொக்கலேற்றினைக் காறித்துப்பி வாய் கொப்பளித்து விட்டு ஜேசுமேல் சத்தியம் செய்தேன். இனிமேல் சொக்கலேற் பக்கம் பார்வையைக் கூடத்திருப்ப மாட்டேன் என்ற வைராக்கியம் இது வரை காப்பாற்றப்பட்டுள்ளது. அது தொடரும். உனக்கும் சலரோகம் உள்ளது என்கிறாய். நீயும் சொக்கலேற்றினை விட்டுவிடுவதாக ஒரு பிரதிக்சனை செய்யலாம் தானே என்றார். அம்மா எங்கள் சமயத்தில் ஒரு பெரும் ஞானி இருந்தார். அவர் பெயர் திருமூலர். அவர் சொல்லியுள்ளார்,

"ஆசை விடுமின் ஆசை விடுமின்
ஈசனோடாயினும் ஆசை விடுமின்"

நான் அதன்படி ஈசனை விட்டுவிட்டேன். அது மிகப் பெரிய விசயம். மற்றதெல்லாம் அற்ப விசயம். நினைத்தால் விட்டு விடலாம். ஏன் நினைக்க வேண்டும். Mark Twain என்ன சொல்கிறார் தெரியுமா. சிக்கரெட் புகைப்பதை விட்டு விடுதல் ஒன்றும் பெரிய கஷ்டமில்லை. நான் எத்தனை தரம் விட்டுள்ளேன் தெரியுமா என்கிறார். அது உன் விசயம். நல்ல உடல் நலத்துடன் இருந்தால் மற்றவர்களுக்கு எத்தனை உதவலாம் பார். இவர் எனது நண்பி. இவருக்கு இந்த வைத்தியசாலையில் சென்ற



**பொன். கனகசபாபதி**
**அதிபர்**

தொடர்ச்சி 38ஆம் பக்கம்

280 நகைச்சுவைத் தொடர்

# ராசம்மா ராச்சியம்

கலகலப்பு நீசன்



தை பிறந்து விட்டது. கால நிலை மாறுகிறது. காலங்கள் மாறும், காட்சிகள் மாறும்.



புனிப்புயலாலும்: மரம் முறிந்து, வீடுடைந்து, இடம் பெயர்ந்து... ஏதோ ஒரு புது வாழ்வு வாழ்வது போல் பிரமையில் இன்று என்ன திகதி என்ன தினம் எனத் தெரியாதளவிற்கு மக்கள் மலைத்துப் போயுள்ளனர்..



உலகர் கதவும் திறக்கமுடியவில்லை, யன்னலும் திறக்க முடியவில்லை பக்கத்தில் கொஞ்ச தமிழ் ஆட்கள் இருந்தாலும் பொங்கலுக்கு வீட்டு வாசல்களில் கோலமில்லை. (பனிப்புயலால் மரங்கள் முறிந்து அலங்..கோலமாயுள்ளது)

உலக்கையெங்கே? முற்றத்தில் மாக்கோலமெங்கே?
பட பட வெடியெங்கே? பயந்து ஊர் விட்டோடும் தெரு..நாய்க..ளெங்கே?
வடை முறுக்கு சுடும் மணமெங்கே ஊரெங்கே.. உறவெங்கே எங்கேளங்கே?....

ஏன் உலகர் மனதில் பதிலில்லா கேள்வி மட்டும் எழுந்தது?
நினைந்து நினைந்து நெஞ்சம் உருகுதே....



படிக்கும் காலங்களில் பசுமைப்புரட்சி, விவசாய விருத்தியென வயல்களில் களை பிடுங்குவதற்கு பாடசாலையிலிருந்து கிளிநொச்சி, பரந்தன், வன்னிப் பகுதிகளுக்கு யாழ்ப்பாணப் பாடசாலை மாணவர்களை பஸ்களில் ஏற்றிச்சென்று சிரமதான மூலம் களை பிடுங்கினர். உலகர் அந்த நாட்களை நினைத்துப் பார்த்தார்.



கடவுளென்னும் முதலாளி கண்டெடுத்த தொழிலாளி விவசாயி...விவசாயி...
நாட்டுக்குப் பொருத்தம்.. நாமே செய்யும் கூட்டுப்பண்ணை விவசாயம்
என்ற பாடல்கள் வீதியெல்லாம் ஒலித்துக் கொண்டிருக்கும்.



உலகண்ணை மன்னாரிலை கனக்க புதைகுழிகள் தோண்டி எலும்புக்கூடுகள் கண்டு பிடிச்சிருக்கினமாம் என செக்கண்ட் புளோர் செல்லம்மா தொடங்க அப்ப கவுண்மென்ரிலை கனபேருக்கு இப்பவே சிவராத்திரி தொடங்கியிருக்கும் என சொல்லியபடி உலகரைப்பாாத்தா ஆட்டிலறி அன்னம்மா.

உலகர் சற்று கண்மூடியபடி அன்றைய சிவராத்திரியை நினைத்துப்பார்த்தார்.



சிவராத்திரி யென்றான்றால் படிக்கும் காலத்தில் இளைஞர்களுக்கு வருவது நித்திரை, விழிப்பால் வரும் பக்தியும் பயனுமல்ல. இரவு 3 நேர விசேட சினிமா. நள்ளிரவு விசேட காட்சி...

அல்லது பஸ் ரெயின் பயணம். திருக்கேதீஸ்வரம் தான் ஆமி நேவி பொலிஸ் செக்கிங் இல்லாத காலம். மன்னார் மாதோட்டம் அடையும் பொழுது ஒரு புத்துணர்ச்சி .....பாலாவியின் கரைமேல்.

நத்தார் படை ஞானன்பசு வேறின் நினைக் கவிழ்வாய்
மத்தம்மத யானைஉரி போர்த்த மணவாளன்
பத்தாகிய தொண்டர் தொழு பாலாவியின் கரைமேல்
செத்தா ரெலும் பணிவான்திரு கேதீச்சரத்தானே.

ஆனால் இன்று மன்னார் மாதோட்ட நன்னகரில் அங்கிங் கெண்ணாதபடி செத்தாரெலும்பெல்லாம் புதைகுழிகளிருந்து தோண்டி எடுக்கப்படுகின்றன. ஐ.நா.விற்கும் அமெரிக்காவுக்கும் ஏற்கனவே கணக்கு விட்டாயிற்று. இல்லை கணக்கு கொடுத்தாயிற்று. இந்த எலும்புக்கூடுகளை எந்தக்கணக்கில் சேர்ப்பது?

ஜனவரி 15....31.



15. பட்டிப்பொங்கல் (மாட்டுப்பொங்கல்)

16. தைப்பூசம்




15. 1799 ல் இலங்கைக்கு அடிமைகள் கொண்டுவருவது முற்றாக தடைசெய்யப்பட்டது.
(ஆனால் தமிழர்கள் அகதிகளாக்கப்படுவது நிற்பாட்டப்படவில்லை)



18. டி.ராமராவ் நினைவுதினம் பிரபல நடிகர் ஆந்திராவில் 3 முறை முதலமைச்சராக இருந்தவர். (1923...1996)

19. சீர்காழி எஸ்.கோவிந்தராஜன் (1933..1988)



20. ராமநாதன் பெண்கள் கல்லூரி ஆரம்பமானது

24. சேர். வின்ஸ்ரன் சேர்ச்சில் நினைவுதினம் (1965)



25. சுன்னாகம் குமாரசாமிப்புலவர் (நினைவுதினம்)

30. மகாத்மா காந்தி நினைவு தினம்

30. அபிராமிப்பட்டர் தினம்

# எனக்குக்...

38ஆம் பக்கத்தொடர்ச்சி

மாதம் அறுவை வைத்தியம் நடைபெற்றது. இன்று மீண்டும் அவர் உடல் நலத்தினைப் பார்வையிட வருமாறும் அதிகாலையில் வந்தால் நல்லது என்றும் சொல்லியிருந்தார்கள். அவரை அழைத்து வருவதற்கு அவரது பிள்ளைகளில் ஒருவராவது லீவு எடுக்க வேண்டும். இவர் சக்கர ஊர்தியை கேட்ட போது அவர்கள் அதிகாலை 4:30 மணிக்கு வருவதாகக் கூறிவிட்டார்கள். அவர் சங்கடப்பட்டார். நான் உதவுவதாகக் கூறினேன். அதற்காகக் காலை 2:30க்கு உறக்கத்தில் இருந்து எழுந்து குளித்து வெளிக்கிட்டு அவரது மாடிக்கட்டிடத்திற்குப் போய் அவருடன் இங்கு வந்தேன். எனது உடல் நிலை நல்லதாக இருந்மையால் என்னால் இதனைச் செய்ய முடிந்தது. இங்கு வந்து இதுவரை ஒரு கோப்பி கூடக்குடிக்க மறுத்துவிட்டார் என தோழி வாக்குமூலம் தந்தார் மற்றவர்.

ஊரிலே தான் உறவு பெரிதாகக் கருதப் பட்டது. எதற்கும் உறவினர்களை அண்டித்தான் வாழ்ந்தோம். இங்கு வந்தபின் அந்தக் concept முற்றாகவே மாறி விட்டது. நட்பே முதன்மை வகிக்கிறது. உறவு இரண்டாம் இடத்திற்குத் தள்ளப்பட்டுவிட்டது. இங்கே வருமட்டும் எனக்கு அவரைத் தெரியாது. அவருக்கு என்னைத் தெரியாது. ஆனால் இப்போ நாம் இருவரும் மனதொத்த நண்பிகள். எனது பிள்ளைகள் இங்கு தான் வாழ்கிறார்கள். ஆனால் நான் அவர்களுடன் இல்லை. தனியே 7வது மாடியில் வாழ்கிறேன். அவர்களுடன் வாழ்ந்து பார்த்தேன். எனது சுதந்திரம் பல விதத்திலும் கட்டுப் பட்டது. அவர்களுக்கேற்ப எனது செயற்பாடுகள் உணவு முதல் உறக்கம் வரை, பொழுது போக்கு முதல் அக்கறை வரை, ஈடுபாடு முதல் செயற்பாடுகள் வரை என அத்தனையிலும் சிறிதாகவோ பெரிதாகவோ மாற்றம் ஏற்படுத்த வேண்டிய நிலைக்குத் தள்ளப் பட்டேன். ஆகவே தனியாக வாழ்கிறேன். தனித்துவம் பேணப் படுகிறது. உறவில் விரிசல் ஏற்பட வாய்ப்பில்லை. நிம்மதி கிடைக்கிறது என்றார்." ஊரும் சதமல்ல உற்றார் சதமல்ல" என்பதை நீ கேட்டதில்லையா? அம்மையார் நல்ல அறிவாளி என்பது புலனாகியது. நீங்கள் எங்கே கல்வி கற்றீர்கள் என்றேன். தமிழகத்தில் ஒரு பெண்கள் கல்லூரியின் பெயரைச் சொல்லி அங்கே பட்டதாரிப் படிப்பினை முடித்தேன் என்றார். அட அந்தக் கல்லூரியில் தானே எனது சகமாணவி பேராசிரியராகக் கடமையாற்றியுள்ளார் என்றேன். ஓ! அவர் தான் எனது பேராசிரியர் என்றார். சிறிது நேரம் அவரைப் பற்றிப் பேசிக் கொண்டிருந்தோம்.

படிப்பு முடித்ததும் என்ன தொழில் செய்தீர்கள். ஆசிரியத் தொழில்தானே. அந்தக் கொடுமையை ஏன் கேட்கிறாய்? எனது அப்பர் கொஞ்சம் பசையுள்ளவர். ஆகவே நான் பட்டப் படிப்பை முடித்துக் கொண்டு வந்ததும் சட்டுப்புட்டென்று கல்யாணத்தையும் முடித்து விட்டார். அவர் ஒன்றும் என்னளவு படிக்கவில்லை என்றாலும் மலையகத்தில் அரசாங்கப் பணியில் இருந்தார். வசிப்பதற்கு அரசாங்கத்தின் செலவில் வசதியான வீடும் இருந்தது. கஷ்டமற்ற சீவியம். நான் விஞ்ஞானப் பட்டதாரி என்றமையால் மிகச் சுலபமாகக் கத்தோலிக்க பாடசாலைகளில் ஆசிரியப் பணி ஆற்றுதற்கு நிறையவே வாய்ப்பும் இருந்தது. ஆனால் இந்த ஆணாதிக்கம் என்னைத் தலை எடுக்கவிடவில்லை. பலமுறை அவரிடம் கெஞ்சினேன். ஆனால் அவரது பிடிவாதம் தளரவேயில்லை. உனக்கு என்ன குறை. நீ ஏன் வேலைக்குப் போய்க் கஷ்டப்படவேண்டும். எனது வருமானம் நம் குடும்பத்தை நடத்துதற்குப் போதுமாக உள்ளது. நீ வீட்டையும், பிள்ளைகளையும், என்னையும் பார். அது போதும் என்றார். வேலை பார்ப்பது வெறும் ஊதியத்திற்காகத் தான் என்ற வறட்டுச் சித்தாந்தம் அவருடையதாக இருந்ததோ அல்லது தனது ஆளுமையினுக்குப் பங்கம் வந்து விடுமோ என்ற பய உணர்வினாலோ அவர் கடைசி வரை என்னைத் தொழில் பார்க்க அனுமதிக்கவில்லை. நான் பெற்ற கல்வி சமூகத்திற்கு உதவாவிட்டால் கற்றதனால் என்ன பயன். அதை அவர் உணரவில்லை. இங்கே நிலமை மாறிவிட்டது. பெண்டாட்டிமாரை வேலைக்குப் போ என விரட்டி வைக்கிறார்கள். இது மனமாற்றத்தின் காரணம் என்கிறாயா? இல்லவேயில்லை. இங்கே ஒத்தவயதினர், யாவருக்கும் இடையே ஒரு போட்டி. காசு சேர்க்க வேணும், டாம்பீகமாக வாழவேண்டும், மற்றவரிலும் நான் நன்றாக வாழ்கிறேன் என்று காட்டவேண்டும். அது மனைவி வேலை செய்தால்தான் சாத்தியமாகிறது. ஆனால் ஆண்கள் அங்கே என்றாலென்ன இங்கே என்றால் என்ன அதே ஆணாதிக்கம், பெண்அடிமை சித்தாந்திகளே என்றார். என்னைச் செருப்பால் அடித்து 50 வருடங்கள் பின்னே தள்ளி கொண்டு போய் நிறுத்தி விட்டார்கள். 50 ஆண்டுகளுக்கு முன்னர் எனக்குக் கல்ல்யாணப் பேச்சு நடந்த போது நான் விதித்த முன் நிபந்தனை இதுவே. எனது மனைவி வேலையை விட்ட பின்னரே என்னைத் திருமணம் செய்தார். வறண்ட முகத்துடன் அவரைப்ப் பார்த்தேன்.

சக்கர ஊர்தி ஒன்று வந்து நின்றது. பெயர்கள் குறிக்கப்பட்ட தாள் ஒன்றுடன் ஓட்டுனர் உள்ளே வந்தார். எமக்கு வண்டி வந்துவிட்டது எனக் கூறியபடி அவர்கள் இருவரும் அவரை நோக்கிச் சென்றனர். உங்களுக்கான வண்டி வருகிறது. இது பொன்னையாவினை ஏற்றுவதற்கென்றார் ஓட்டுனர். சோர்வு நிலவிய முகத்துடன் அவர்கள் திரும்பினார்கள். நான் போய்வருகிறேன் என்று கூறியபடி வண்டியில் ஏறி உட்கார்ந்தேன்.

விளம்பரம் பத்திரிகையை
இணையத் தளத்தில் வாசிப்பதற்கு
www.vlambaram.com /
www.tamilvanakkam.com

# நம்ம ஊர் பொங்கல்



எம்மண்ணில் நம்மவர்கள் ஊரில்
எடுக்கும் பொங்கல் விழா பற்றி
எண்ண எண்ண என் மனம் இனிக்குதே அதை
எடுத்துச் சொல்ல என் மனம் துடிக்குதே
அடிவானில் இருந்து சூரியன் எழுமுன்
அனைவரும் அதிகாலை துயில் விட்டெழுவோம்
அங்கு மனைவாசல் முற்றத்தைப் பெருக்கி
அதை மனையாளனைக் கொண்டு மெழுகிவிடுவோம்

மாக்குருணல் கொண்டு கோலமிட்டு
மாவிலை, வாழை, தோறணமும் கட்டுவோம்
தலைவாழை இலைவிரித்து அதன் மேல்
திருவிளக்கு ஏற்றி வைப்போம்
முடித்தேங்காய் மாவிலை கொண்டு அங்கே
முழுக்கும்பம் ஒன்று வைப்போம் அதன் முன்
பழம் பாக்கு வெற்றிலை விபூதி சந்தனம்
பல இனப் பூக்களும் வைத்திடுவோம்
மண்பானையை கழுவி விபூதிக் குறிவைத்து
மஞ்சள், இஞ்சி, மாவிலை கழுத்தில் கட்டிடுவோம்
பானை நிறைய தண்ணீர் பால் நிரப்பி பின்
மண் அடுப்பு மேல் ஏற்றி வைப்போம்
பானையால் பால் பொங்கிவரும் வரை நாம்
பானை அடியில் பாளை வைத்தெரிப்போம்
பால் பொங்கியதும் பச்சை அரிசியோடு பயறு கலந்து
பானையில் இட்டு எரிப்போம்

பதமாக பொங்கல் பொங்கி வரும்போது
பழவற்றல், கயூ, பசுநெய், சர்க்கரையும் கலப்போம்
நெற்கதிர் விளைய ஒளி கொடுத்துதவிய கதிரவன்
கிழக்கே கதிர்வீசி எழுந்து வருகையிலே
படைபடையாய் பட்டாசு வெடிக்க வைத்து
பதம் செய்த பொங்கல் தனை படையல் செய்வோம்
கதிரவன் கடவுளாய் ஏற்று கீதங்கள் இசைத்து
கற்பூர தீபம் காட்டி துதித்து நிற்போம்
படையல் செய்த பொங்கல் தனை எல்லோருக்கும்
பகிர்ந்து கொடுத்து உண்டு மகிழ்வோம்
பொங்கலோ பொங்கல் என்று சொல்லி
எல்லோரும் மனம் பொங்கி மகிழ்வோம்

- கவிநாதம் - பரந்தாமன்


## பரதநாட்டிய வகுப்புக்கள்



புதிய பரதநாட்டிய வகுப்புக்கள் January 25th, 2014th
அன்று ஆரம்பமாகும்.
ஆசிரியை ஸ்ரீமதி. செல்வானந்தி சுகுமார்
(பரத நாட்டிய கலைமணியும், பரதகலா வித்தகியும்
பரதநாட்டியம் பயிற்றுவதில் மிகவும் அனுபவம் மிக்கவர்)
416.278.5345 / 416.754.9047
AJAX / STOUFFVILLE / SCARBOROUGH / MARKHAM

கண்கள் உங்களுக்கு உலக அழகைக் காட்டுவது போல் பற்கள் உங்கள் அழகை உலகிற்குக் காட்டுகிறது

Markham NS Dental
Care, Comfort, Convenience, Confidence......
Family Dentist / Cosmetic Dentist / Braces / Implant

Free Consultation
MON - SAT 9:00 AM - 8:00 PM
SUN 10:00 AM - 5:00 PM

இனிய தமிழ் புதுவருட தைப்பொங்கல் வாழ்த்துக்கள்
Dr. நளினி சுதர்சன் DDS
Family and Cosmetic Dentistry



New & Emergencies Patients Always Welcome
State-of-the Art Dental Technology!
www.MarkhamNSDental.com
9293 Hwy 48, Suite 4, Markham, ON. L6E 1A3 905-472-4111
Open Seven Days A Week
Like us on facebook
Tips for a Better Smile - Markham NS Dental
www.facebook.com/Markhamdentists

Higher Standards Agents.... Higher results!

Kumar Anandarajah

Sales Representative

Dir: 416.427.2521

E-mail: kumar175@hotmail.com

Listing Commission 1%

HomeLife/Future Realty Inc., Brokerage*

Bus: 905.201.9977 Fax: 905.201.9229

#205 - 7 Eastvale Dr., Markham ON, L3S 4N8

*Independently owned and operated



வீடு வாங்க விற்க

Assist you with defficult Mortgages approval, Home inspection & Lawyer Services Comptitive Ratest / Free

உங்கள் வீட்டை விற்க முன் என்னை அழையுங்கள் இலவச மதிப்பீட்டுக்கு!!!!

printhahomes@gmail.com

printhahomes.com

Cell: 416.836.3091

HomeLife / Future Realty Inc., Brokerage*

205-7 Eastvale Drive

Markham Ont, L3S 4N8

Bus: 905.201.9977

Fax: 905.201.9229

Printhini Nagaratnam

Sales Representative

*Independently owned & operated

$$$ Cash Back $$$

Rewards For Referrals



உங்களுக்கு ஒளிமயமான வீடு எதிர்காலத்தில் அமைந்திட என்னை அழையுங்கள்

SASI CHELVARATNAM

Sales Representative

Direct: 416.725.1125 / 416.858.4828

Bus : 416.321.6969

HomeLife / GTA Realty Inc., Real Estate Brokerage*

5215 Finch Ave. E, #201 Scarborough ON M1S OC2

*Independently Owned & Operated



"Let me help you make the right choice"

Schuren Sriskandarajah B.A

Sales Representative

HomeLife/Future Realty Inc., Brokerage*

7 Eastvale Drive, Markham Ontario L3S 4N8

SCHUREN.CA • 416.333.9393





Low Mortgage Rates

TD Canada Trust

Supen Subramaniyam (Manager, Residential Mortgage)

416-844-8692 1-800-809-9154

supenthiran.subramaniam@td.com

ADVICE WHEREVER WHENEVER

Banking can be this comfortable

கனடாவின் முதன்மை வணிக நிறுவனமான TD Canada Trust வங்கியில் அனுபவ முதிர்ச்சியுடன் அடைமானக் கடன் வசதிகள் பெற்றுக் கொள்வதற்கும் அனைத்து நிதி தேவைகளுக்கான ஆலோசனைகளையும் உதவிகளையும் பெற்றுக் கொள்வதற்கும் அழையுங்கள்

Buying Home Home Equity Line of Credit

Consolitation Existing Debts Refinancing

Switching your mortgage From another financial institute

Free Real Estate Class - Call: 416.321.6969

RealEstate / Mortgage / Commercial Investments

THICKSON & HWY 401



Bedrooms: 4
Washrooms: 3
Price: $449,900

MISSISSAUGA



Bedrooms: 4
Washrooms: 4
Price: $679,900
2700Sq.ft

BRIMLEY & ELLESMERE



Bedrooms: 4
Washrooms: 3
Price: $389,900

WHITBY



Bedrooms: 4
Washrooms: 3
Price: $499,000

TAUNTON & HWY 115



Gas Station, Motel Property
Price: $1.8M

BOWMANVILLE



Bedrooms: 4
Washrooms: 3
Price: $387,400

MORTGAGE ALLIANCE

RE/MAX Dynasty Realty Inc. Real Estate Brokerage



A. Anton Jeeva B.Eng

Hall Of Fame Award Winner

Ranked among the top 1% of all Realtors in the GTA

Dir: 416.575.5055

Remax Dynasty Realty Inc., Brokerage

8 Shadlock St, Unit #7

Markham, ON L3S 3K9

"கனவு உங்களுடையது பொறுப்பு என்னுடையது"

REAL ESTATE List Buy Sell

TOP 5% SALES REPRESENTATIVES IN CANADA

CHAIRMAN'S CLUB AWARD WINNER 2012

HomeLife GTA Realty Inc., Brokerage

Raj Paramasamy Sales Representative

416-587-1619

raj.paramasamy@hotmail.com

Guaranteed Result



விளம்பரம் பத்திரிகையை இணையத் தளத்தில் வாசிப்பதற்கு

www.vlambaram.com www.tamilvanakkam.com

FREE Real Estate

Classes start every week

Call:416.321.6969

CENTUM Optima Mortgages Inc.

Need a Mortgage?

- Residential and Commercial Mortgage
- 2nd Mortgage
- Purchase & Refinance
- Renewal & Switch
- Home Equity loan

Gini Annarasa

Mortgage Broker Lic #M08005550

Cell: 416.830.3241

Email: gini.annarasa@gmail.com

